உ

கணபதி துணை.

லவணபுரம் என்னும்,

உப்பூர்ப்புராணம்.

மூலமும், வசனமும்.

இவை

தஞ்சாவூர், சதாவதானம்,

பிரம்ம-ஸ்ரீ

சுப்பிரமணிய ஐயரவர்களால்

இயற்றப்பெற்றவை.

தேவக்கோட்டை ஜெமீன்தார்

அள-அரு-ராம.

ஸ்ரீமான்

அருணாசலஞ்செட்டியாரவர்கள்

வேண்டுகோளால்

பிரசுரிக்கப்பெற்றன.

தஞ்சை:

பூர்ணசந்திரோதயம் அச்சுக்கூடம்.

படல அட்டவணை.

		பக்கம்.
1.	பாயிரம்	க
2.	நாட்டுப்படலம்	சு
3.	நகரப்படம்	கஉ
4.	நைமிசப்படலம்	உ0
5.	விநாயகர் திருவவதாரப்படலம்	உச
6.	சூரியன் பூசித்தபடலம்	ஙங
7.	வெயிலுகந்தபடலம்	ஙசு
8.	திருமணப்படலம்	சக
9.	கயமுகாசுரப்படலம்	ருஉ
10.	இராமன் பூசித்தபடலம்	ருஅ
11.	வீமராசன் புத்திரப்பேறுபெற்ற படலம்	சுரு
12.	தீர்த்தவிசேடப்படலம்	எக
13.	தலவிசேடப்படலம்	எசு
14.	முனிவர் பூசனைப்படலம்	அஉ

உ

சிவமயம்.

உப்பூர்ப்புராணம்

சிறப்புப் பாயிரம்.

தேவகோட்டை, வெ. ஆ. தி. மா.

சிதம்பரஞ் செட்டியாரவர்கள்

இயற்றிய

எண்சீரடி ஆசிரியவிருத்தம்.

உலகமெலாந் தலதிலக மென்ன வோங்கு
முப்பூரி லிராகவன்போற் றுமாசுதன்ற
னலகில்வட மொழிமேய மான்மியத்தை
யருந்தமிழிற் புராணஞ்செய் தளித்தான் றஞ்சை
யில்சுப்பி ரமணியப்பே ரந்த ணாள
னெவர்முனுநா றவதான மியற்றுவோன்சீர்
பலகிளர்தேவையனருணா சலக்கோ வேண்டப்
பத்தழகு மொத்திலங்கப் பாரின் மன்னே.

தேவகோட்டை,

வீர. ராம. அரு. ராம.

சாமிநாதஞ்செட்டியாரவர்களியற்றிய

விருத்தம்.

செப்பரும் பலவளங்கள் செறிந்தவுப் பூரேரம்ப
னெப்பிலாத் தலத்தின்காதை யொருநூறு மவதானஞ்செய்
சுப்பிர மணியமேலோன் சொற்றனன் றஞ்சைவாணன்
றிப்பியச் செப்புளாலே சேடனும் புகழற்பாற்றே.

தேவகோட்டை,

பள-அ-ராம-சு. வெங்கடாசலஞ்செட்டியாரவர்கள்

இயற்றிய

வெண்பா.

உப்பூர்க் கணபதிதா னுன்னிப் புராணகதை
செப்பு மவதானச் சீர்மறையோன்—சுப்பிர
மண்ணியநா வல்லோன் வகுத்தனன்கா குத்தனெல்லோ
னண்ணிவணங் குந்தலம தாம்.

தேவகோட்டை,

அ. ரு. ச. அருணாசலஞ்செட்டியாரவர்கள்

இயற்றிய

ஆசிரியப்பா.

சீருலாம் பாண்டித் தென்னா டதனிற்
பல்வளஞ் சுரந்த பைங்கட லருகி
லேர்பெறு முப்பூ ரெனப்பெயர் வாய்ந்த
மாநகர்த தோன்றி வதிந்தரு ளிமுதற்
கடவுளாம் வெய்யிலு கந்தவி நாயகன்
றனக்குத் தமிழாற் சாற்றினன் புராணம்
வையக மதனில் வளம்பெறு தேவை
யம்பதி யினையா ளருண சலமால்
விருப்பன் பார்ந்த வேண்டு கோட்படித்
தஞ்சை மாநகர் தன்னி லுதித்தோன்
சதாவ தானந் தகையொடு புரியும்
விப்பிர மரபில் விழுஉத்தக வந்த
சுப்பிர மணியனாந் தூயநா வலனே.

தேவகோட்டையில் உபாத்தியாயர்

திருவாடானை I. கிருஷ்ணய்யரவர்கள்

இயற்றிய

வெண்பா.

பலகலைதேர் சுப்ரமண்யப் பாவலன்சாற் றுப்பூர்த்
தலபுரா ணச்செய்யு டம்முள்—இலகுமொன்றைக்
கற்றிருப்பார் கல்வியறங் காண்பொருளின்பம்வீடும்
உற்றிருப்பா ரென்னினிவேண் டும்.

பரிசோதன பத்திரம்.

பக்கம்.	பாட்டு.	பிழை.	திருத்தம்.
ச	கஅ	யாய	... யாய்
ரு	உகூ	தோந்த	... தோர்ந்த
எ	கஉ	நிரம்பி	... நிரப்பி
கஅ	ருச	புமை	... யுமை
உ0	எ	கொஞ	... கொஞ
உஉ	ககூ	யென்னிய	... யெண்ணிய
உச	க	திறகு	... திற்கு
,,	ங	மாயப்	... மாய்ப்
உரு	எ	தந்தயென்	... தந்தானென்
,,	க0	வரத்தனி	... வருந்தனி
உஅ	ஙங	கொடு	... கொண்டு
உகூ	சக	குழளாள்	... குழலாள்
,,	சஉ	மதங்க	... மாதங்க
ங0	ருக	ரிதனே	... ணிதனே
ஙக	ருஅ	பாய	... பாய்
ஙஉ	சுங	ஞகை	... ஞகி
ஙங	ச	தனள்	... தனன்
,,	சு	றிணில்	... றினில்
ஙரு	உக	மேக	... வேக
ஙசு	உஅ	திகழ்	... திகழக்
ஙஅ	ஙகூ	வைபோ	... வைப்போ
ஙகூ	உ	தலம	... தலம்
,,	,,	தருள	... தருள்
,,	ச	தரசெய்	... தரச்செய்
சஉ	கச	மீந்தாய்	... மீந்த
,,	,,	கண்ணி	... கன்னி
,,	கரு	னரு	... ளரு
சச	ங0	காண்ட	... கண்ட
சரு	ஙச	தனன்	... தான்
சசு	சஉ	மன்னிகொன்	... மன்னியொன்
சஎ	ரு0	வண	... வண்
,,	ருக	கூட்டதமடர்	... கூட்டமடர்
சஅ	ருங	தானுய	... தாருப

பக்கம்	பாட்டு	பிழை		திருத்தம்
,,	ருசு	வாடல்	...	மாடல்
சுக	சுரு	தாஞல்	...	தாரால்
,,	சுசு	கூவிஞன்	...	கூவிஞர்
ரு0	சுஅ	சனகனு	...	சனகரு
,,	எ0	திட்டான்	...	திட்டார்
,,	எக	திட்டான்	...	திட்டார
,,	,,	முடித்தான்	...	முடித்தார்
,,	எஉ	வீர்க்கு	...	ளிர்க்கு
ருக	எரு	வீர்	...	ளிர்
,,	எசு	குரு	...	திரு
,,	எஎ	யெக்கா	...	வெக்கா
ருஉ	ரு	றன்ன	...	றன்னை
ருரு	கக	வகுத்த	...	வருத்த
,,	,,	மன்னை	...	மன்ன
,,	,,	மாதங்க	...	மாகத
,,	கஉ	விடைசென்	...	விடைநீசென்
,,	கரு	வரசு	...	வசுர
,,	கசு	முற்ற	...	முற்றப்
ருசு	கரு	ரணயா	...	ரணம்யா
,,	,,	யென்முன்	...	யென்முள்
,,	கஅ	ஞகியன்ஞனை	...	ஞயன்ஞனை
,,	,,	யாத்திக்	...	வாக்கிக்
ருரு	உசு	டபடி	...	டடி
,,	உசு	பென்	...	பொன்
,,	,,	புகன்றுழன்று	...	புகன்று
,,	உஅ	வோங்கா	...	மோங்கா
ருசு	ருஉ	கள்	...	கண்
,,	ருரு	சூழ்க்	...	சூழக்
ருஎ	ருஎ	போற்கள	...	போர்க்கள
ருஅ	ரு	மென்ன்	...	மென்முன்
சுஎ	கஉ	டுசணை	...	டுணை
எக	க	ராசள்	...	ராசன்
எஉ	ரு	முடிவிவ்	...	முடிவில்
,,	எ	தமம்	...	தம்
எஅ	சுக	கெண்றுறு	...	கெண்ணுறு

சிறப்புப்பாயிரத்தில்

க	உ	செப்புளாலே	...	செய்யுளாலே

உ
கணபதிதுணை.

உப்பூர்ப்புராணத்தில்

வெயிலுகந்தவிநாயகர்,

தோத்திரப்பாட்டுகள்.

விருத்தம்.

கயிலையிற் சித்திரத்தோங் காரத்துள் வந்தாய்போற்றி
செயிர்தவிர் மதம்பெய்யானைத் திருமுகம படைத்தாயபோற்றி
யுயிரதாம் பரமனுக்கு முமைக்குமுன் பிள்ளாய்போற்றி
வெயிலுகந் துப்பூர்மேவும் விநாயகா போற்றிபோற்றி. (க)

சீரியலெத்தேவர்க்குஞ் செப்புமுன்தேவேபோற்றி
பாரினிலெவைக்குமுன்னே பணிபூசைகொளவாய்போற்றி
நீரியல்மதம்பெய்கின்ற நீள்துதிக் கையாய்போற்றி
சூரியன்பூசித்தேத்துஞ் சுயம்புவே போற்றிபோற்றி. (உ)

செய்யதா மரையாளென்றுந் திகழுப்பூ ருறைந்தாய்போற்றி
பையரா வணிபணிந்த பரமனுந்தொழுவோய் போற்றி
துய்யதாம் புனிதக்கங்கை சுடர்மதி யணிந்தாய்போற்றி
வெய்யவன் வெயிலுகந்த விநாயகா போற்றிபோற்றி. (ந)

அங்குச பாசமேந்து மம்புயக் கரததாய்போற்றி
வெங்கய முகனைச் சாய்த்த வெண்கொம்பொன் றுடையாய்போற்றி
பங்கயன் முதலாந்தேவர் பணியுமுன்னவனேபோற்றி
யெங்குல தெய்வமாகு மெழில்வெயிலுகந்தாய்போற்றி (ச)

சித்திபுத்திகளென்றோதுந் தேவிகள் மணாளபோற்றி
பத்தினி கொளவிராமன் பணிபூசை கொண்டாய்போற்றி
புத்திரப் பேறுவீம பூபதிக் கீந்தாய்போற்றி
வித்தக வெயிலுகந்த வேழமே போற்றிபோற்றி. (ரு)

விநாயக தீர்த்தமேன்மை மேவுசூரியதீர்த்தச்சீர்
வினவுசீ தீர்த்தத்தின்மான் மியமூன்றுமுள்ளாய்போற்றி
கனவிலு மறவாதென்றுங் கருதுவார்க் கருள்வாய்போற்றி
யெனதுள்ளத் துறையும்விக்கி நேசனேபோற்றிபோற்றி. (சு)

அத்தனே போற்றிபோற்றி யைங்கரத் தேவேபோற்றி
முத்தனே போற்றியார்க்கு முதல்வனே போற்றிபோற்றி
நத்தியே யுப்பூர்வாழ்க்கை நயந்துவீற்றிருப்பாய்போற்றி
மித்திரன் வெயிலுகந்த விநாயகா போற்றிபோற்றி. (எ)

சீதீர்த்தம்—இலக்குமி தீர்த்தம்.

வேண்டிமுன் தொழுதவர்க்கு விக்கினந் தீர்ப்பாய்போற்றி
வேண்டிமுன் தொழாதாருக்கு விக்கினந் தருவாய்போற்றி
வேண்டியே பாண்டிநாட்டில் மேவுப்பூருறைந்தாய்போற்றி
வேண்டுசூரியன்றனல்ல வெயிலுகந்தவனேபோற்றி. (௮)

அடி வன்பூதத்துரூப மாம் நடு தேவரூபம்
முடி விலங்குரூபமான மூன்றுருக்கொண்டாய்போற்றி
அடிமலரிரண்டின்மேலே யாயிரமலரர்ச்சிப்போர்
மிடியெலாந்தீர்க்குமுப்பூர் வெயிலுகந்தவனேபோற்றி. (௯)

கத்தனேபோற்றிபூத கணபதி மூர்த்தி போற்றி
பத்தர்களுளஞ்சிந்தித்த பாக்கியந் தருவோய்போற்றி
மத்தரிமால்கடைந்த மகோததித்தீரத்துள்ள
வித்தமே லோங்குமுப்பூர் வெயிலுகந்தவனேபோற்றி. (௰)

வித்தம்—பொன்.

உ

சிவமயம்.

லவணபுரம் என்னும்

உப்பூர்

வெயிலுகந்த விநாயகர் புராணம்.

பாயிரம்.

விநாயகர்.

சீர்பூத்த மருமத்துத் திகழ்துளவத தான்றேவர்
 சிறைநைய மீட்பப்
பார்பூத்த வயோத்தியிற்று சரதியென வுதித்திலங்கைப்
 பதிக்கேகுங்கால்
ஆர்பூத்தகடலடைப்பான் விக்கினங்க ளுறுதுமுன
 மரிச்சித் தேத்தும்
நீர்பூத்த வளவுப்பூர் வெயிலுகந்த விநாயகன்ற
 ணினைந்து வாழ்வாம். (க)

பரமசிவன்.
வேறு.

உலகமெலாந் திணையிரண்டி னுருவாயுற்ற
 வுண்மையினுற் றன்மயமே யென்னல்காட்சிக்
கிலகவருட் டிருமேனி கொண்டுதித்த
 விபமுகனை யொருபிள்ளை யென்னப்பெற்று
நிலமிசையத் திரிபுரத்தை வெல்வான்முன்னர்
 நினைந்தவனைப் பூசித்தே யிடையூறின்றி
வலமருவும் பெருமானைக் கரத்தோர்மானை
 வைத்தருளும் பெம்மானை வணங்கி வாழ்வாம். (உ)

பராசத்தி.

சிவநிந்தை புரிதக்கன் மகளாயுற்ற
 தீமையினைப் பாற்றிடுவா னீறளாற்றுந்
தவநின்று மலையரையன் மகளாய்த்தோன்றிச்
 சானவியைச் சிவபெருமான் மணக்குமுன்னம்
நவமல்கத் தனைமணப்ப *முன்பக்கத்து
 நான்கானா டன்முன்பிள்ளையைப் பூசிக்குஞ்
சிவைசெந்தா மரையடிக ளிரண்டுநாளுஞ்
 சிந்தையினுட் கொண்டுசென்னி சேர்த்து வாழ்வாம். (ங)

---

* முன்பக்கத்து நான்காநாள்—விநாயக சதுர்த்தி.

சபாநாயகர்.

வேறு.

உம்பலத்த னுலகத்து வாழ்வுமிழ்
தம்பலத்த தெனுவுமிழ்ந் தார்தமைச்
செம்பலத்தழி யாப்பதஞ் சேர்க்கும்பொன்
னம்பலத்த னடிமலர் போற்றுவாம். (ச)

சிவகாமியம்மை.

வேறு.

மின்றிகழ்வேணிமீது வெண்மதி கங்கையாடத்
தன்றவனியிற்றுமாட றன்னினின்றகிலத்தென்றுந்
துன்றுமைந் தொழிலு நன்னர்த் தோன்றுமாறருட்கண்ணோக்கி
மன்றுளேயிடப்பானின்று மகிழ்சிவையடிகள்போற்றி. (ரு)

தக்ஷிணாமூர்த்தி.

வேறு.

அகரமுத லெழுத்தென்ன வன்றாலின் கீழிருந்து
சகரமுத லெழுத்தி*னபி தானமுனி நால்வருக்கு
நகரமுத லெழுத்தைந்தி னற்பொருளே யெப்பொருட்குஞ்
சிகரமுத லெனக்குறிப்பாற் றெரித்தவர்தாண் மலர்போற்றி. (சா)

வைரவர்.

வேறு.

இருதிணை யுயிர்கள்பம்பு மெவ்வுலகங்களுக்கு
மொருபரமியாமேயென்ன வுளத்தகங் கொள்புன்றேவர்
பெருமித வுடலிற் பாய்ச்சிப் பெருகுநெய்த் தோரேற்பக்கை
மருவுசூல் கபாலமேந்தும் வைரவன் மலர்த்தாள்போற்றி. (எ)

வெய்யிலுகந்த விநாயகர்.

வேறு.

மயிலுகந்த வரன்வரு முன்பரன்
†கயிலுகந்த கனிபெற் றுளமகிழ்ந்
தெயிலுகந்த வெழில்கொளுப் பூரில்வாழ்
வெயிலுகந்த விநாயகன் காப்பதாம். (அ)

சித்திபுத்திகள்.

வேறு.

அத்திமாமுகக் கடவுளுக் கறிவொடு தொழிலா
யொத்துதித்தவர் திருவருட் குறிப்பினி லொழுகி
நித்தியத்தரா யவரிரு மருங்கினு நிற்குஞ்
சித்திபுத்திகள் சேவடி சென்னியிற் சேர்ப்பாம். (கூ)

---

* அபிதானம்—பெயர். † கயில் என்றது—கைபில்.

முருகக்கடவுள்.

தாரகத்துருத் தந்தியைப் பூசித்தோ
ரூரகத்தும யூரம்பெற் றூர்ந்துகோள்
சாரகத்தவெந் தாருகற் சாய்த்தடல்
கூரகத்துவேல் கொள்குகற் போற்றுவாம். (௰)

பெருவயல் வேலவர்.

திருவைமீட்டிறச் சேதுத் தொடக்கத்திற்
றருவையொத்தகைத் தாசரதிக்கருள்
பெருமிதத்துப் பெருவயலுற்றுவாழ்
முருகனற்பத முண்டகம் போற்றுவாம். (கக)

தேவிபட்டண நவக்கிரகம்.

வேறு.

புவிக்கணே சனித்தார்க்கெல்லாம் போக்கருந்தீமைதீரா
நவிற்று தானத்திற் கோள்க ணடிடிற் சார்தனேக்கி
யெவர்க்குமோர்*கழுவாயாக விராகவன்றாபித்தேத்து
நவக்கிரகத்தைப் போற்றி நம்மிடரனைத்துந்தீர்ப்பாம். (கஉ)

திருநந்திதேவர்.

வேறு.

எந்தலோகத்தி யாரையுங் காத்தரு
ளந்திவான்மதி யம்புனை யுஞ்சோமாக்
கந்தன் வாழ்ந்துறை கைலையைக் காக்குஞ்சூர்
நந்திதேவன்ற னற்பதங் காப்பதாம். (கங)

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்.

வேறு.

நீளுல கத்துற்றார்க்கு நீப்பருந்தீமையாற்றுங்
கோளொடு நாளுந்துற்ச குனங்களுங் கொடுவிலங்கு
மாளுடையீசன் றொண்டர்க் கவைநல்ல நல்ல வென்றே
கோளறு பதிகஞ்சாற்றெங் கோன்சம்பந் தன்றாள்போற்றி. (கச)

திருநாவுக்கரசு சுவாமிகள்.

நீண்டவனென்னப்பட்டோ னீண்டநாடுரீஇக்காணாது
நீண்டவன் செய்யகுஞ்சி நீள்கண நாப்பணின்று
தாண்டவம் புரியும்பெம்மான் றாண்மலர்கிட்டப்பாடுந்
தாண்டகவேந்தைப் பாடித் தாண்டுவெம்பிறவிவேலை. (கரு)

---

* கழுவாய்—பிராயச்சித்தம்.

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

அந்தரத்தமரர் காணு வரனடிமுடியை யாரூ
ரெந்திருப்பரவையார்தம் மில்லத்துவாயிற்கீழ்மேல்
முந்துறுபடிகள் காண முன்னர்ச்*சந்தேவாலால
சுந்தரன் பதத்தைப் பெற்றுஞ் சுதந்திரமினியென்பேறே. (கசு)

மாணிக்கவாசக சுவாமிகள்.

நாகைவாய் வாணியாழி நாட்டிய தேவருக்கும்
ஈகைவாயருண்மாதேவே யேற்றமென்றுயர்வேதம்பல்
சாகைவாயுரைத்துந்தேறூர் சான்று காட்சியினிற்றேற
மூகைவாய்க் கொண்டுதேற்று முனிவன்றாளகத்துட் கொள்வாம்.

சண்டேசுரர்.

பசுவின்பாலாகும்பத்தி பதியின்பாலாகு மென்னப்
பசுவின்பால் மணலிலிங்க பதியின்பாலாகப் பெய்து
பசுவின்பா லகாதியாயச்சார் பாசந்தீர் பக்குவத்தப்
பசுவின்பாலருள் சுரக்கும் பதியின்பாலடைந் தாற்றாழ்வாம். ()

அறுபத்துமூவர்.

வேறு.

மூன்றுவேட்கையை முற்றவு மொழித்து வெம்மலமாம்
மூன்றுநீத்துநற் பத்திமை முதிர்ந்துடலாதி
மூன்றுநம்முழு முதலடிக் காக்கறுபத்து
மூன்றுநாயன்மார் முண்டகத் தாண்மலர்போற்றி. (கூ)

கலைமகள்.

வேறு.

மலர்மக ளுவினுள்ளும் வனசவெண்மலரினுள்ளும்
புலமலி பொய்மையில்லாப் புலவர்தம் பாவினுள்ளு
நிலவி வீற்றிருப்பாளந்த நிமலையாங் கலைமாளென்ற
னலமிலாச் சிந்தையுள்ளு நயந்துவீற்றிருப்பதென்னே. (உ0)

தமிழாசிரியர்.

புவனத்தைந் தொழிலும்வல்ல புண்ணிய னுமைமன்றற்க
ணவநத்தக் கையனமுன்னு நாட்டுபல் தேவர்நிற்ப
விவனத்து மொருவனேயிங் கெமையொத்தோனெனச்சுட்டுந்
தவனத்த னியனூல்கற்ற தமிழ்க்கத்தன்றாள்கள்போற்றி. (உக)

வாழ்த்து.

மறைகளா கமங்களோங்க வழிபுரிவேள்விபல்க
நிறையுநீர் மாரிபெய்க நிலமெலாம் விளைவுமல்க
விறையவன் செங்கோல்வெல்க விருநிதிபெருகிப் பொங்க
கறையிலாச் சைவஞ்சூழ்க களித்துலகெல்லாம் வாழ்க. (உஉ)

---

* சந்து—தூது.

நூற்பயன்.

இலகுசீர் நிறையுப்பூரி விரவிமுற்பூசைகொண்டு
விலகலில் வெயிலுகந்த விநாயகன் புராணங்கேட்போர்
பலவிக போகந்துய்த்துப் பல்மகார்களைப்பெற்றிம்பர்
நலமுற நெடுநாள் வாழ்ந்து நற்கதிச்செல்வராவார். (உரு)

அவையடக்கம்.

எக்கவிஞருமிங்கோர்நூ லியற்றிடப் புகுங்கான்முன்னர்
விக்கிநேசனைத் தாம்வேண்ட விக்கின மகற்றிக்காப்பா
னிக்கவிப்புராண*மத்தே வின்பொருட்டென் சொற்குற்ற
விக்கினம் புரிந்தவற்கு மீட்டும்வேலையிடார் கற்ருேர். (உச)

பவமிலா வியாதன்சொற்ற பதினெட்டினுப புராணத்
திவரும் பார்க்கவத்துமுன்னே னிலவணபுர புராணஞ்
சுவையிருமூன்றினுண்முற் சுவையெதுதேவர் தம்முள்
அவமில் முற்றேவனேவ னவைகற்ருேர் முதலாக்கொள்வார். ()

மணமலிகொன்றையோடு மாமுகவெயிலுகந்தான்
மணமிலா மத்தமுங்கொண் மாண்பினைத் தோர்ந்தமேலோர்
மணமலி யவனுப் பூர்ச்சிர் மருவுமான்மியத்திேைடு
மணமிலா வெற்றென்சொல்லும் வரைசெயாதேற்பரன்றே.(உசு)

வேறு.

கயமுகத்திறை கற்றவர் பாவென
நயமிலென் செயு ளுங்கொளே மென்றிடிற்
செயிரில் சென்னியிற் றிங்கட் கதிர்மெய்யில்
வெயிலுகந்ததெற் றென்ன விளுவுவேன். (உஎ)

சிறப்புப்பாயிரம்.

வேறு.

ஏதமில் வெயிலுகந்தா னிலவண புரமென்ருேது
மாதல மான்மியத்தை வடமொழி நின்றெடுத்துத்
தீதில் செந்தமிழிற்றந்தான் றேவருணைவன்றுண்டன்
தூதவனன்பன் றஞ்சைச் சுப்பிரமணிய மாலே. (உஅ)

பாயிரம் - முற்றிற்று.

---

* அத்தே—விநாயகக்கடவுள்.

நாட்டுப்படலம்.

திருமலியுப்பூர்முன்னாச் செப்புநன்மான்மியத்தாற்
பெருகுமாதலங்கள பல்லபிறங்குசீர்ப்பெருமை வாய்ந்து
தருமலிதரும்பல் காக்கள் தண்பணை சூழ்ந்துநாளு
மருவுறும் பாண்டி நாட்டின் வளஞ்சில பகராலுற்றும். (க)

மதிவழிவந்துதித்த வழுதியர்குலத்து மன்னர்
மதிநிகர் குடைக்கீழ்த்தங்கி மன்னியவுயிர்களெல்லா
மதியினிற் றண்மைவாய்ந்த மாணருள்பெறிஇத்தழைப்ப
மதிவளர் கலைநேர் செங்கோல் வளர்ப்பது பாண்டிநாடு. (உ)

திங்களைவேணிதாங்குஞ் சிறப்பினா லுமையையீசன்
திங்களின் குலத்துதிப்பச் செய்துபின் மணந்துகொண்டத்
திங்களை மறைத்து மோலி சென்னியிற்றரித்துச் செங்கோல்
திங்கள்வெண் குடைக்கீழோச்சுஞ் சிறப்பது பாண்டிநாடு. (ங)

விண்ணுலகத்துக்கங்கை மேவியிங்குறைந்தோம் பன்னாள்
புண்ணியமூழ்கி வேண்டார் புலவர் பைங்கூழ்வளர்ப்பப்
பண்ணையுமின்றுசீர்த்திப் பயனிங்கின் றெனவையைப்பே
ரண்ணியிங் குற்றிரண்டு மளிப்பது பாண்டிநாடு. (ச)

மன்னிய வளத்தினாலும் வளர்நிதிப் பெருக்கினாலும்
பன்னிய கல்வியாலும் பல்வகைக் கொடையினாலுந்
தென்னவர் செங்கோலானுந் தேவர் நாட்டிற்குமேலே
யென்னவான் புகழ்பெற்றோங்கு * மிருமைத்தாம் பாண்டிநாடு.

வேறு.

வேழமாமுகத் தெம்பிரான் வெண்மருப்பென்னப்
பாழிவான்முகில் வான்வழிப் படர்ந்துசென் றலைமல்
காழிவாய்நிறை நீரினை யகடுறப்பருகி
வாழியப்பிரான் † கார்க்கட மானமீண்டதுவே. (சு)

மீண்டமைமுகில் விண்ணெலாம் புடைதபடமொய்த்தே
ரீண்டுமுன்னவன் கிம்புரி யென்னவே மின்னி
வேண்டயங்கவ னார்திவெங் குரலென விடித்தவ்
வாண்டகைப்பிரா னருளென மழைபொழிந்ததுவே. (எ)

---

* இருமை—பெருமை. † கார்க்கடம்—கரியமதம்.

ஈசனுமவன் திருவருடோய்ந்திடினெல்லாப்
பாசபந்தமும் பாறுத லெனப்பயோ தரமேல்
வீசுதண்மழை வெள்ளமேற் பரவலும் வெம்மை
மாசுசூர்கொடுங் கோடைபோ யொழிந்ததான்மன்னே. (அ)

மலத்திற்றீர்தரு மான்மகோடிகளென மகிழ்ந்து
புலத்தின் வெப்பொரீஇப புல்வகை யாதிய பொலிந்த
நிலத்தின் பல்கமர் வாயெலா நெருங்கின வெயிலின்
குலத்த கோபமோய்ந்* திந்திரகோபமல்கியவே. (௯)

தந்திமாமுகத் தெம்பிரான் மேனியிற் சடைவா
ழிந்துவின்கலைக் கதிர்பரந் திறங்கியவென்ன
மந்தமாருதச் சந்தனச் செந்தமிழ்வைப்பா
மந்தமாமலை முடியினின்றிழிந்தபல் லருவி. (௰)

அன்னபற்பல வருவிகள் வரைப்பொருளனைத்து
மன்னியொன்றுறீஇச் சாரலின் மருவவவ்வெள்ள
முன்னவன்பதத் தொண்டினர்†முன்னநேர் தெளிவிற்
றென்னவூர்ந்தது தாமிரபன்னியென்றியைந்தே. (௧௧)

முல்லையாகிய கானிடைப் புகுந்து செம்முளரி
மல்லலார்தடப் பழனநீண் மருதத்திற் றவழ்ந்து
புல்லுநெய்தலங் குழிகழி நிரம்பியப் புணரி
நல்லநாயகன் றனைமணம் புணர்ந்தது நயந்தே. (௧௨)

அருமையாந்தவக் குறுமுனி மலயநின்றணுகும்
பொருநையின்பெரு மிதத்தினைப் புகல்பவரெவரே
திருமலிந்துயர் குறிஞ்சிமுன் னாகுமைந்திணையின்
பெருமையிற் சில தெரிந்தவா பேசுதுமினியே. (௧௩)

குறிஞ்சி.

வேறு.

அறுசுவையுணவெறுத்திட் டைம்புலப்பகையொதுக்கி
யறுவகையாதாரத்தி னாறுசென் றுணர்வோர்சூழு
மறுபடைவீடுமுன்னா மநேகமா திரங்கண் மல்கி
யறுமுகப்பெருமானு மமர்ந்து காப்பது குறிஞ்சி. (௧௪)

பொன்னுலகத்துமன்னன் புதல்வியோர் பாங்குறைந்தும்
வின்னவில் குறவர்மாதை விருப்புறீஇப் புனத்துழன்ற
தன்னிளைஞன்மீதன்பு தலைகாட்டக் காட்டுமாவாய்
முன்னவனுதவியாற்று முதன்மைத்தா மெழிற்குறிஞ்சி. (௧௫)

---

* இந்திர்கோபம்—பட்டுப்பூச்சி. † முன்னம்—இருதயம்.

வேறு.

மலையின்மேவிய கார்க்கடம் பொழிகயமாக்க
ளலையுநீள்கையா லருவிநீர் முகந்தயற்பிடியை
யுலவியாட்டுமென் னவையவற் றினையவ்வா றுஞற்று
மிலகுமிச்செயல் கண்டுகற் றியற்றும் *வானிபங்கள். (கசு)

வரையின்மீதுறு வட்டவெண் பளிக்கறை நாப்பண்
தரையெலாஞ்சுழன் றலைந்துவந் தெய்த்திடு தபனன்
புரையிலாதற * வைந்துறுப் புணர்தராப் பொருப்ப
ருரையமாதிதி யின்றுவந் துற்றதென் றுரைப்பர். (கஎ)

(முல்லை.)

நலம்விராவுவை குந்தமேனண்ணிய மாலோ
னுலகெலாம்புரந் திடுதொழில் பொதுவதி னுயர்வோன்
றிலையெனுநினைந் திவணுதித் தெழின்மிகு சிறப்பி
னிலகவோம்பிடு மேற்றமிக்கேய்ந்தது முல்லை. (கஅ)

வேழமாமுகன் வன்னியென் னதுவென வேலோன்
நீழல்வெட்சியென் னதுவென நின்மல னிதழி
சூழுமென்னது வெனமதுசூதனன் வனமே
வாழுமென்னதென் னப்புகழ் வாய்ந்தது முல்லை. (ககூ)

கோதில்கொன்றையங் குழலொலி கோக்களின்கண்ட
மீதுஞாற்றிய கண்டையி னொலிபுனல்மிக்கு
மோதுதண்கலு ழியினொலி மூன்றையுமாயர்
மாதர்தீந்ததி கடையொலி மடக்கிடுமன்றே. (உய)

வல்லிவன்கொடி யாறுமீன் கொடிமுதற்கார
வல்லியங்கொடி தொண்டைகொவ் வைக்கொடி வகையின்
பல்லவாகியகொடி நிறைந் தும்மவை வெள்க
முல்லையங்கொடிப் பெயரினைப் பூண்டது முல்லை. (உக)

மருதம்.

வேறு.

†ககபதியெனப் பறந்து காசினிக் கிடரிழைத்த
நகவரைக்குலங்கள் வீழ்ந்து நைந்திடச்சிறை யறுத்துப்
புகரில்வெங் கதிர்கள் கான்று பொங்குவச் சிரங்கையேந்தி
மகபதி காவல்பூண்டு வளர்ப்பதுமருதவேலி. (உஉ)

---

* ஐந்துறுப்பு—பஞ்சாங்கம்.

* வான் இபம்—தேவலோகத்து யானை. † ககபதி—கருடன்.

கோங்குநற் றுணரியுஞ்சந் துங் குங்குமக்குறடும் பூந்தேன்
தாங்ககிற் றுண்டுந்தேவ தாரமுந் தந்திக்கோடு [ணி
மோங்கொளித் தரளம்பொன்னு *மொகரத்தோகையு மேற்சென்
றாங்கிவந் ததுவிரைந்து தாமிரபன்னிவெள்ளம். (௨௩)

இரைந்துசேர் புதியவெள்ளத் திருமருங்கினும் பல்காலில்
விரைந்துசெல் நீத்தமேரி வியன்குளம் புகுந்து நேரிற்
புரைந்திடும் பண்ணையெல்லாம் புகுந்தது பரனருட்டேன்
வரைந்தநால் வோர்பானின்று மற்றையர் பாற்புக்கென்ன. (௨௪)

புகுந்திடுநீத்தமண்டப் பூம்பழனத்து மள்ளர்
மிகுந்துதீ மதுவங்காந்து விலாப்புடை வீங்கமாந்தி
யுகந்துபல் பறைமுழக்கி யுற்றநீ ளலத்தினூடு
நுகஞ்செறி தாப்பிணித்து நோன்கரும் பகடுபூட்டி. (௨௫)

இடைக்கையின் மேழிபற்றி யியன்றமுட்கோல் வலக்கைத்
தடத்தினிற் பிடித்தேர் தன்னைச் சார்ந்தவோர் சீதைதோன்ற
நடத்திய சனகன்வெள்க நற்பல||சீதை தோன்ற
வுடுத்தசீர்ப் பழனமெல்லா முழுதனர் மள்ளர் மாதோ. (௨௬)

கரியதாஞ் சேறதாகக் கண்டுநேர் பரம்படித்து
விரிவுறச் சமப்படுத்தி விண்ணவர் வேந்தை வாழ்த்தி
யுரியதா நாற்றங்காலி னுழைசெறி தரவிதைத்தா
ரரியமா பயன்பிற்கொள்ள வறஞ்செய்வாரொத்தார் மள்ளர். ()

களமர்கள் பருவ நோக்கிக் காலினீர் பாய்ச்சத்தேக்கி
வளமிகு கழனியுள்ளால் மல்குமவ் வித்தினின்று
பளகிலா நிறத்தவாய பன்முளை முளைத்த தோற்றம்
†முளரிமன் வெயிலுகந்தான் முகப்புகர் போன்றவன்றே. (௨௮)

பசந்துமே லெழுஉவளர்ந்த பல்வகை நாற்றைக்கட்டு
விசைந்துபன் முடிகளாக்கி மேற்றலைச் சுமந்துமள்ளர்
வசம்படு முழத்தியார்தம் மருங்குறீஉக் குரவைகூவ
நசைந்துபல் கழனிதோறு நட்டனர் விருத்திசெய்தார். (௨௯)

உழவர்களருத்துநீருண் டுயர்ந்தெழு பயிர்க்குத் தெவ்வாய்த்
தழைதரு புற்களாதிச் சைவலக் களைகளெல்லாம்
கழைமொழி யுழத்திமார்கள் கட்டனர் வளர்ந்தபைங்கூழ்
புழையுறு கரத்தேவாற்‡றூ பொன்றவிண் பொலிந்ததென்ன. ()

* ஒகரம்—மயில். † முளரிமன்—சூரியன். ‡ தூ—பகை.
|| சீதை—கலப்பைச்சால்.

மதியினீர்க் கதிரினோங்கி வளர்ந்தெழு பயிர்களெல்லாம்
பொதிதரு கருவுட்பற்றப் பொலிபல கதிர்களீன்று
முதிர்மணி முற்றக்கொண்டு மொழியுநாற் குலங்கடம்மிற்
சதியிலாக் கற்பின்மாதர் தலையெனக் குனிந்தமன்னோ. (௩௧)

கண்டநீள் கதிர்கள் முற்றக் களமர்கள் கண்டுகூன்வாள்
கொண்டரிந் தரிகளாக்கிக் குவையதா வரிந்துகட்டி
மண்டுபல் சுமைகளாக்கி மருவியகளத் திற்றத்த
நண்டலைச் சுமந்துவிழ்த்தி நயமுறப் பரப்பியிட்டார். (௩௨)

பகட்டினைப் பிணையலிட்டுப் படிதரத் துவைப்பச்செய்து
தொடுத்திடு மிப்பிநின்று சுடர்முத்த மெடுத்தாலென்ன
மிகுத்த*வை நீத்துச்செந்நெல் வேறுவேறெடுத்துத் தூற்றிப்
பகுத்துள பதடிபோக்கிப் பல்வரை யெனக் குவித்தார். (௩௩)

முகந்துகால் கொண்டளந்து முறைமையின் மன்னர்பாக
முகந்துமுன் னுதவியேனை யோர்க்குநல் குவனநல்கி
மிகுந்துள†விருகிமுற்றும் விழைவொடுமில்லஞ் சேர்த்துப்
புகழ்ந்தவைம் புலத்தா றோம்பிப் பொலிந்துள குடிகளெங்கும்.()

துன்னியமஞ்சளிஞ்சித் தொகுபயன் றொகுப்பார்தாமுங்
கன்னலையாலையாட்டிக் கட்டிகளமைப்பார்தாமு
மன்னியதெங்குபூக மலிபலஞ் சேர்ப்பார்தாமும்
பன்னிய வரம்பைமாவின் பலன்கொள்வார் தாமுமாங்கே. (௩௫)

நெய்தல்.

வேறு.

கருணைவாரிதி கண்ட வுலகுயிர்க்
கொருபெருந்துணை யாகுமுதகமப்
பொருளைநித்தலும் போற்றிறையாகிய
வருண னாளுகை வாய்ந்தது நெய்தலே. (௩௬)

நதிசொள் வார்புன னாடுறும் வேலைவாய்
நிதிகொள் பார நிறைந்த ‡மதலைகள்
பதிகொள் கூம்பசை யாது படர்தரும்
மதிகொள் கல்வி நிறைந்தவர்மானவே. (௩௭)

உப்புமேவுறு மீனமுணக்குவார்
செப்புமற்றவை சேண்விலை விற்பராற்
றுப்பும் வெண்வளை முத்துஞ்சுலபமா
வெய்ப்பில் சில்விலைக் கீவார் பரத்தியர். (௩௮)

---

*வை—வைக்கோல், †விருகி—நெல், ‡மதலை—தோணி.

திணைமயக்கம்.

வேறு.

மலையில்வாழ்கரி முல்லையி னிறுங்கினை மேய்தந்
தலைதுதிக்கையாற் கலுழிநீர் முகந்துவா யருந்து
முலைவில்கா னுறை யானினங் குறிஞ்சிபுக்குலவி
மிலைதினைக்கதிர் மேய்ந்தரு விப்புன லுண்ணும். (ங௬)

முல்லைமேவிய கான்குயின் மொழிகளைச் செவியால்
வல்லையார்தரு மருதநீரோடைவா யன்னம்
நல்லதாமரை மலரிட நயந்துறை வண்டர்
குல்லைவார்மது வுண்டுளப் பெருங்களிகொள்ளும். (சo)

தண்ணடைக்கரு மேதிக ணெய்தலங்கழுநீர்த்
தெண்ணன் னீர்க்கழி புக்குவீழ்ந் தழித்திடுந்திரைவாய்
நண்ணும் வாழ்க்கைய குரண்டங்க ணலங்கனி யரம்பைக்
கண்ணிரம்பிய கனிகளைக் கொத்திவிழ்த் துதிர்க்கும். (சக)

திரையில்வந்திடு சங்கின்வாய் மலைச்செழுந்தேனும்
புரையில்முல்லையி னுனிரை பொழிந்த தீம்பாலுங்
கரைகொள் பண்ணைசூழ் மருதமாங் கனியினற் சாறும்
விரவி வீழ்ந்தினத் தோடினஞ் சேரியல் விளக்கும். (சஉ)

வேறு.

இன்னபல் வளங்கள்பல்கி யிருநிதிக்கற்பநாடும்
பின்னிடச் செய்தென்னாட்டின் பெருவளம் புகல்வார்யாரே
மன்னிய நிதிகளெல்லா மல்கிய வுப்பூரென்னும்
நன்னகரத்தின் சீரு நவிலுதுந் தெரிந்தவாறே. (சங)

ஆ செய்யுள் ஏக.

நாட்டுப்படலம் முற்றிற்று.

நகரப்படலம்.

விண்ணவர் விஞ்சையர் விரும்பிச் சேர்வது
பண்ணவ ரேவரும் பணிந்து சூழ்வது
கண்ணவ சித்தர்க ளுடிமொய்ப்ப பதே
ரொண்ணல மிக்குய ருப்பூர் மாநகர். (க)

வேதனும் விண்டுவி னமிச வேதவி
யாதனும் போதமே லேறு பார்க்கவ
மாதவ னும்புகல் மாபுரா ணங்களி
லோதுசீர் வாய்ந்ததா முப்பூர் மாநகர். (உ)

பிழைதவிர் மலர்கொடு பேணி யேத்துவார்
விழைதரு நாற்பொருள் விருப்பி னீவதா
மிழைமணி சுவணநெல் லிராசி யில்லுக
ளுழைநிறை வளத்ததா முப்பூர் மாநகர் (ங)

சூரனுர் கதிர்களுஞ் சூழ்தண் கதிரென
வேருலாந் தளிர்தழை யியைந் தடர்ந்தலே
நீரக டுறவியன் றெழுந்த நீனிறக்
காரெனச் சூழ்தருங் கடிகொள் சோலையே. (ச)

சாற்றுமக் கருமுகிற்*சபலை யொண்கொடி
போற்றுமிப் பூம்பொழிற் போந்த பூவையர்
மாற்றரும் பெருக்குற வழங்கு தண்மழை
யூற்றிருந் தலரினின் றொழுகு தேன்மழை. (ரு)

இருவகை வேறுபா ரியற்கை யென்றுரை
யருமொழி யினுக்குமா ருய்ப் புகுந்தவர்
திருவொடு கல்வியுஞ் சேர் குறிப்பினி
லிருகிற மரைபொலி யிலஞ்சி பற்பல. (சூ)

உம்பர்கள் பற்பல ருந் தினந தொறும்
பம்புத லுணர்ந்தவர்க் குரிய பன்மலர்
தும்பிக ணறவுணூஉத் துதையப் பெற்றுள
வம்புலா நந்தன வனங்கள் பல்லன. (எ)

யானைக்கூடம்.

பிளிறொலி யிடியினுற் பிறங்கு நெற்றிவே
யொளிமணி குயிற்றிய வோடை மின்னினு
லளியுணு மதமழை யாஞ் சுரப்பினுன்
மிளிர்கரு முகிலினை நிகர்க்கும் வேழமே. (அ)

---

* சபலை—மின்னல்.

துதிக்கையால் விசும்பினிற் றுதை யுடுக்களைக்
கதத்தினால் வாரியேழ் கடலைத் தூர்ப்பன
மிதித்துர லடிகளால் வெற்புருட்டுவ
மதப்பெரு வாரண வாரி பற்பல. (கூ)

குதிரையிலாயம்.

காற்றினைக் கதியினாற் காதும் வன்மைய
மாற்றலர் சென்னிமேல் வைக்குந் தாளின
தோற்றமார் சூரனைச் சுமக்கு மேழ்பரி
யாற்றலு மடக்குவ வசுவக் கூட்டமே (௰)

வேலைவாந் திரைகளை மெல்லப் பற்றியே
மாலையா நிரைபட வைத்தி யாத்தென
மேலைவான் புரவியும் வேட்கு மாக்களைப்
பாலவாக் கட்டு*மந் திரங்கள் பற்பல (கக)

இரதசாலை.

சிகரியால் வானினை முட்டுஞ்சீரின
வகலிடத் தட்டின†லாசை தட்டுவ
புகலுரு ளாழியாற் புடவி பேர்ப்பன
திகழ்தரு கொடிஞ்சிய சிறந்த தேர்களே (கஉ)

மாதலி யூர்தரு மணிகொள் வையமுங்
காதலிற் கண்ணனார் கடவுதேரதும்
ஆதவ னேறிய வவிர் சயந்தமு
மோதியே வணங்குதே ருறையுள் பல்லன. (கங)

பதாதியர்.

நாந்தகங் கேடக நாடுங்கையின
ரேந்துடை வாளின ரிறுக்குங் கச்சினர்
காந்தொளிக் கழலினைக் கழலிற் பூண்டவர்
வீந்திடா வலிகெழு வீரர் பற்பலர். (கச)

வெட்டுவ குத்துவ வில்லி னெய்குவ
கட்டுவ வாதியாங் கவின் படைக்கல
முட்டுத லின்றியே முயன்று கற்றிடு
முட்டிணி வீரர்கல் லூரி யும்பல. (கரு)

ஒட்டகம்.

வேம்பினை விரும்புறிற் கரும்பதாகுமென்
றோம்புறு தொன்மொழி யுண்மை தேர்ந்தபோ
லேம்பலில் கைப்புண வென்று முண்டுமே
லாம்பெரு நோக்கினொட் டகமநேகமே. (௧௬)

---

* மந்திரம்—குதிரை லாயம். † ஆசை—திசை.

கரிகளுக் குரியவாங் கலன்களுந்திறற்
பரிகளுக் குரியவாம் பரும மாதியும்
வரிகழன் வீரர்கை வழங்கு மேதியும்
புரிவினை யாளர்தம் * புரையும் பற்பல. (கஎ)

புடைநகரெனப்பகர் புறநகர்த்திரு
வடையவு மறையவல் லார்க ளேவரே
யுடைதிரை யுததிசூ ழுலகு ரைக்குமே
ரிடைநகர் வளஞ்சில வியம்பு வாமரோ. (கஅ)

இடைநகர்.

வேறு.

மாத ராடவர் மாமகிழ் வெய்தியுட்
போதவின்பப் புணர்ப்பினை நாடியே
மீதிவர்ந்து விளங்க மணிக்கல் வேய்
கோதி லாதசெய் குன்றுக ளோங்குமால். (கசு)

துருத்தி நீள்குழ றாம்பினிற் றண்புன
லருத்தி மிக்குறு மாடவர் மங்கையர்
பொருத்தி வீசிப் புரிந்தன்பி னுடுவா
ருருத்த வேளு மிரதியு மொப்பவே. (உ0)

முத்தினாகிய மொய்யொளிப் பந்தரும்
பத்திமாமணி பாங் குசெய் தெற்றியு
மெய்த்த வெண்பளிக் காக்கிய மேடையுங்
கத்தில் பொன்னரங் கங்களும் பல்லன. (உக)

உந்துமேனிலை மாடத்தி னொண்ணலார்
பந்தடித்திடு சோர்வினைப் பாற்றுவான்
கொந்து கற்பகக் கொம்பரிற் கோத்தணி
யந்தி லூசலி லாடுவ ருந்தியே. (உஉ)

அம்பொன் வேய்ந்த வரமிய மீதுலாம்
வம்பு வார்குழன் மங்கைய ரொண்ணுத
லும்பர் வான்பிறை நோக்கியுட் குற்றுளம்
வெம்பி யோடி விரைஇக்கடல் வீழுமால். (உங)

புதுமணத்த புணர்முலை மாதரார்
கதமிகுத்தவ னூடிக் கரப்பவம்
மதுமொய் கூந்தலார் வாண்முக நோக்கியு
மதியி தென்ன மருள்வரக் கொண்கரே. (உச)

---

* புரை—சாலை.

திங்கள் வெண்சிலை சேர்த்தணி மாடம்வான்
றிங்கள் கண்டுடன் றெண்ணீர் பெருக்கிடுந்
திங்க ளில்லாத் தினத்தந்ந லார்முகத்
திங்கள் கண்டுடன் றீம்புனல் காலுமால். (உரு)

செம்மணிப்பெரு மாளிகை சென்னிமேல்
விம்முவானதி வெண்பிறை மேவுறப்
பொம்மன் மைமுகில் போர்ப்பத் திகழ்ந்துவெம்
மம்மர் மாவுரி பூணரன் மானுமே. (உசா)

மேணிலைப்பெரு மாளிகை மேனலார்
பானலங்கனி பாடல்கை யாழொலி
யானவற்றை யறிந்து பிரித்திடல்
கானவிஞ்சையர் கட்கு மருமையே. (உஎ)

ஏருயர்ந்த் விடைநக ரத்தணி
யாருரைக்கு மடங்கா வியல்பிற்றுஞ்
சேருநற்குடிச் சேர்க்கைகொ ளுண்ணகர்ச்
சீரினிற்சில தேர்ந்தெடுத் தோதுதும். (உஅ)

உண்ணகர்.

வேறு.

அகழி.

மாயனாகிய மீனமுங் *கமடமு மன்னி
மேயமூழ்குபு கலக்கினுங் கலக்கமே மேவா
நாயகழ்ந்திடல் சாகரர் தமக்குமே யரிய
தாயகன்றுநீண் டாழ்ந்துசூழ்ந் ததுபெரு மகழி. (உகூ)

வாளையாம்வலி நாந்தக மாமையாம் வட்டக்
கோளமைந்த கேடகம்பகு வாய்க்கராக் கூர்வா
ணீளும் வார்திரைக் கரங்களிற் கொண்டிக னேரின்
மாளு மாறுபோர் புரிந்திடு மகழியு மன்னே. (௩0)

மதில்.

கரியவார்புன லகழியைப் பெரும்புறக் கடலென்
றுரிமை யெண்ணியே யுலகினை வளைந்துறைந்துள்ள
பெரிய நேமிமால் வரையது வந்துசூழ் பெற்றித்
தரிய வெம்பொறிக் கணம்பொறித்துளவுய †ரகப்பா. (௩க)

* கமடம்—கூர்மம். † அகப்பா—மதில்.

சிங்கம் வன்கரி திறற்புலி பையகட் செவிக
ளங்கி வாயலகைப் பெரும் பூதங்க ளாதி
வெங்கடும் பொறிக் கணங்களே வேறல ரெதிர்ப்பி
னங்கடுந்திற லுடையதா யவிர்தரு மதிலே. (ௗ௨)

பரத்தையர்வீதி.

நகத்தி னின்குறி பற்குறி தட்டுத னயப்பி
னகத் தணைத்திட லாதிய புறக்கரணங்க
ளகத்தி னுங்கரி கரமுத லறைகர ணங்கண்
மிகப்பரத்தையர் மனைச்சுவ ரோவியம் விளக்கும். (ௗௗ)

தங்கண் மெய்யெழி லானணி யாடையாற் றரணி
யெங்கு முள்ளவர் யாரையு மயக்குவாரன்றி
யுங்கெவைக்குந்தா மயங்குறூர் பரத்தையருலகஞ்
சிங்க மால்புரிந் தஃதுறூச் சித்தரோ தேறேம். (ௗ௪)

உற்ற காமுக ருடல்பொரு ளாவியம் மூன்றுந்
தெற்றெனப் பரத்தையர்கையிற் றத்தமுன் செய்து
பெற்ற வன்னவ ரேவுகுற் றேவலும் பெட்பார்
மற்றை யன்னரைக் குருவென மதித்தனர் கொல்லோ. (ௗ௫)

சாரும் வேசையர் கவர்பொரு ளளவுமோர் சங்கம்
ஒரு மன்னர்வா யுரையும்வே ணூற்பிர சங்கம்
தேரு மற்றவர் கந்தரந் திரண்டவெண் சங்கம்
சேரு கொங்கையுஞ் சிற்றிடை யுங்*கல சங்கம். (ௗ௬)

வேளாளர்வீதி.

அங்கண் மாநிலத் துள்ளன வாகிய நதியுட்
டுங்கமாயுயர் கங்கையின் றுேல்குலப் பிறப்போர்
திங்கள் சூடிதன் பூதிசாதனப் பெருஞ் செல்வர்
புங்க மேற்குலத் தோர்பணி புரிவர் வேளாளர். (ௗ௭)

மிக்க தங்கள்வே ளாண்மைபோ லெவற்றினு மேலாய்ப்
பொக்க மில்லதாஞ் சைவநன் னெறியையும் புகுந்த
வொக்க நம்மையுஞ் சிவனடி யாரையு மோம்புந்
தக்க செய்கையிற் றிறம்புறூர் தானியப் பெருக்கார். (ௗ௮)

அன்பி னன்னவர் தம்மிடை வருமடி யவரை
முன்பி னேதுவொன் றுங்குறி யாதுவெண்சூரல்
பொன் பிறங்கிய சூபநெய் கறியொடும் புசிப்பித்
தின்ப மார்ந்துபின் னெஞ்சிய வுண்ணும் வாழ்க்கையரே. (ௗ௯)

---

* கலசம்—கும்பம். கம்—ஆகாயம்.

வைசியர்வீதி.

புயல்பொழிந்திடு புனலெலா நதிகளாய்க் குழுமிக்
கயறிரிந்துகள் கடலிடை வீழ்ந்துறை தரல்போ
லயனிலத்துள பொருளெலாம் வாணிபத்தாற்று
லியல வந்துறப் பெருகுவைசியர்மறு கிலங்கும். (௪௰)

புண்டரீகமும் வேழமுந் தருமதள் புனைதல்
கண்ட மெய்யின னொருவனே யன்றிநீள் கவின்சீர்
மண்டு மிந்நகர் வணிகர்தந் நியமத்தி லாடை
கொண் டணிந்திடா ரெவருளா ருலகினிற் குறிக்கின். (௪௧)

சங்கின் வெண்சுதை தீற்றிமெய் யவிர்தருஞ் சவியாற்
புங்க நூற்பல கலைகளாற் பொலிதருந் தகவாற்
றுங்க வெள்ளிய மெய்க்கலை மானெனத் துலங்கும்
வங்கம் வந்திடு பெரும்பொருள் வணிகர்தம் மனையே. (௪௨)

மின்னி ரத்தினப் பொதிக்குவை மிளிர்வன வொருபாற்
பொன்னி திப்பொதிக் குவைபல பொலிவன வொருபான்
மன்னு நெற்பொதிக் குவைக்கண மலிவுறு வொருபா
லன்ன் றில்லினி லத்தன வணிகர்பேர்க் கியல்பே. (௪௩)

நாட்டு பற்பல தேயத்து நண்ணி மிக்காக்க
மீட்டும் வல்லவராகுமவ் வணிகரே மிளிர்மன்
றூட்ட முற்றருள் பதியற மொடுபசு வறமு
மீட்ட வல்லவ ரன்னவரை யன்றிமற் றியாரே. (௪௪)

பூதி மெய்யினிற் பூசிநற்கண்மணி புனைதந்
தாதியைந் தெழுத் தோதிடு நாவின ராய
கோதில் புண்ணிய விளைவினுற் கோடிமேற் பெருகு
நீதி சானிதி வணிகர்சீர் நிகழ்த்துவ ரெவரே. (௪௫)

அரசர்வீதி.

ஒன்னலாரின்மண் ணாட்டினைக் கொண்டவர்க்குயர்ந்த
பொன்னினாட்டினை தந்திடும் புரவுடையரச
ரென்னவாயினு மிழிந்ததை யேற்றவர்க்கழியா
நன்னரின்பினை நல்குமா தேவனை நிகர்ப்பார். (௪௬)

குறுநிலத்தர சாளுநர் தருந்திறைக் குவையுஞ்
சிறுகட் பேரிடி முழக்குரற் காற்கரித் திரளுந
தறுகண் சிந்துர மாற்றலர் தமமுடித் தொகையுங்
க்றுவு வேற்படைக் காவலர் முன்றிலினிறையும். (௪௭)

அந்தணர்வீதி.

வேத நான்கையு முடிவரை மெய்ம்மையி னுய்ந்து
பூத நாதனும் பரமனே பொருளெனத் தேர்தந்
தோதி யாகத்தின் பதியென வரித்தவி யுதவும்
போத வந்தணர் பொலிதிரு வீதிகள் பலவே. (சஅ)

பல்லவாகிய பசுக்களைப் படுத்து மோர்பதியி
னல்லு லோகத்தை யடைகுவர் நான்மறை விதியாற்
கொல்ல லூனுணல் விலக்கெனக்கூறிய மற்றைச்
சொல்லின் மெய்ப்பொரு ளிற்றெனத் தெளிந்திடு தூயோர். (சகூ)

ஆதிசைவர்.

வேறு.

பொதுவெனப் பட்டவேதம் புகன்றிடு சிறப்பினுய
கதிதரு மாகமங்கள் கற்றுமா தேவன் தானே
பதியெனத் தோர்ந்தான்மார்த்தம் பரார்த்த மென்றிரண்டின் பூசை
விதியினுற் ருதிசைவர் மேதகு மில்லமோர்பால். (ருய)

வேதபாடசாலை.

கிரியை நற்பத்தி மேலாய்க் கிளத்திடு ஞானமென்னும்
பெரிய காண்டங்கண் மூன்றுய்ப் பிரித்துள வேதசாகைக்
குரிய பஞ்சாதியாவு முறுபதங்கிரம மற்றை
யரியதாஞ் சடைகநாந்த மாக்கற்குஞ் சாலையோர்பால். (ருக)

சாத்திரபாடசாலை.

சத்தசாத்திரந் தருக்க சாத்திர முன்மீமாஞ்சை
யுத்தர மாமீமாஞ்சை யுயர்ந்த வேதாந்த நூற்கள்
சத்திநிபாதங் கூறுஞ் சைவ சித்தாந்த நூற்கள்
வித்தியார்த்தியர்கள் கற்கும் வித்தியாசாலை யோர்பால். (ருஉ)

தமிழ்வேதபாடசாலை.

காழிவந்தருள்சம்பந்தர் கனிந்தவாய்க் கனியின்சாறு
மாழிவாய்க்கன்மிதந்தா ரருளிய கருப்பஞ்சாறும்
பாழிசாலாரூர்நம்பி பணித்தருள் சுவைத்தீம்பாலு
மூழிவாசகச்செந்தேனு முவந்துணுஞ் சாலையோர்பால் (ருங)

சைவர்மடங்கள்.

சமயமே விசேடமேமேற் சாற்று நிர்வாணமேயென்
றமைதரு சைவதீக்கை யொருமூன்று மடைந்தகத்திற்
குமையுமைம் பாசம்போக்கிக் குரவனாருளினாலே
யுமையொரு பாகற்காணு முத்தமர் மடங்களோர்பால் (ருச)

குருபூசைமடம்.

செய்யவாரூரர் சாற்றுந் திருத்தொண்டத்தொகைப் புகுந்த
துய்யராமறுபான் மூவர் தொகையடியார்கண் மற்றைத்
தையலார் பாகற்கண்ட சந்தாநாசிரியர்க்கன்னங்
குய்யுறவன்பினூற்றுங் குருபூசை மடங்களோர்பால். (ருரு)

பசுமடம்.

தம்படிவத் தங்கத்திற் சாற்றுமுப்பான் முக்கோடி
யும்பர்கள்வசிக்கப்பெற்ற வுயர்வினாலுலகத்தோர்செய்
நம்புபூசனைதாங்கொண்டு நாதனார்முடி மேலாட்டப்
பம்பியபால்சுரக்கும் பசுக்கள்வாழ் மடங்களோர்பால். (ருசா)

அன்னசத்திரம்.

போதுநேர் வெண்ணிறத்த போனகமுருக்குநேயம்
ஓதுகுய்க் *கருனைசூப முயர்ததியப்பவர்க்கங்
காதலார்பாயசந்தேன் கனியுடன் கண்டாநாதத்
தாதுலர்தம்மைக்கூவி யருத்து சத்திரமோர்பாலாம். (ருஎ)

தண்ணீர்ப்பந்தர்.

சம்பரக்கனிபிழிந்த சாற்றினை யுப்பினோடு
தம்புடைதகக்கலந்த தக்கரம் பானகங்கள்
வம்பியல்†துடித்தூளோடு வாசனைவேர் விராவிப்
பம்பியதண்ணீர் வாக்கும் பந்தர்கள் பொலியும்பல்ல. (ருஅ)

ஆலயம்.

இயன்மணிமாடமோங்கி யிலங்குபல் மறுகினூப்ப
ணயன்மகனுக்கிட்ட வணிகெழு மதாணியின்க
ணயமுறக்குயிற்றியுள்ள நவமணி பல்லவற்றுள்
வியனடுமணியே போலும் வெயிலுகந்தவன் பொற்கோயில். ()

கனகமாமலையினோங்கிக் கதிர்செய்நீள் கோபுரங்க
ளனகமாம் விடைகடாங்கி யவிர்மதில் பொன்விமானம்
வனமிகுகருவிலத்த மண்டப மாமன்றஞ்சூ
ழினமுள தேவர்வைகி யிலங்கு மாலயங்களோங்கும். (சா0)

இத்தகைக்கோயிலுள்ளா லியாவையு முயிர்த்துக்காக்கும்
புத்தமுதின்சொற்சித்தி புத்தியென்றுரைக்கு மாதர்
நத்தியேயிருபான்மேவ நம்வெயிலுகந்தமுன்னோன்
வித்தகத்தொண்டருய்ய வீற்றிருந்தருளுமென்றும். (சாக)

ஆ செய்யுள் (கசுஉ).

நகரப்படலம்-முற்றிற்று.

* கருனை — பொரிக்கறி † துடி — ஏலம்.

நைமிசப்படலம்.

விளங்கொளி மணியொன்பானல் மிளிர்முடிபலமேற்கொண்டு
துளங்கிய லுற்றவூழி தோறுமே லோங்கிக்கற்பம்
வளந்தருகனிகளென்றும் வழங்கிடும் சிறப்பிற்றேவ
ருளங்களிந்தேத்துமாண்பி னுயர்ந்தது கைலைக்குன்றம். (க)

அத்திருமலையின்றென்கீ ழாசையிற் கங்கைக்கங்கில்
நத்தியபிரமன்விட்ட நாணற்புல் லாழிநின்ற
வுத்தமதலமாய்வன்னி யுயர்பலா பலாசநிம்ப
மத்திபிப்பிலாதிகாட்டா யடர்ந்தது நைமிசக்கான். (உ)

அன்னமா வனத்தினுப்ப ணமர்ந்தமா தூய்மைத்தாய
பன்னசா லையினுட்புல்லாற் பரப்பிய வாதனத்திற்
பொன்னிக ரநேககோடி புராணபுண்ணியமே யோர்மெய்
யென்னவீற்றிருக்கு நோன்மை யிலங்குமா சூதன்றன்னை (ங)

மேதகு மெய்மைஞானம் விரவிய சவுநகப்பேர்
மாதவ னுபத்தம்பன் மவுற்கலன் கபிலன்சம்பு
போதசி வற்சனாதிப் புனிதமாதவர் முன்னோர்நா
ளாதரம் பெருகிக்கண்டா ரடிபணிந் திறைஞ்சி நின்று. (ச)

வேறு.

ஆசி லாவனைத்திற்கு முதல்வனாய்
நேச மிக்குறு நின்மல மூர்த்தியாய்ப்
பேச நின்ற பிரணவ ரூபியாய்த்
தேசு லாவத் திகழ்பர னாகியே. (ரு)

நாய கங்கொள்விநாயக மூர்த்தியின்
ஞாய மான்மிய மும்மவ னாடிய
தேய மாம்பல வற்றுட் சிறப்பினை
மேய தோன்றின் வியன்மான் மியங்களும். (சா)

விளக்க மாக விளம்பியெம் முள்ளத்தின்
களக்க மாய்த்துக் கதியுறச் செய்தரு
ளிளக்க மாமைந்தும் வென்றத வேந்திரா
வளக்கொ னாப்புக ழோயென் றறைந்தனர். (எ)

சத்து ணர்ந்தவி யாத தயாநிதிக்
கொத்த மாணவ னாயுயர் சூதனுஞ்
சுத்த ஞானவோங் கார சொரூபமெய்
யத்த னாகும்வி நாயக மூர்த்தியை. (அ)

*முளரி நெஞ்சத்தோர் மூர்த்தப் பொழுதுடல்
குளிர வெண்ணிக் குழைந்து மகிழ்கொடு
புளக மெய்திடப் போற்றி வணங்கிப்பின்
மிளிருந் தன்குரு வாகும் வியாதனே. (கூ)

தன்மனத்தினிற் றுங்கிப்பிற் சால்வருஞ்
சன்ம நாடிலாச் சௌநக ராதியோர்
நன்மு கந்தனை நோக்கி நவையிலீர்
பொன்ம னங்கொளு வீர்யான் புகல்வதே. (ய)

அமுத மாகு மிதுசெவிக் காதலாற்
சமத மத்தொடு கேட்கச சமைகுவீர்
விமல னருள் பெற்று விளங்குவீர்
தமரொ டார்ந்தெனச் சாற்றுதன் மேயினன். (கக)

வேறு.

பங்கயத் தவிசுறை பண்ண வன்றரு
மங்குவலயமினி தமர வாழ்வினின்
மங்கள மாமறை வகுத்தளித்தனன்
பொங்கருள் வியாதனும் புகழிற் பூத்தவன். (கஉ)

அளித்கவே தங்களு மநந்த மாகிமெய்
யொளித்திருக் தலினுல கெளிதி னுய்ந்திடக்
களித்தவை கொண்டமெய்க் கருத்தெ லாங்கொடு
விளைத்தன னெண்புரா ணங்க ளென்னவே. (கங)

இருவகை யாகுமவ் வெழிற்புராணங்க
ளொருவகை முதலதீ ரொன்ப தென்பர்மற்
றொருவகை சார்பது தானு மோதிய
பொருவறு முன்னதைப் போன்றி லங்குமால். (கச)

அவ்விரு கூறதா யமர்புராணத்துள
செவ்விசேர் சார்பெனச் செப்பு மொன்றதி
லெவ்வமீத் தருள்வதா யிலகும் பார்க்கவ
மொவ்விய வதன்றிற முணர்த்தற் பாலதோ. (கரு)

உருகுபே ரன்பினி லுலகெ லாமிசை
பெருகுற வாழுமோர் முனிவன் பீடுசால்
பிருகுவென் றுள்ளவன் பெற்றி நோக்கியே
முருகவிழ் முண்டக மூளைத்த வானவன். (கசு)

* முளரி நெஞ்சம்—இருதய கமலம்.

சுத்தநிற் கொருமொழி சொற்றுங் கேட்டியான்
முத்தரை யும்பெறு முத்திக் கோர்தனி
வித்துள தென்னிடை விழைந்து னுள்ளமாஞ்
செய்த்தலை விதைப்பனஃ தீனுஞ் செம்பயன். (கஎ)

அப்பய னுலுல கனைத்து முய்ந்திடு
மிப்புணி யத்தினு மினிய தேதுள
தொப்பறு மொருவவென் றுரைக்கக் கேட்டவத்
திப்பிய மனத்தினன் செப்ப லுற்றனன். (கஅ)

ஓதிம மூயர்த்தவெம் முடைய தந்தைநீ
நீதியென் றறிந்ததொன் றதனை நேயத்தான்
மேதினி யுய்குவான் மேவி யென்றன்பா
லீதலை யென்னிய தென்பாக் கியமதாம். (ககூ)

ஈத்துவக் குஞ்சுக மிழந்த வேழைய
ரேத்துதற் குரியரோ விதனைத் தேர்ந்தயான்
நேத்திர மெட்டுடை நிமல வாகுவேன்
பாத்திர நீதரும் பாக்கி யம்பெற. (உ0)

நேரினீ வழக்குவ தென்க ணின்றிடி
னூருணி நீர்நிறைந் தற்றன்றே பெருஞ்
சீரணி திருவமற் றியாது செவ்வியோய்
நாரினி தோங்கவே நல்கென் றேத்தினன். (உக)

தேவரே யாயினுஞ் செய்யப் புக்கதோ
ராவலங் காரிய மடைய நன்மையாய்ப்
பூவினில் யாவணைப் போற்று கின்றன
ராவென முதற்கணவ் வரனன் றேபரன். (உஉ)

மறைமுத லந்தத்து மற்றை யெங்கணு
நிறைமுத லுயக மாய்நிலைத்ததே
இறைமுதற் பிரணவ மாமிலங்கத
னுறைமுதல் வடிவினை யுகந்த மூர்த்தியார். (உங)

சார்ந்தவர் சார்பய னனைத்துஞ் சார்வதும்
பேர்ந்தவ ருழல்வதும் பிறங்கக் காண்டுது
மார்ந்தவவ் வதிசய வருள்ப டைத்துள
தேர்ந்தவர் தொழும்விநா யகனன் றேவவன். (உச)

அருவுரு வாயுயிர்த் திரளனைத்தையும்
கருவினுங் காத்தருள் கருணை யோதமாய்
வருவிநா யகப்பெயர் மருவு சோதியே
கருவுறு வார்க்கெலாங் களைகண் காண்டியால். (உ௫)

ஈடெடுப் பற்றவவ் வேக தந்தனைப்
பீடெடுத் தளவுறப் பேசு நான்மறை
யோடெடுத் தவன்முத லும்ப ரரெலாம்
நீடெடுத் தவனையே நிகழ்த்தி வாழ்த்துவார். (உ௬)

அறந்தெரி முனிவரு மமரர் நாதனுந்
திறந்தெரி கலைகளுந் தேட வன்கழல்
பிறந்தவர் பிறப்பறப் பேசி னல்லது
மறந்தவர் வாழ்வது மதிக்கி னில்லையே. (உ௭)

வேறு.

என்றி வண்ணமவ் விறைவ னதியன்மகத் துவமுஞ்
சென்ற வன்குடி கொண்டரு டலங்களின் சீரு
மொன்று மோவற வோதிடுவோமிதை யுகந்தோர்
துன்று மேற்பர போகமுந் றவனருடுய்ப்பார். (உ௮)

பார்க்கவம்மெனப் பகர்புராணத்தைநீ பரிவால்
தீர்க்கமாகவே தெரிந்தவாறுலகுறத் தெரித்தே
யார்க்குமுண்மையின் பத்தைநன் களித்தரு ளினிய
மார்க்க மோர்ந்தவா வெனச்சொலி மறைந்தனன்மலரோன். (உ௯)

தேர்ந்த விப்புரா ணத்துறு தலங்களுட் சீர்த்தி
சார்ந்த தாமிலவணபுர தலமெனுமுப்பூர்
ஆர்ந்த மான்மிய மும்மதி லமர்ந்தரு ளன்பு
சேர்ந்த நல்வெயி லுகந்தவி நாயகன்சீரும். (௩0)

சேதுமாபுராணத்துள மான்மியச் சீருஞ்
சாதுசங்கமச் சார்புசால் சௌனகாதியரே
யாதிநாளில்யா னறிந்தவா றறைகுவல் கேண்மின்
காதலாயெனச் சூதமா முனிவரன் கதைப்பான். (௩௧)

ஆ செய்யுள் (௱௬௩).

நைமிசப்படலம் - முற்றிற்று.

விநாயகர் திருவவதாரப்படலம்.

எஞ்சாத வளங்கள்பல வெளிதினரு ணைமிசத்தி னெழிலீ
தாமா, லஞ்சாய புலன்களைவென் றருந்தவஞ்செய் துயர்சௌந
காதியோரே, யஞ்சான காமேவி யானைவத னந்தாங்கி யகிலத்
திறகுஞ், செஞ்சார்பின் வந்தவிநா யகர்திருத்தோற் றத்தனை
வுஞ்சிறிது சொல்வாம். (க)

ஆதிவிநா யகரரும்புராணமது சிரவணித்த வணியான்மிக்க,
வேதவியா சனுஞ்சோம காந்தனுமுன் வியன்பேற்றை வியக்கப்
பெற்று, ராதலினத் திருப்புராணத்தினிய பிருகுமுனி யறைந்த
வண்ண, மோதரிய முழுமுதலாமவ் விறைவ னுற்பவங் கேட்டுய்
குவீரால். (உ)

முன்னொருகற் பத்திலுயர் பரம்பொருளா யெல்லாமாய்
முதலாயெங்கும், பன்னுநிறை பூரணமாயப் பிரணவமாய்ப் பரந்
துள்ள பரமான் மாவே, நன்னர்மெய நால்வகைத்தோற் றத்தர்கு
மெண்பத்து நான்கிலக்க, மென்னவிரி யோனிபே தத்தேழு
பிறவியினு மிணங்கி நின்று. (ந)

சேர்தருதா பத்திரயந் தினந்தகிக்க வருந்துமுயிர்த் திரள்க
டுன்பந், தீர்தரச்சற் றிளைபபாறத் திகழருளினுற்றன்கண் சேர்த்
தொடுக்கி, நேர்தாமுன் போலவற்றிற் கேற்றதநு கரணபுவி
நெடிய போகஞ், சார்தாத்தந் தார்ந்தவினை தனைநுகர்வித் தக்கன்
மச் சார்பாற் போந்து. (ச)

தொக்கமலத் தொடர்பாய பாசபந்தங் களைத்துடைத்துத்
தூயவின்ப, மிக்கமுத்தி யினிலுய்க்க வேண்டிமீண் டுஞ்சிருட்டி
யாதிமேலாந், தக்கதொழின் மூன்றினையு நடப்பிக்கத் திருவுள
மாய்த் தகைமை சான்ற, வக்கிரதுண் டப்பெயர்வி நாயகனுய்
வரலாயிற் றென்பமன்னே. (ரு)

இக்கருத்தில் வருபரனி ராசததா மதசாத்து விகமென்
ருந்தன், முக்குணத்தி னின்றுமய னரியரனு மூவரையு முளைக்க
வைத்துத், தக்கவுரு வறிவருளச் சமைந்தவன்னோர் தமையிங்ஙன்
றந்தளித்த, மிக்கபரப் பிரமவுரு யாதெனத்தேர் வானுர்வ மேவி
நின்றூர். (சா)

நின்றவிம்மூ வரும்பிரமந் தனைக்காண வெளியெங்கு நேடிப் பார்த்து, மொன்றுநல முறுகிலரா யுளூற்றினர்மா தவமாயி ரம் மாண்டும்பர்க், கென்றுளவாண் டினிலப்போ திசைந்துவந்து காட்சிதந்த தென்றும் யார்க்கும், நன்றிசெய்வக் கிரதுண்ட நாம விநா யகவடிவி னவிலு மூர்த்தி. (எ)

குளிர்ந்தவொளி தனைநிறைவிற் கொடுக்கவல பணிகள்பல கோத்தணிந்து, மிளிர்ந்தநெடுந் துதிக்கரமும் வியப்பின்வளர் வெண்ணிறத்த கோடிரண்டும், அளைந்தமதம் பொழியானை யருண் முகமு மழகியகே டகங்கூர்ங் கத்தி, வளைந்ததனு வயங்கிடும்வே லமர்ந்துபொலி கைத்தலத்தா மரைகள் நான்கும். (அ)

அலர்ந்தவிணை யடித்தலமு மம்மதியா ரங்கடுக்கை யலங்க லார்ந்த, பொலந்தவழு மார்பகமும் புதிபவா னமுதமதாற் புலவர் தம்மை, நலந்தழைக்க வாழ்விக்கு நல்*விதுவிண் மணியங்கி யென்ன நாட்டும், வலந்தவழு நயனங்க ளொருமூன்றுங் கொடு விளங்கும் வடிவத்தோடும். (௯)

சிரத்தையினின் றுளமூவர் திருக்கண்க ளாமெழிற்†குசேச யங்கள், பருத்தகதிர்ப் பானுவினைப் பார்த்தாங்கு விகசித்துப் பரிவு கூர, வரத்தனிப்பூ ரணனும்வக் கிரதுண்ட வெம்பெருமான் வணங்கன் னோர்முன், பிரத்தியக்க மாயினன்காண் பெருத்தபுவ னங்களெலாம் பிறங்க மாதோ. (௧௦)

வேறு.

பார்த்த மூவ ரச்சமும் பரிவு முற்ற திர்ந்துடல்
வேர்த்து ளங்க ரைந்துகம் மிசைக்குவித்த கையராய்ச்
சேர்த்து றப்பொ ரெட்டையுஞ் செழுந்தரைக்கண் வீழ்த்தெழுந்
தார்த்தி சென்ற வாறுநின் றறைந்து போற்ற லாயினர். (௧௧)

ஆடினாரரற்றின ரளக்கொணாத வாரணம்
பாடினார்பழிச்சினர் பரந்த ஞால மெங்கணு
மோடினாருவப்பெனும் முததி யாழ்ந்துறீஇவலம்
மூடிகோத்த மன்பதஞ் சூடினார் முடிக்கரோ. (௧௨)

மட்டு லாவு நின்மரை மலர்ப்ப தம்ப ணிந்தவர்
முட்ட முட்டெ லாமொரீஇ முழுச்சு கந்துய்ப் பார்களா
லிட்ட மாக நாங்களும் மியைந்தடைந்த னஞ்சரண்
தட்டி லாம லெம்மையுந் தழைக்க வாள வேண்டுமால். (௧௩)

---

* விது—சந்திரன். † குசேசயம்—தாமரை.

என்ன வேண்டு வோர்முகம் மிரங்கி நோக்கி யன்பர்காள்
பன்னு நுந்து திக்குநாம் பல்தி றத்து மெச்சினே
மென்னை நுங்க ருத்துநன் கியம்பி நீவிர் யுய்குவீ
ரென்ன முன்ன வன்பணித் திடமகிழ்ந்து கூறுவார். (கச)

தொன்மை யாம்ப ராபரச் சொரூபி யேநின் வாரிசத்
தன்மை யாய தாள்களிற் றளைத்து ளத்தை யென்றுமே
னன்மை யாய பத்தியா நாணிறு விறுக்கியே
வன்மை கூர நிற்குமோர் வரங்கொ டுத்தருள்கவே. (கரு)

செய்ய நின்றன் பணியையுஞ் செய்வ மோதி யருள்செயின்
ஐய நின்ற னுணையை யணிந்து சென்னி யங்ஙனம்
மெய்யி னின்றி யற்றுவோ மேவி யென்றி சைத்தனர்
துய்ய மூர்த்திகேட்டவர்ச் சுட்டி யீது சொல்லுவான். (கசா)

எனது முக்கு ணத்திருந் தெழுந்த ஞான மூர்த்திகாள்
இனிது நீவிர் நம்முறை யெய்ப்பில் பத்தி யெய்திடும்
புனித ராய்விளங்குவீர் புரிய வேண்டும் வினையையும்
மனமுறக்கி ளத்துவல் லென்று வாய்மலர்ந்தனன். (கஎ)

வேறு.

வாய்ந்த ராசத மாவடி வந்தனில்
தோய்ந்தெ ழுந்தபூத் தோன்று லிராசத
மேய்ந்து பல்லுயி ரீந்திடு வாயென
ஆய்ந்த வேதனுக் காஞ்ஞை யளித்துப்பின். (கஅ)

தாம தத்*தனுச் சார்ந்தெழும் விண்டுவாம்
நேமி யானை நியதியி னேக்கிநீ
தோமில் சத்துவத் தொல்வினை பூண்டெலாஞ்
சேம மாரசசெய் வாய்திதி யென்றனன். (கக)

சத்து வாகரந் தாங்கு முருத்திர
வித்த கன்றனை மெய்யன்பி னேக்கிநீ
யொத்துத் தாமத முற்றுச் சங்கார மா
மத்தொழிற் செய லாற்றுக வென்றனன். (உ0)

நற்பு ராண கலைகளை நல்கியக்
கற்பி னின்றெவை யுந்தரக் கஞ்சனுக்
கற்பு தச்சத்தி தன்னை யருள்செய்து
விற்ப னம்பெறு விண்டுவை நோக்கியே. (உக)

* தனு—வடிவம்.

பல்லு ருக்கொடு யாவையும் பாலிக்க
வல்ல னாக்கி வயங்குமே காக்கர
மல்லல் சேருஞ்ச டாக்கர மாண்பினைப்
புல்லி யெங்கும் பொருந்தித்தா னாகியே. (உஉ)

முற்றுஞ் சங்கரிக் கும்முழுச் சத்தியைப்
பெற்ற மூர்பவற் கீந்து பிரிந்தனன்
மற்றம் மூவரும் வாழ்த்தி வணங்கின
ரொற்றைக் கொம்புடை யுத்தமத் தேவையே. (உங)

தக்க தேயுணர் தாபதர் காளிந்த
விக்கி நேச்சுர விண்ணவன் கொண்டசீர்
மிக்க மெய்யவ தார வியப்பெலா
மொக்க வோதுவ மோர்ந்தினி துய்மினே. (உச)

முரச மார்ப்பமுன் மூவுல கங்களும்
பரசு மாற்றல் படைத்திந்தப் பாரெலா
மரசு செய்துவந் தான்கண னென்னுமோர்
வரசு பங்கண் மலிந்தநன் னாமனே. (உரு)

திரம னத்தபி சித்தெனுஞ் செம்மற்குக்
கரம ளித்த குணவதிக் காந்தைபால
பிரம விந்திற் பிறந்தவிவ் வாண்டகை
சிரம மின்றிச் சிறந்து விளங்குநாள். (உசா)

ஐந்த வித்த வருங்கபி லப்பெய
ரந்த ணத்தற வோன்றவ வாற்றலாய்ந்
திந்தி ரன்பணி வாயவற் கின்புறீஇத்
தந்த னன்பொற்சிந் தாமணி யொன்றையே. (உஎ)

வேட்ட மேவிக் கணன்வியன் கான்புகுந்
தீட்ட மாவிலங் கெற்றி யிளைப்பினால்
வாட்ட முற்றொரு வைகல்வந் தான்புகழ்
நீட்டு நற்கபி லன்னில யத்திற்கே. (உஅ)

வந்த வேந்தலை மாமுனி வாழ்த்தியூண்
தந்த னன்றன்சிந் தாமணிச் சார்பினவ்
விந்தை யோர்ந்ததை வேண்டிக் கவர்ந்தந்த
வந்த மன்வழி யிற்படர்ந் தானரோ. (உகூ)

கண்ட னன்கபி லன்கலங் கிக்கருத்
தண்டர் நாயக னுயவி நாயகன்
புண்ட ரீகப்பொற் றுள்பரிவாய் மனங்
கொண்ட னன்புகல் கோதற வேத்தியே. (௩0)

மலர்மி சைச்சென்ற மாதவர் நாயகன்
நிலமி சைக்கபி லன்முன் னினைத்தவா
நலமு றுக்கொடு வந்தென நண்ணிமா
வலமு றத்தஞ்ச வாழ்வருள் செய்தனன். (௩௧)

ஈதுணர்ந்த கணனவ் விருந்தவன்
மீது தீமை விளைக்க மிகுபாரு
சோதி யன்னவ னைத்தொலைத் தம்மணி
நீதி லான்வசஞ் சேர்த்தன னெல்லையே. (௩௨)

அகம லர்ந்துசிந் தாமணி யையவன்
புகல ளித்தபொற் பூரணற் கேதந்து
சுகமு றக்கொடு காக்கத் துதித்தனன்
நிகரி லானுமஃ தேற்று நிவந்தனன். (௩௩)

அன்ன காரணத் தாலப்பி ரானுக்கு
மன்னு சிந்தா மணிவிக்கி நேச்சுர
னென்னு நாம மியைந்திட வேவரும்
பன்னி வாழ்த்திப் பயன்பெற லாயினர். (௩௪)

வேறு.

மற்றொரு காலந் தன்னின் மலர்வரு மவன்கொட் டாவி
யுற்றசிந் தூரன் யாரை யுற்றுத்தான் றழுவி னாலும்
மற்றவ ரிறக்கும் பேற்றை மறையவன் மகிழ்ந்து நல்கப்
பெற்றந்தப் பிரமன் மாட்டே பெயர்ந்தனன் றழுவ மாதோ. ()

கொலவரும் கொடியோற் கஞ்சிக் குலவயன் கொன்றை யான்பாற்
செலவடைக் கலமன் னுனைச் சிதடனீ யமரர் தம்மைப்
பலவகை வருத்திநிற்கும் பரிசினையென்று சேணில்
நிலவச ரீரியொன்று நிகழ்த்துமா லிதனை யம்மா. (௩௬)

வெருவுறுஞ் செயன்மேற் கொண்ட வெளிறுறுங் கொடியோய் கேண்மோ, பருவதேந் திரனேற் றன்பாற் பயந்தபைங் கொடிய கட்டின், உருவளர் சிசுவொன்றுளுன் னுயிர்க்குறு மிறுதி யென்னத், திருவிலான் கேட்டு நக்கான் றிசையெட்டு நடுங்க மாதோ. (௩௭)

எரிகுணத் தசுரன் காற்றி னியலுருக் கொண்டு சென்று
சுரிகுழ லுமைவயின்வாழ் சுந்தரக்குழவியான
கரிமுகத் தெந்தை சென்னி கடிந்துகைக் கொடுதிரும்பி
விரிமுக நருமதைப்பேர் வியனதி வீழ்த்தா னன்றே. (கூவு)

ஆங்கது கணேச குண்ட மாகிநற் சோணை யாற்றைப்
பாங்குட னளிக்கவந்தப் பைம்புன லிடையே ரம்பத்
தேங்கருள் பொழியு மூர்த்தி செனித்தன னசுரன் கண்டு
வீங்குதோள் புடைத்துவந்த ன் விநாயகன் முறுவல் பூத்தான். ()

பற்றினன் கையா லெம்மான் பாதகன் றனைக்கசக்கி
நெற்றியிற் றிலக மாகக் கொண்டன னெடிய வானோர்
சுற்றினர் மலர்க டூவித் தொழுதனர் க்சாநநப்பேர்
பெற்றனன் பெம்மா னெங்கும பேரரு டழைக்க நன்றே. (சo)

நிற்கவீண் டிதுபின் னோர்கா னெடும்புவி புரந்துவந்த
வற்கட கரியூர் கோமான் வரேணியற் கினிய தேவி
யற்கருங் குழளாள் புட்ப கையெனு மபிதா னத்தாள்
நற்கரு வுயிர்த்த போதந் நந்தனன் றனைம றைத்தே. (சக)

சுகத்தனி வாழ்வை நல்குந் தொல்விநா யகன்மதங்க
முகத்திரு வுருவி னோர்கான் முளையென விருந்தான் கண்ட
சகத்தினை யாளும் வேந்தத் தநயனைக் கொடுபோய் வெங்கா
னகத்திடை விடுமாறேவ லாளருக் காஞ்ஞை யிட்டான். (சஉ)

ஏவல ரிளஞ்சேய் தன்னை யெடுத்துக்கான் டகமடைந்தாங்
கேவரும் பரவ வைகு மெழிற்பரா சரன்பால் விட்டா
ராவலி னவனச் சேயை யாதரித்தோம்பு நாளில்
மாவலக் கிரவுஞ் சன்றான் வந்தன னுகு வாகி. (சங)

ஆயிடை யவன்செய் தீதை யவனுறை பெருமா னோர்ந்து
கூயின னவனைக் கொற்றங் குலைத்துவா கனமாக் கொண்டான்
மேயினர் முனிவ ரக்கால் வித்தகத் தேவை யேத்தித்
தாயினு மினியோய் நாயேஞ் சஞ்சல மொழித்தல் வேண்டும். ()

மாமற முருப்பெற் றாங்கு வருகால ரூபி யென்னும்
பாமர வக்கி ரன்விக் கினனெம்பாற் படர்ந்து செய்யும்
தோமினுக் களவின் றேற்கு முரிமையுந் தொலைத்தோ நீயே
மாமறை வழங்கு மேலோன் மகிழ்ந்தெமைப் புரத்தல் வேண்டும்.

என்றவற் பணிந்தா ரெங்கோ னீனனை வலியடக்கி
நன்றருந் தவரைக் காத்து நாமமும் பரிவி னேற்றான்
வென்றியே யளிக்க வல்ல விக்கிந ராச னென்றே
யொன்றிமூ வுலகுமின்ப வுவரியிற் றிளைக்க மன்னோ. (சசு)

இன்னுமவ் விறைவ னாட லினிதெடுத் துரைக்கக் கேண்மின்
பொன்னுல குறைந்து வாழும் புத்தேளி ரிடமி ருந்து
மன்னிய மறைநூல் வெள்வி வருத்தமே புரிந்து வந்தான்
முன்கம லாசு ரப்பேர் முழுமக னொருவ னம்மா. (சஎ)

மல்லால னென்னு நாமம் வாய்ந்தவே ரம்பத் தேவின்
வில்லாருஞ் சிலம்பணிந்த மென்மலர்த் தாளை விண்ணோ
ரெல்லாருஞ் சரண்புக் கேத்தி யிறைஞ்சினர் தமக்கு நேர்ந்த
பொல்லாங்கை யறவொ ழித்துப் புரந்தருள் செய்யு மாறே (சஅ)

அஞ்சன்மி னெனவென் னைய னருளியோர் மகமியற்றி
மஞ்சுறு மயூர மொன்றை வருவித்தஃ திவர்ந்து சென்று
வஞ்சகன் றன்னை மாய்த்து வானவர் தம்மைக் காத்துத்
தஞ்சமா மயூரேசப்பேர் தாங்கின னினிது மாதோ. (சகூ)

இக்கதை யிருக்க வின்னு மியம்புவ லியைந்து கேண்மின்
சக்கர பாணி யென்பான் றருசுதன் சிந்து முன்னா
ளிக்கெனு மொழியா ளுற்கை யென்பவ டனைம ணந்து
தொக்கபல் லவுண ரோடுஞ் சுகமுற வாழ்ந்து வந்தான். (ரு௰)

இன்னவன் றேவ ராதி யிருடியர்க் கிடுக்கண் செய்ய
வன்னவ ரபயம் புக்கா ரைங்கரக் கடவு டன்னை
யுன்னின ரிதனைச் சிந்து வும்பர்நா யகன்மீ தன்றே
தன்னினத் தவரை யேவித் தருக்கினு னெருக்கினானால். (ருக)

அக்கணம் வேள்வி யொன்றி லழைத்தொரு மயிலை யெந்தை
தக்கவா கனமாக் கொண்டு சமர்க்களஞ் சார்ந்து சிந்து
தொக்கதன் சேனை யோடுந் தொலையவைத் தேத்து நல்லோர்
துக்கமுந் துடைத்துக் காத்தான் றொழுதனர் மறைகள் பாடி.

இச்செய லாலு மெம்மா னேற்றனன் மயூரேசப்பேர்
முச்சகம் பழிச்சும் வேத முனிவர்காள் பிறிதோர் காலம்
நச்சுநேர் நெடுங்கணாள் திலோத்தமை நடனந் தன்னை
மெச்சின னவடோ ளின்ப விழைவையுங் கொண்டா னேமன். ()

அன்றவன் விடுத்த வீரியத்தன லாசு ரன்றான்
குன்றெனும் புயங்க ளோடுங் குறுகியே யிமையோர்க் கின்னல்
நன்றிழைத் தமர்ந்தா னல்வி நாயக னிதனை நோக்கிச்
சென்றொரு சிறிய சேயாய்த் தீயனை விழுங்க லானான். (ருச)

விழுங்கின் றனன்சகித்தவ் வெப்பத்தைக் குளிரவைத்துத்
தொழுங்கரத் தினராய்த் தேவர் சூழ்ந்துபூ சனைக ளாற்ற
வொழுங்கினி லவற்றை யேற்றாங் கொண்பால சந்திரப்பேர்
செழுங்கரு ணாகரன்றான் றெரியவே பூண்டான் மன்னோ. (ருரு)

விகுதியென் றுரைப்போன் மேனாள் வேந்தனா யுலக மோம்புந்
தகுதிபெற் றுறைந்து பாக சாதனன் பதவி வேண்டி
மிகுதிரத் துடன் சதத்தொன் றாக்கிய வேள்வி யாய
தொகுதியை முடித்தந் தத்தைத் தொடங்கினன் முடிப்பா னம்மா.

அந்தநற் றருணந் தன்னி லாகண்ட லன்பார்த் தன்னோன்
சிந்தனை தபயாழ் வல்ல நாரத தீரன் றன்னைத்
தந்திர மாகப் போக்கித் தாரபதி யுழைய வன்றன்
சுந்தர மனையை நல்கத் துணிந்துநீ கேட்பா யென்றான் (ருஎ)

சார்ந்தன னறிஞன் வேந்தைத் தருதிதா ரத்தை யென்றான்
றேர்ந்தவன் மறுக்க வேள்வி சிதைத்துநீ செனிப்பாய தீமை
யார்ந்தகண் டகனா யென்ன வளித்தனன் சாபமிக்கோன்
கேர்ந்தவன் றூமரா சநிசாசர னாயினானே. (ருஅ)

அசுரனாய் முனிவர் தேவ ராதியோர் தமைவ ருத்த
யுசிதமா சிவபூ பாலற் குரிமையாஞ் சுமுதை நல்குஞ்
சிசுவினா லொழிவா யாவி யென்றுசே ணின்றும் வந்த
தசரீரி யொன்று தீயோ னறிந்தவர்க் கிடுக்கண் செய்தான். (ருகூ)

முன்னவ னவரைக் காப்பா னசுரனை முடித்து நாமம்
மின்னவிர் தூமகேது விநாயக னென்னப் பெற்றான்
பின்னொரு சமய முப்பு ராதியர்ப் பொருது வெல்வான்
பொன்னிற மேனி நம்பற் கருள்செயப் பரிவு பூண்டு. (சூ0)

விற்பனர் புகழ்க ணேச விநாயக னென்ன வந்தா
னற்புத னிதுவு மன்றிக் கணபதி யாயமைந்து
பொற்புறு தேவர்க் கின்னற் புரிகச முகாசு ரப்பே
ரற்பனைக் கொன்று விண்டு வடைந்ததா பத்தைத் தீர்த்தான். ()

மற்றுமவ் வாதி தேவன் மகோற்கட விறையாய்த் தோன்றிக்
கொற்றந ராந்த கத்தே வாந்தகக் கொடியர் தம்மைச்
செற்றளித் தனன்காண் முத்தி திகழ்காசி ராச னுக்கே
பற்றற நின்றான் பற்றே பற்றிநிற் போரே பின்னர். (௬௨)

மேலவ னமர்ந்து துண்டி விநாயக னாக வெந்திக்
காலுங்கண் டேசதப்பேர்க் கண்டகன் றன்னை வென்று
சீலமில் திவோதா தன்றன் சிந்தையைத் திரித்த ளித்தான்
மூலனும் விசுவ நாத மூர்த்திக்குக் காசி யம்மா. (௬௩)

வல்லபை கணேச னாகி மரீசிமா தவன்பயந்த
வல்லபைத் தலைவி தன்னை மாலுத வியவீ ராறு
மெல்லியர் தமையு மன்றல் மேவிமாற் கியோக ஞான
நல்லதத் துவகணேச கீதையை நயந்தளித்தான். (௬௪)

இப்பெற்றித் தாயிலங்கு மியம்பரு மவதா ரங்க
ளொப்புயர் வில்லா வெம்மா னுகந்தெடுத் திகலா னோரை
யொப்புர வினிலொ ழித்தாங் கொள்ளியோர் தமைபபு ரந்தா
னப்பெரு முதல்வன் சீர்த்தி யறைய யார் வல்லா ரம்மா. (௬௫)

கற்றிவன் மெய்ம்மை கண்ட கண்ணிய சூத யோகி
நற்றவ சௌந காதி ஞானியர்க் கிவையு ரைக்கப்
பெற்றவ ரானு வின்பப் பெருக்கினிற் றிளைத்து வேத
முற்றவுந் தேடிக் காணு முழுமுதற் பொருளையேத்தி. (௬௬)

கள்ளவிழ் மலர்த்தா டங்கள் கருத்தினி லிருத்தி யந்த
வள்ளல்சீர் வாயால் வாழ்த்தி வணங்கினர் மெய்யா லிந்தத்
தள்ளரும் பிறவி நோய்க்குத் தகுமருந் தவனே யென்று
தெள்ளிய சூதன் மேலுஞ் செப்புவான் றொடங்கி னனால். (௬௭)

ஆ செய்யுள் (௨௬௨).

விநாயகர் திருவவதாரப்படலம் - முற்றிற்று.

சூரியன் உபாசித்தபடலம்.

சீரியர் திருவுளந் தேங்குந் தீஞ்சுவை
வாரிய னெங்கரன் வண்மை பேசினும்
நேரிய லவன்கழ னேர்ந்த துன்பறச்
சூரியன் வழிபடுந் தொடர்புஞ் சொல்லுவாம். (௧)

விதிமகன் றக்கன்முன் விளங்குந் தன்மகள்
மதிமுக வுமையினை வழங்கி யீசற்கே
துதிமுகத் துறையுமெச் சுரர்க்குந் தேவனைப்
வதிமழ விடையனை மருக னென்றெணி (௨)

மதிப்பொரு சிறிதும்வை யாதி கழ்ந்துதான்
விதுப்பொடு புரிபெரும் வேள்விக் கேற்றன
னெதுக்கறகாம் விண்டுவே முதல வும்பரை
யதிர்ப்புடன் றலைமைய ராயி ருக்கவே. (௩)

மகபதி யாமரற் கவிவ ழங்கிடா
தகமகிழ்ந் தேனைய வமரர்க் கீந்தனள்
தகைவறு மவர்களுஞ் சார்ந்துட் கொண்டனர்
நிகமுறு சிவனுமந் நீர்மை நோக்கியே. (௪)

சினந்தவன் யாகத்தைச் சிதைக்க வேவினன்
கனந்திகழ் வீரபத் திரனைக் கண்டவன்
மனங்கொதித் தம்மக மாயத்தங் கொண்பலி
முனைந்துணுந் தேவரை முற்றுந் தாக்கினன். (௫)

தாக்குறுந் தேவரு ளிரவி றன்னையே
நோக்கின னுக்கிர னேக்கிக் கொடிற்றிணில்
பாக்கியர் பணிமலர்ப் பதத்துதைத்தனன்
போக்கினன் பற்களைப் புலம்பி யாதவன். (௬)

வந்தவெந் துன்பமு மதிப்பி லர்மையுஞ்
சிந்தனை செய்துயர் சிவபி ரான்பதம்
வந்தனை செய்தனன் வாய்விட் டேத்தினன்
நொந்தனன் றுதிபல நுவல லாயினன். (௭)

தேவர்க ளேவர்க்குஞ் சிறந்த நாயக
யாவர்க்கு நீமகா தேவ னென் றெலா
மேவுறு வேதமா முடிவி ளம்பயா
ஞவலி னோர்ந்தும்மெய் யறிவிழந்தனன். (அ)

ஓதரும் பாதகத் தோங்கு தக்கன்றன்
போதனை யாலென புந்தி மாழ்கினேன்
சீதர ஞதியாந் தேவ ரோடுபோய்க்
காதகன் றருபலி களித்தருந்தினேன். (௯)

அப்பெருந் தப்பினு லழற்கண் வந்தரு
ளொப்பறு மூர்த்தியினுதையிற் பற்கள்போய்ச்
செப்பருந் துயரினைச் சேர வுற்றன
னிப்பொழு தென்றனை யிரங்கி யாளுவாய். (௧0)

அவியருந் தியவப ராதம் போக்கிடா
திவணிருந் திடிற்கதி யெங்ங னெய்துவேன்
குவிமுலை யுமையருங் கொழுந விக்கவல்
தவிர்தருஞ் சூழ்ச்சியைச சாற்று வாயென்றான். (௧௧)

உயர்பரம் பொருளென வோங்கு நம்பன்கு
ரியனிடு முறைக்குள மிரங்கித் தன்வல
நயனமா யவனுள தன்மை நாடியே
சயமுறு வழியினைச் சாற்றன் மேயினான். (௧௨)

கானில வுயிர்க்கிழை கடலை யாற்செப
லானவெம் பவத்தினை யறவொ ழிப்பர்சா
மானிய தேவரத் தேவர் மாட்டிழை
யூனம தென்றனு லொழியுங் கேட்டியால். (௧௩)

என்னுழை நேர்பிழை யீயும் பாவத்தை
மன்னுமிக் குயர்பொரு ளாகி மாதவர்
பன்னெரு பிரணவப் படிவங் தாங்கிய
நன்னர்வி நாயக நாதன் றீர்ப்பனல். (௧௪)

ஆதலி னையநீ யந்த மூர்த்தியைத்
தீதற வழிபடின் றீரு முன்குறை
யோதிநீ யென்றவன் புகலப் போற்றியே
யாதவன் மீண்டுமவ் வரனை வேண்டுவான். (௧௫)

அன்பருக் கருள்செயு மால முண்டவர்
வென்பெருங் குறைகெட வெங்கி ருந்துயான்
மன்பர னுயமா வதன மூர்த்தியை
நன்புற வேத்துவ னவிலு வாயென்றான். (௧௬)

செஞ்சடைக் கடவுளுந் தினக ரன்றனை
யஞ்சலென் றருள்புரிந் தறைகு வானன்ப!
எஞ்சலி லாகில வளமு மின்றமிழ்
விஞ்சுநல் வளங்களு மேவு தென்னாட்டினில். (௧௭)

நாட்டிடு கீழ்க்கட லென்ன நண்ணுசீர்க்
காட்டும கோததிக் கரையிற் சேதுவின்
தேட்டரு மூலமாய்த் தேவி மா*புரக்
கோட்டுமோர் யோசனை யுத்த ரத்திலும். (௧௮)

போற்றுறு காளிமா புரந்த னக்குமண்
சாற்றிரு யோசனை சார்த லத்திலு
மூற்றமார் திருப்புன வாயிற் குற்றதென்
றேற்றதோர் யோசனை யாமி டத்திலும். (௧௯)

மன்னிய தொருவனம் வாய்ந்த நாமமோ
வன்னிமந் தாரமா வனமென் றோதுவா
ருன்னுமா புண்ணிய வுறையு ளாய்த்தவந்
துன்னவாற் றிடப்பரி சுத்த மானதே. (௨௦)

செய்தவம் விரைவினிற் சித்தி யாமவ
ணெய்திநீ யவ்வன மேக தந்தனின்
மொய்திரு மலரடி முன்னித் தீங்கொழிந்
துய்தியென் றுரைத்தன னுமாச மேதனே. (௨௧)

வேறு.

இச்சொலைச்செவி யேற்றதிவாகரன்
நச்ச ராவணி நாயகன் றாளிணை
யுச்சி மீதுகொண் டோகையிற் சென்றனன்
மெச்சித் தென்றிசை மீனவ னாடரோ. (௨௨)

ஆங்கு முன்ன ரறைந்தவெல் லைக்குளார்ந்
தோங்கு நல்வனத் துற்றது மாதித்த
னோங்கு ளஞ்சுசி யெய்தக்கண் டீதன்றோ
பாங்கு றத்தவம் பாலிக்க வல்லதே. (௨௩)

* புரக்கு—புரத்துக்கு

என்று தங்கி யிருந்தும கோததி
யின்ற டத்துவி நாயக வேந்தலை
நன்று பாசிக்க நாட்டியொர் தீர்த்தத்தை
யொன்றிப் பூசை யுஞற்றலுற் றனரோ. (௨௪)

சங்கற் பத்துடன் சார்ந்தும கோததி
பொங்கு தண்புன லாடிப் பொலிந்துபி
னங்குண் டாயதன் றீர்த்தத்து மாடியே
துங்க மானபட் டாடைமெய்ச் சுற்றினான். (௨௫)

உருத்தி ராக்கமு முன்னத பூதியுந்
தரித்து நித்திய சற்கரு மம்முடித்
தருத்தி யாகித்தன் றீர்த்தம தற்குக்கீழ்த்
திருத்த டத்தினின் றெண்டிரை மேற்கரை. (௨௬)

வேறு.

ஆமிடப்பன் னகசாலை யமைத்தொன்றித் தங்கியதிலகமொன் றாகித், தோமறுமூ லாதாரஞ் சுவாதிட்டா னத்துடனே சொலு ம்வி சுத்தி, மாமணிபூ ரகநன்மை மன்னுமநா கதமைந்தின் வழியே சென்று, நேமமதா யதற்குமே னெடும்புருவ மத்தியினி னிலவா நிற்கும். (௨௭)

ஆயிரமா விதழ்முளரி யாகரவாக் கியாசக்க ரத்தி லார்ந்த, நேயபரப் பிரமமதாய் நெடியபிர ணவவடிவாய் நிறைவாய் நேர்வி, நாயகமூர்த் தியையெணவந் நாதனுநீ டுதிக்கைதந்த நவின்ம தங்கூர், காயவிப முகமோத கம்பாசாங் குசந்திகழ் கரநான் கோடும். (௨௮)

தோடகத்தா ளிணையுந்தே சோமயமா மேனியதுந் துலங்கத் தோன்றி, நேடுதயன் முன்னிற்க ஞேயமிகுந் தன்னவனு நிலத்தில் வீழ்ந்து, கூடியசெங் கரங்களுடன் குழைந்துமனம் பணிந் தேத்திக் குறையனைத்தும், மூடிகவா கனத்தேவின் முதிர்கருணை பெருகும்வித முறையிட்டானால். (௨௯)

வேறு.

உயர்ப ரம்பொரு ளாகி யொளிர்ந்திடுந்
தயைநி றைந்தவி நாயக தற்பரா
வயன்ம கன்றக்க னைம்முகத் தேவினை
மயர்வி னுன்மதி யாதொர் மகந்தனை. (௩௦)

புரிய வேனைய புங்கவ ரைக்கொடு
பரிவி னூற்றவப் பண்ணவர் தம்முளே
யொருவ னுயுணர் வின்றியூ னுசையால்
மருவி னேனனந்த மாசின் றிறத்தினல். (௩௧)

வீர பத்திரன் மேவி வெகுண்டெனைத்
தீர வாட்டிச் செகுத்தனன் பற்களை
நேர நொந்தும் புராந்தக னிந்தையா
லாரு மாவப ராத மகன்றிலேன். (௩௨)

ஆத லாலர னுஞ்ஞைப் படியுன்னைக்
காத லாயடைந் தேன்புகல் காத்தெனை
வேத நாயக வாட்கொள வேண்டுமற்
றீத லாலெண்ணம் வேறிலை யென்றனன். (௩௩)

பானு வின்முறைப் பாட்டிற் கிரங்கியெம்
மானு மேயருள் வாய்ந்தவன் றன்னைநீ
ஞான முற்றுநம் மைமுறை யாயிவண்
மான மேவுறப் பூசைசெய் வாயென்முன். (௩௪)

தந்தி மாமுகன் சாற்றிய வாறவன்
சந்த மார்நறுந் தைலம்பஞ் சாமிர்தஞ்
சந்த னம்மது பாறயி ராதியாம்
சுந்த ரப்பொருண் முற்றுந்தொ குத்தரோ. (௩௫)

எந்தை முன்னே னெழிற் றிருமே னிமே
லந்த நற்பொரு ளாலுஞ்ச துர்மறை
மந்தி ரச்சலத் தாலு மகிழ்ந்து தன்
புந்தி நன்கபி டேகம்பு ரிந்தனன். (௩௬)

ஆடை யாபர ணத்தலங் காரஞ்செய்
தேட விழ்ந்தபூச் சூட்டி யெழிற் சந்தம்
பீடு றும்வணம் பூசிப் பிறங்கறு
கோடு வன்னிமத் தார மிவைகொடு. (௩௭)

ஆயி ரங்கதி ராய கரங்களால்
மாயி ரும்புவி வாழ்த்தும்பி ரானுடை
யாயி ரம்பெய ரத்தனை யுஞ்சொலித்
தூய வர்ச்சனை செய்து துலங்கவே. (௩௮)

செப்புந் தூபதீ பாராதனைசெய்து
முப்ப ழுங்கண் முதலிய வற்றொடு
மப்ப வர்க்க மறுசுவை போனக
மொப்பு றப்படைத் தோகைய தாகவே. (௩௯)

எண்ணி ரண்டுப சார மியைந்திட
நண்ணிப் பூசித்து நாவினாற் பன்முறை
பண்ண வன்புகழ் முற்றும் படித்தவன்
தண்ணந் தாளிணை தாழ்ந்து வணங்கினான். (௪0)

கருணை யங்கட லாய கரிமுக
னருணன் பூசைக் ககங்களி கூர்ந்தென்றன்
கிரண மார்வலக் கண்மணி யாய்க்கிளர்
தரணி யேயிது சாற்றிடக் கேளுதி. (௪௧)

இத்த லத்தெனை யிந்தவி திப்படிப்
பத்தி யோடு பரிந்துநீ பூசித்த
வுத்தி யாலது விட்டென்னை நீங்கிற்றுச்
சித்தி கூடிடச் செய்தனன் காண்டியால். (௪௨)

இம்மு றைப்படி யென்றனைப் பூசிப்போர்
மும்மை யாமுல காண்டு முடிவினில்
நம்ம ரும்பத நாடுவ ரெனறனன்
பும்மி வானவர் பாடி யிறைஞ்சினார். (௪௩)

ஆக செய்யுள் ௨௭௩.

சூரியன் உபாசித்த படலம் - முற்றிற்று.

வெயிலுகந்த விநாயகப்படலம்.

குயிலு கந்ததோர் குளிர்வனங் குறுகியேழ் பரியோன்
கயிலு கந்தமோ தகன்கழற் பரவிய கதையீ
தயிலு கந்தகண் சாயைநா யகன்வர மளித்த
வெயிலு கந்தவி நாயகன் மேன்மையும் விரிப்பாம். (௧)

இரவிக் கிவ்வண மேரம்ப னருளலு மின்பப்
பரவை யாழ்ந்தவன் பன்முறை படித்தலம் வீழ்ந்து
பரவி யெங்குலம் பயனுற வந்தருள் பரமே
யொருவ ரம்பெற விழைந்தன னுதவென வுரைப்பான். (௨)

தேவ தேவநீ திருவருள் சுரந்திந்தச் சிறியே
னுவ நீரநின் னரியதோர் தரிசன மதையிக்
காவ கதத்திடைக் காட்டிய வண்ணமெக் காலு
மோவ லற்றுவீற் றிருந்தெமை யோம்பிடல் வேண்டும். (௩)

எனது வெங்கொடும் பாவங்கண் முற்றுமிங் கிரிய
நினது தண்ணரு ணேர்ந்ததா லித்திரு நிலயம்
புனித மார்தரு பாபவி மோசன புரமென்
றனக மாகவே யமர்தர செய்பெருங் கருணை. (௪)

வன்னி யோடுமந் தாரமும் வானுற வளர்ந்து
மன்னி நற்றல விருக்கமா யிருத்தலின் மலிந்து
வன்னி யம்பெறு வன்னிமந் தாரமா வனமென்
றுன்னி யித்தலந் தன்னையே யுரைத்திடல் வேண்டும். (௫)

மற்று மிப்பதி யென்றனற் றரிசிக்கு மாட்சி
பெற்ற தாலெழிற் சூரிய புரியெனும் பேரு
முற்ற மாமகோ ததியெனு முப்புநீ ராழி
நற்ற டங்கரை நண்ணிவீற் றிருத்தலி னாலே. (௬)

உயருப் பூரெனு நாமமு மென்றவ மோங்கி
யியலுஞ் சித்தியை யெய்திடச் செய்தவேற் றத்தால்
சயநன் கீந்திடுந் தவசித்தி கரமெனத் தயங்கு
பெயரு மீதடைந் துலகினிற் பிறங்கிடச் செய்வாய். (௭)

நின்றன் சந்நிதி சேர்மகோ ததியெனு நீர
மின்று தொட்டுவி நாயக தீர்த்தமென் றிலக
நன்று யானபி டேகிக்க நான்றரு தடாக
மென்றுஞ் சூரிய புட்கர ணிப்பெய ரெய்த. (௮)

அருள்பு ரிந்திடல் வேண்டுமென் றஞ்சலி செய்தான்
தெருள ளிக்குநந் தெய்வநா யகனுமவ் வாறே
யிருள்பொ லிந்தமா ஞாலமுய்ந் திடவர மீந்தா
னுருளு மோருருட் டேரவன் பினுமிரந் துரைப்பான். (௯)

என்னை யாண்டவி நாயக மூர்த்தியே யெளியேன்
நின்னம் மேனியை யென்கிர ணங்களாய் நிலவி
மன்னு மாயிரங் கைகளாலுந்தொட மகிழ்ந்து
துன்னி யின்றருச் சித்தது போலவே யுவந்து. (௧௦)

எந்த ஞான்றுமே யென்னது கிரணங்க ளிசைந்துன்
சொந்த மேனியைப் பரிசித்துத் தூயபூ சனையு
கந்தி யற்றவே வைத்தருள் கருணையங் கடைக்கண்
சுந்த ராவெனத் தொழுதனன் பழிதபச் சுடரோன். (௧௧)

விழிகண் மூன்றுடை விக்கிநேச் சுரனெனும் விமலன்
பழிகழன் றநற் பானுவைப் பரிவுறப் பார்த்துன்
மொழிகளின்படி நின்றுமூ வுலகமு மோதங்
கழிகொளத்திரு வருள்செய்வ லென்னவே கதைப்பான். (௧௨)

மனமெய் வாக்கொரு மித்துநீ வழிப்பட்ட பூசை
கனமுறக்களித் தேற்றன னதற்குயர் கரியாய்த்
தினமுன் கிரணங்க ளென்றிரு மேனியைத் தீண்ட
வனக மாயினே யமர்ந்தன னீண்டென வறைந்தான். (௧௩)

அன்ன வாறவ னனலிக்கு நல்கிய வரத்தால்
மின்னு மாவெயி லுகந்தவி நாயக னென்னச்
சொன்ன தெய்வவுப் பூரினி லேவருந் துதிக்க
மன்னி நின்றன னாதவன் வணங்கியே கினனால். (௧௪)

இவ்வி நாயக வெம்பெரு மான்றிரு வருளின்
செவ்வி காண் மினன் னவனருஞ் சீர்த்தியா மின்பப்
பௌவ மூழ்கிய சௌநகா தியபரி ணிதரே
செவ்வை யுண்கெனச் செப்பினன் சூதமா முனிவன். (௧௫)

ஆ செய்யுள் (௨௯௦).

வெயிலுகந்த விநாயகப்படலம்-முற்றிற்று.

திருமணப்படலம்.

நலத்தவோங் கார மாம்வி நாயகப் பெருமா னுப்பூர்த்
தலத்தெழுந் தருளி வாழ்வு தருஞ்சிறப் பிதுவப் பெம்மான்
சலத்துறு முலக நன்மை தனைப்பெற மகிழ்ந்து கொண்ட
பொலத்திரு மணக்கோலத்தின் புதுமையுஞ் சிறிது சொல்வாம்.

முன்னோர்கா ரணத்தை யுன்னி முதல்வனுங் கணேச மூர்த்தி
பன்னுநற் கைலை தன்னிற் பையர வணியெம் மாற்கு
மன்னியோர் மகவாய் வாழ்ந்து வருந்தரு ணத்தத் தேவின்
பொன்னடி பணிவான் போந்தான் புனிதநா ரதனுந் தூயோன் (உ)

வந்தமெய்த் தவத்தோனங்கு வயங்குபொன் மண்டபத்தின்
முந்தொளிர் மணியினுய முதுசிங்கா தனத்தின் மீது
வந்தனை புரிந்த வண்ணம் வானவர் சூழ வைகு
மெந்தையே ரம்பத் தேவை யினிதுகண் குளிரக் கண்டான். (ங)

கண்டவன் கமலத் தாளிற் களித்துவீழ்ந் தன்பி னேத்தித்
தண்டனிட் டெழுந்து வீணை தடவியின் னிசையாந் தேனை
யண்டரும் வியக்க நல்கி யவன்றிருப் புகழைப் பாடிக்
கொண்டவ னருளை யீது கூறுவான் பணிவாய்மாதோ. (ச)

பூரணப் பொருளா யெங்கும் பொலிவுறுங் கருணைத் தேவே
யாரணன் றன்றி யான வகத்துமுன் னுதித்தோ ரான
வேரணி சித்தி புத்தி யெனுமிரு கன்னி மாரைச்
சீரணி யுனக்கு மன்றல் செயமன மிசையலுற்றான். (ரு)

அன்றியு மழகமைந்த மணிதரை யவன்ப டைக்க
வன்றிறன் மூமல நீக்க வல்லநற் கடவுளாய
நின்றிரு வுருவந்தன்னை நினைக்கின்ற னன்னோன் யாரும்
நன்றுபோற் றிடவ ளித்த நங்கைய ரவர்கா ணெந்தாய். (சு)

அக்குல மாதர் தம்பே ரழகினை யளவிட் டோதும்
மிக்கவல் லமையெற் கில்லை வேறெவர் விளம்பற் பாலார்
தக்கவர் நினக்கே யென்று நாரத முனிவன் சாற்றி
யெக்கட வுளர்க்கு மேலா மெம்பிரா னடிபணிந்தான். (எ)

கொன்றையங் தார்கொ ளெம்மான் குமரனுங் கணேசப் பெம்மான்
வென்றிசேர் முனிவன் சொற்கு விழைந்தருள் வழங்க வன்னோன்
நன்றவற் பரவியந்த நங்கைமா ரிருக்குந் தானஞ்
சென்றவர் மகிழ வையஞ் செழிக்கவீ துரைப்பான் வாழ்த்தி. (அ)

புண்ணிய புவியிற் ரேன்றி யறமுதற் பொருள்கள் பூத்து
நண்ணிநன் கிருமைப் பேறு மேவர்க்கு நல்க வல்ல
தண்ணரு ளுடையீர் பைம்பூங் கொடியினிற் றயங்குமென்றன்
கண்ணிய வன்னே மீர்யான் கழறுவ தொன்று கேண்மின். (கூ)

நாதற்கு நாதனும்பி நாயகப் பெருமான் பக்கல்
காதலிற் சென்றேனுங்கள் கவினெலாம் போற்றிச் சொன்னேன்
மாதயை யோடு மும்மை மணந்திட வுள்ளங் கொண்டா
னாதலி னுரியோ னை வப்பரற் குரியோ ராவீர். (கo)

எனப்பகர்ந் திறைஞ்சி வாழ்த்தி யிணங்கவைத் தெண்க ணன்பான்
மனப்பரி வினிற்போய் நேர்ந்த யாவையும் வகுத்து ரைத்தான்
கனப்புகழ் பெற்றே னென்று கமலவா தனன்களித்து
வனப்புறு வங்க வெற்பு வந்தனன் வல்லை மாதோ. (கக)

அவ்வணிசா கரனு தித்த னங்கிபாம் விழிமூன் றேந்தி
நிவரகோ ரம்மீசான நேரில்தற் புருடம் வாம
மிவர்சத்தி யோசாதம்மென் றிலங்குமைம் முகமுங் கொண்டொப்
பெவருமில் லாமலேறு ரெந்தையை வணங்கி நின்ருன். (கஉ)

உமையவள் கொழுநனுன வுபர்பா னவனை நோக்கி
யெமையுவந் திங்கு வந்த வேதுவென் னென்ன வேதன்
கமையுறு தயாபரா வென் காதற்புத் திரியர் வண்மை
யமையிரு வர்க்கு மன்ற லாற்றுவா னிசைந்தேனென்ருன். (கங)

பின்னுமப் பிரம தேவன் பிஞ்ஞகன் றன்னை நோக்கி
நின்னருங் குழவி யாகி நிறைமுழு முதலாய் மாலைப்
பன்னுருத் திரனை யென்னைப் படைத்து முத்தொழிலு மீந்தாய்
தன்னிகர் கணேசற் கென்றன் கண்ணியர்த் தரவிசைந்தேன். ()

திருமக ளுணுஞ் சிரார் சித்திபுத் திகளு மென்போற்
பெருமகிழ் வானர் நின்றன் பேரருள் பெருவா னுற்றேன்
பெருமவென் ருனஃதேற்ற பிறைமுடி யண்ணல் கௌரி
திருமுகந் தயையி னேக்கச் செப்புவா ளன்னுண் மாதோ. (கரு)

பிரமகே ளோங்கா ரற்குப் பிரியமாய் வதுவை யாற்றின்
வருநல மனைவருக்கு மாதலின் மணத்தை நீதான்
விரைவினின் முடிப்பா யென்று விளங்கருள் சுரந் துரைத்தா
னருமறை யவன்வ ணங்கி யரனுமை யடிய கன்ருன். (கசு)

அருள்பொழி கரிமுகத்தெம் மையன்பா லணுகிக் கஞ்சன்
றெருள்பொழி யவன்ம லர்த்தாள் சிரத்தணிந் திறைஞ்சி யீடி
லொருவவெவ் வுலகத்திற்கு மொத்தகா ரணமா யோங்கும்
பொருளெனுங் கணேச நாயேன் புரிந்துசொல் வதுகேட் பாயால்

சகங்களைப் படைக்க முன்பு சாமிநீ யடியே னுக்கென்
னகங்களித் திடவி ரண்டு சத்திக ளளித்தா யந்த
நிகங்கொள் சத்திகளை நீயே ஞேபமாய் வேட்டல் செய்து
சுகங்கொடுத் திடுதல் வேண்டுந் தொல்லுயிர்க் கெல்லா மென்றான்

எதிர்நிகழ் கழிவென் றண்டாங் காலமூன் றிலுமண் ணாதி
வதியுமைம் பூத வைப்பாய் வளருமுக் கார ணத்தும்
பதியுமுள் ளும்பு றம்பும் பரந்தந்தர் யாமியாகி
முதிபநற் பரமான் மாவா யகிலசான் றாமுன் னோனே. (௧௯)

எவிதநீ நடத்திக் காட்டு கின்றனை யவித மேற்றுப்
புவிதவ றுதிபற்று மாகலின் பொருவி லைய
குவிதன முடைய வந்தக் கோதையர் தமைவிலக்கின்
புவிதனிற் சுகமெனும்பேர் பொருந்திடா தொழியு மன்றே. (௨௦)

ஆணொடு பெண்க ளன்பி னகமகிழ்ந் தணைந் தாலன்றிக்
காணநீ யென்றனக்குக் கற்பித்த சிருட்டி யென்னும்
பேணியாண் டருள்வாயென்னப் பெருநிலந் தீகா றண்ணீர்
மாணொளி வெளி யைந்திற்கு மற்றிய மான னானோன். (௨௧)

வேதநீ விழைந்து சொன்ன வேள்விக்கேயாய வெல்லாந்
தீதறச் செய்தியென்று திருவுள மிசையப் போதன்
மாதவர் வணங்குமேன்மை மாயவன் றனையடைந்து
காதலி னிதனைச் செப்பிக் கடிதுதன் னுலகஞ் சேர்ந்தான். (௨௨)

சேர்ந்ததுந் தூதரைக்கூய்த் தேவரை முனிவர் தம்மை
யார்ந்த வேந்தரை மற்றுள்ள வெவ்வரையும் குடும்பத்தோடு
சார்ந் திவண் வரச்செய்வீராற் றனித்திரு மணத்திற் கென்று
தேர்ந்த நான் முகனுரைத்துச் செய்வன செய்ய லுற்றான். (௨௩)

கசமுகத் தெந்தைக் கேற்ற கடிமண மண்டபத்தைக்
குசலமாய்க் கூடுமேலோர் குறைவின்றி வதிதற்கான
வசதியாதிகளை வேத வரன்முறைப் படி யமைக்க
விசுவகன் மாவிற் கன்பாய் விளம்பினன் மலர்வந் தோனே. (௨௪)

கன்னக ரொன்றுண் டாக்கி நாற்புற மதிலெழுப்பி
மின்னவிர் கோபுரங்கள் விளங்கவைத் துட்புறத்தில்
மன்னவர் முனிவர் தேவர் மற்றுளோர் மகிழ்வின் வைகப்
பன்னெடு மாடவீடு படைத்தனன் விசுவகன்மன். (உரு)

வீதிக டமைப் பிரித்தே யிடை யிடை வெகுவி நோத
சோதியார் பளிங்குமாடஞ் சோமகாந் தத்தின் றிண்ணை
யாதிய வரிசையாக்கி யணிமணப் பண்டம் வைக்கும்
தீதிலா வரைகள் சேர்த்துத் திகழ் மலர்த் தடாகமாக்கி. (உசு)

ஓடை கேணிக ளிவற்றை யுரிமையிற் சமைத்துவான
மோடளா வுஞ்சீர்ப்பந்த ருறு குளிர் நிழல்பரப்பி
நாடரும் புழுவர்க்கங்க ணன்கு கொண்டிருக்குஞ்சோலை
நீடிய பன்னசாலை நிறை படவேயுண்டாக்கி. (உஎ)

மலரின மலிந்த நந்த வனங்களா தியவுஞ் செய்து
நிலவுமந் நகரினுப்ப ணெடு மணச் சடங்கியற்ற
நலனுறு மண்ட பத்தை நாட்டினன் விசாலமாகத்
தலைமைசார் விசுவ கன்மத் தனிப்பெயர்ச் செம்மலுனே. (உஅ)

மற்றுமம் மண்டபத்தின் மத்தியின் மணியிழைக்கப்
பெற்ற சிங்காசனத்தைப் பிறங்குமாறமைத்து மாயோன்
நற்றவர் முதலோர்யாரு நயந்து சூழ்ந் திருக்க வேண்டிப்
பொற்றவி சிட்டு வைத்தான் புங்கவர் புகழ மாதோ. (உகூ)

விதவிதப் பட்டாற் சோடித் திருக்கின்ற விதான மீதும்
கதிர்கொள் பொன் மயமாய் முற்றுங் காண்ட மண்ட பத்தின்
புதுமையார் புட்பமாலை புகழ்தரு முத்து மாலை [மேலும்
யதிசய மாகச் சூட்டி யலங்கரித்தனன்னுனே. (ஙo)

இத்தன்மை யலங்காரங்க ளியாவையு மினிதிணற்றிச்
சித்திரப் பதுமை யோடு செல்வப் பொற் பாவை மற்று
முத்தம நிலைக்கண்ணுடி யாதிய வுலக மெச்ச
வைத்துயர் தூண்கடோறும் வளஞ்செயும் வனப்புஞ் செய்தான்.

சொன்ன விவ்விதங்களன்றித் தொன்மையா மோமகுண்டம்
மன்னிப விசாலம் பெற்று வனப்புறத்தானமைத்து
நன்னராந் தொழிலில்வல்ல நாக நாட்டுறையுந் தச்ச
னின்னவை யனைத்துஞ் செய்து நான்முகற் கியம்பிச் சென்றான்.

வந்தனன் பிரம தேவன் வளனெலாங் கண்டுவந்து
சுந்தர மேரு நாணுஞ் சுடருடன் விளங்காநின்ற
விந்தநற் பதி வனப்பை யினிது நான் காண்பதற்கவ்
விந்திர னல்லேனென்றே யிசைத்தனன் புகழ்வதாரே. (௩௩)

வேறு.

சுரநதியை வருவித்தான் சுயக்குசைமா விலசமித்தாச்சொல்லுமோமத், திரவியமுஞ் சேகரித்தான் தீங்கமுகுதிகழ்வாழை தெங்கிவற்றின், பரவுகுலை வேண்டுழிநாட்டினன்வீதி முற்று றும் பனிநீர் பெய்து, விரவுதுக ளடக்கி முற்றுஞ் சந்தனத்தால் மெழுகுவித்தனன் விரிஞ்ச னம்மா. (௩௪)

கோலமிடு வித்துப் பாலிகை கரகந் தருவித்துக் குட விளக்கோ, டேலுமெலாச் சிறப்பினையு மொழுங்கு பெற நிறைவேற்றி யிருக்குங் காலை, மேலொடுகீழ் நடுவுலகத் தினர்திரண்டெழிக்கடல்போன் மேவ வன்னோர், சாலமகிழ்ந் திடவிரும்பு நலனனைத்துந் தருமாறு சமைந்தான் வேதன். (௩௫)

இருநிதியைத் தருமணியா னெய்தினருக் கேவல்செய விருத்திபாங்கு, வருதபனர் சந்திரர்தா ரகைகூடி யிருத்தலினான் மாண்கொ ளவ்வூ, ரிரவுபக லெனும்பேத மின்றியிலங் கிடமன்றலேற்றங் காட்டப், பெருவியப்பிற் கண்டவரெல்லாமெமது பேறே நற் பேறென் றார்த்தார். (௩௬)

இவை யாவுங் கண்ணுற்ற யாழ்வல்லோ னிருங்கைலைக் கேகியன்பின், சிவையாரும் பாகத்தார் திருவடியில் வீழ்ந் தெழுந்து திருக்கை கூப்பிச், சுவையாரு மோதகக்கை யெம்பிரான் மணக்கோலஞ் சூடற் கான, அவையாவு மிகுசிறப்பிற் சித்தமாய் விட்டவென வறைவா னானான். (௩௭)

கொற்றவரு நற்றவருங் கோதறுவா னுற்றவரும் கூடியுள் ளார், முற்றவரு மணமியற்ற நின்னையெதிர் பார்க்கின்றோம் முதல்வ வென்றான், கற்றவரேத் தும்பெருமான் கணபதியைக் களித் தழைத்துக் கமலதேவன், சொற்றவெழிற் சித்திபுத்திகளை மணக்க வெழுதியெனச் சொற்றான் மாதோ. (ருஅ)

வேறு.

முற்றுந் தத்துவ மூர்த்தியா மைங்கரன்
மற்றவ் வாசகங் கேட்டு மனக்களிப்
புற்று வான் கங்கை யாடி யுவந்துசீர்
பெற்றதா மரிப்பே ரணைமேவினான். (ருகூ)

ஓதருந்திரு மேனி யொளியினைக்
காதலாகக் கரப்பான் சிறிதெனப்
பீதகத்துடை யிடையிற் பிறங்குற
நாதன் சுற்றின னாகர் வியக்கவே. (சு௦)

நிலவு பொன்மணியார நிவப்புறக்
குலவு மார்பினுங் கோப்புறு தோளினுங்
கலவைச் சந்தங் கமழ்தரப் பூசினன்
புலவருள்ளத்தும் போதத்து மேவுவன். (சுக)

சென்னியின்மதி சேர்ந்ததுண்ர் மற்றைக்
கொன்னுறுந்நவ கோள்கள் தவஞ்செய்து
மன்னிகொன்பான் மணியா கியுற்றென
மின்னு பொன்முடி மேவ மிலைந்தனன். (சுஉ)

இன்னவா மணக்கோலமெலாம் பெற்று
முன்னவன் றிருமுன் வந்து நின்றனன்
மன்னிரண் டாயிர மருப்புள் ளதாம்
மென்னு மாவபி ராவண மீந்தனன். (சுரு)

தந்த சங்கரன் சாம்பவியா ருடன்
சொந்த மால்விடை யேறித் தொடர்தலும்
கந்த னுஞ்சி காவள மேறின
னெந்தை மன்றலி னேற்றத்தைக் காணவே. (சுச)

ஆதித்தர் வித்தி யேசுர ராண்மை சேர்
மாதவத் திசைப் பாலர் வசுக்களோ
டோது ருத்திர ராதிய ரூர்ந்துதம்
தீதி லூர்தியாற் சென்றனர் கூடவே. (சரு)

சொல்லும் பூத கணுதிபர் சூழ்ந்திட
வல்ல மாநந்தி கேசுரர் மற்றுள்ள
நல்ல வான்கண நாதரோ டேகினர்
மல்ல லெம்பெரு மான் றிருமன் றற்கே. (சசு)

மூல வேதம் முதன்மைப் பிரணவங்
கால மோடு கலைகள் புராணங்கள்
கோல மார் சத்த கோடிமா மந்திரஞ்
சீல வாகமஞ் செப்பெழு நான்குமே. (சஎ)

தேவரூப மெடுத்துத் திரண்டுளத்
தாவலாகவந் தார்ந்தன வேகமாய்
மூவகைத் துலகிற்கு முதல்வனுப்
மேவுமைங்கரன் வேட்டலைக் காணவே. (சஅ)

வேறு.

வதுவைக் கிவ்வா றனைவோரும் மகிழ்வாய் வந்தே புடைசூழ
விதுவை முடிமே லணிந்தருளும் விக்கி நேச்சு ரப்பெருமான்
மதுவைச் சொரிதா ரேந்தயிரா வணத்தி லாரோ கணித்தவுடன்
புதுவைப்படையும்பூதகணம்புகழ்ந்தார் முனிவர் மறைபடித்தார்.

திங்கள் வட்டக் குடைநிழற்றச் சேணர் பலவண ணப்பட்டுத்
துங்கக் கொடிக ளிருபாலுந் துன்னி யொளிரச் சிலருக்கஞ்
செங்கைத் தலத்தால் வீசிவரச் சிலர்சா மரைக ளிரட்டிவரப்
பொங்கும் பஞ்ச வாத்தியங்கள் புகனுற் றிசையு முழங்கினவால்.

இன்ன வாடம் பரங்களுட னிசையார் பெரும் புறக் கடருன்
துன்னி யெழுந்தே வருவதுபோற் றெருடரிக் கூட்டதமடர்ந்துவர
அன்ன சமயத் தரனரோ டானை முகனர் மணக்கோலம்
மின்னவருங்காட் சியைவிண்டு வேதன் முதலோர் வியந்தனரால்.

கண்டு மிகவுங் களிகொண்டு கடிதி னெதிர்வந் தேபணிந்து
கொண்டு சென்றார் புது நகரம் குலவு மிராச வீதிவழி
பண்டுசெய்த தவமிதெனப் பாசாங் குசமேந் தெம்மிறையைத்
தொண்டர் பரவக் கலியாணச் சுடர்மண் டபமாட் டிருத்தினரால்.

அந்த வேலை பாரதியு மனவா கனனும் விரைந்தெய்தித்
தொந்தி வயிற்றெம் பெருமானைத் தொழுது செப்தா னுபசார
மந்தி வண்ண னுமையுடனே ராத னத்தி லமர்ந்தனனால்
சந்த மயிலோ னுதியரு மமர்ந்தா ரோர்பாற் றனித்தனியே. ()

வேறு.

தும்பிமா வதனைத் தெந்தை சுடர்மணி யாச னத்தாங்
கும்பரார் வணங்கி யாசி யோதிட வுகப்பி னண்டர்
வம்புலாங் கூந்தன் மாதர் வழங்கிடு வாடல் பாடல்
தம்பெரு மழைம தர்க்கண் சாத்திவீற் றிருந்தான் மாதோ. (ருச)

வெள்ளடை பாகு வாழை விரவுதெங் காதி யோடே
யொள்ளிய மணிகண் மாலை யுயர்ந்தபட் டாடை யாப
தள்ளருஞ் சிறப்பு வாய்ந்த மங்கல வரிசை தாங்கிக்
கள்ளவிழ் குழலார் பல்லோர் கனிவினிற் கொடுவந் தாரால். (ருரு)

பூரண கும்ப மாடி புட்கர முரசந் தோட்டி
யோரணி மணிவி ளக்கோ டிணைக்கயல் கொடியென் றேது
மாரண விதிக்க மைந்த அட்டமங் கலமு மேந்தி
நேரணி வாத்தி யங்க ணிறைந்திடச் சிலர்வந் தாரால். (ருசா)

சொற்றவிப் பொருண்கண் முற்றுந் தாபமெல் லிழையா ரேந்தி
மற்றந்த நகரவீதி வலம் வந்து மூத்தோன் வைகும்
கொற்றமார் திருக்கல் யாண மண்டபக் கூடந் தன்னில்
நற்றவர் மெச்ச வைத்து நாதனைப் பணிந்தா ரம்மா. (ருஎ)

அப்பொழு ததிதிவாணி யருந்ததி யிந்தி ராணி
செப்பரு சூயை செய்யா ளெனும் பெருந் தெய்வ மாத
ரொப்பறுஞ் சித்திபுத்தி யென்னுங்கன் னியர்பாலுற்றுச்
செப்பமாய் வணங்கி வாழ்த்தித் திகழ்மணி யாசனத்தில். (ருஅ)

தேவியர் தமையிருத்தித் திருவபி டேகஞ் செய்தா
ரோவியப் பொற்பட் டாடை யுடுத்திச்சந் தனத்தைப் பூசித்
தாவினெற் றியிற்பொட் டிட்டுத் தாழ்குழன் முடித்து வாசம்
மேவுமாலை யினைச் சூட்டி மிளிர்மணிப் பணிகள் வேய்ந்தார். ()

இவ்வகை யலங்க ரித்தே யிமையவட் கிறிக்கை யிட்டுச்
செவ்விதி னவரைத் தெய்வச் சிவிகையி னினிதி னேற்றி
யொவ்வுத லில்லாச்சீரி னூர்வலம் வருவ தற்குள்
கவ்வுறு மணத்திற்கான காரியஞ் சித்தஞ் செய்தார். (ருO)

தவத்தினர் பரவியேத்துஞ் சனகமா முனிவர் தாமே
சுபத்திருமணத்தினுக்கு சொல் குசை பொரிக ளாதி
சிவத்திரு வனைத்துங் கொண்டு சித்தமாய் நிற்குங் காலை
பவத்தினை யொழிக்க வந்தோன் பவனிவந் திறங்கினனால். (ருக)

கற்பகத் திருமருங்கார் காமவல் லியைநி கர்த்துப்
பெர்ற்புறுஞ் சித்திபுத்தி யிருவரும் புனித மூர்த்தி
யற்புதப் பக்கந் தன்னி லமர்தலு மண்வீழ் தேவ
ரற்புமீட் டும்பெற் றேகை கலந்தன ராயினரால். (ருஉ)

சனகமா முனிவர் பின்பு சங்கற்பஞ் செய்து தூய
வனகமாய்ப் புரிந்தே ரம்ப னடியைவே தாக மத்தால்
மனநனி மலர்ந்துபோற்றி மதுசெறி பழமும் பாலும்
கனமுற வளித்துப் பின்ன ராவன கவனித்தானல். (ருங)

வேறு.

அருக்கியம் பாத்திய மாச மனமெனு
மிருக்குரை மூன்றுமந் திரவப் பீந்துபி
னுருக்கிளர் மணநலார்க் குரிய தந்துமா
மருக்கமழ் மலர்வரு மகனைக் கூவினன். (ருச)

அயனுந்தன் மனைவியோ டணுகி முன்னரே
நயனுறச் சேர்ந்துள நங்கை மார்தமைப்
பயன்பெற மீட்டுமப் பழமை நோக்கியே
வயவுட னளித்தனன் மறைவி திப்படி (ருரு)

பங்கய னன்புடன் பாத பூசைசெய்
திங்ஙனந் தரவுகந் தேற்ற வெம்பிரா
னங்கவற் கருள்செய வயன்முக் கனிமது
தங்குபாற் சர்க்கரை கலந்து தந்தனன். (சாசா)

வாத்தி யங்கள்வா ரிதியி னார்த்தன
யேத்துமா தவர்சுர ரேனை யோர்களும்
நாத்த ழும்பநான் மறைகள் பாடியே
தோத்த ரித்தன ராசி சொல்லினர். (சாஎ)

வேறு.

சார்ந்தன னேம குண்டஞ் சனகனுஞ் சார்ந்து சூழத்
தேர்ந்தவந் தணரை வைத்துத் திண்டருப் பையை விரித்து
நேர்ந்தவக் கதையிறைத்து நெடியமந் திரபுட் பத்தா
லோர்ந்துயர் பிரண வாதி யும்பரை யர்ச்சித்தானல். (சாஅ)

விதிமுறை வைத்துக் கும்பம் விளக்குமுன் னதியாங்கு
முதுமறை விளம்பி யோம குண்டத்தி லெழுப்பிமுத்தீ
துதிபெறு முன்னோன் றன்னைத் தொல்சித்தி புத்திமாரை
யதனரு கிருத்தியேயோ ரந்தணர் தம்மைக் கொண்டு. (சாகூ)

வேதங்க ளோது வித்து வியன்சமித் திட்டு நெய்யைப்
போதவே யூற்றி மற்றும் பொரியும்பா லும்மிறைத்தே
யோதொன்பான் கிரக வோமக் கருமத்தை யுவந்து செய்து
தீதறப் பூரணகு தியுங்கொடுத் திட்டான் மாதோ. (எ0)

எரியுமத் தீயினின்று மெடுத்தமை காந்தற்கிட்டே
யுரிய காந்தையர்க்கு மஃதை யுடையவனிடச் செய்திட்டான்
பொரியு மும்முறை யாழ் வல்லோன் புரிந்திட வோமத் தீக்கு
வரியவா குதிசெய் தப்பா லாவன வெலாமுடித்தான். (எக)

மணமகன் றனக்குத் தோழன் மாயனு யாவுஞ் செய்ய
மணமகளிர்க்குத் தோழி மாதிலக் குமியாய் நின்றாள்
மணமகன் மனையாரோடு மும்முறை வலம் வந்தானல்
குணமிகுந் தொளிரு மத்தீக் குண்டத்தை யென்ப மன்னே. ()

வலம்வருங் காலையன்னோன் வடபக்கஞ் சேர்ந்து மன்றற்
குலமக ளீர்பொற்றாளைக் கோகன கக்கரத்தால்
நிலமிசைத் தூக்கித்தூக்கி நிறுத்திப்பி னம்மி மீது
பொலமுற வைத்தெல் லோரும் சாலியைப் புரிவாய்ப் பார்த்தார்.

வேறு.

மன்றலிந்த விதமுடிய மணமகன்றன் மனையரொடு மகிழ்வாய்ப் பெற்றோர், மன்றன்மல ரடிவணங்க மதித்தவர்க ளாசிதந்து மனம்பூரித்துப், பொன்றவழு மணியிழைத்த வாசனத்திலன்னவரைப் புகழ்ந்திருத்தி, நன்றுகுரு மால்முகத்தை நோக்கவவ னறிந்திதனை நடத்தலானான். (எசு)

இந்திரனீந் திடுந்தாம்பூ லாதிகளை மாதவனே யினிதி னுங்கு, வந்திருந்தோ ரனைவர்க்கும் வரன்முறைதப் பாதுவந்து வழங்கினன்பின், சுந்தரஞ்சேர் சித்திபுத்தி மார்பொன்மணிச் சிவிகையினிற் றொடர முன்னோன், வெந்திறலாரும் மயிரா வணத்தேறி வீதிவலம் வியக்க வந்தான். (எரு)

அந்தநகர் வீதிவலம் வந்தபோ தாங்குள்ளா ரதிசயித்துக், கந்தமல ராதிதிர வியங்கொண்டு சேவித்துக் களிக்கலானார், றெந்தைபிரா னருட்கண்ணா லருள்செய்து பவனிமுடித் தின்பமாக, வந்தடைந்தான் விந்தை பெறுந் தனது திருக் கலியாண மண்டபத்தே. (எசா)

அக்காலை யுடன்வந்தா ரனைவர்க்கு மவரவர்க ளாசை தீர
வக்கார வடிசிலா தியவளவி லாவனைத்து மளித்த வம்மா
யெக்காலு மங்காத தேனுமணி தருககளவ ரெம்மான்றாளை
யக்காரந் தரித்தபெரு மான்பதத்தை வணங்கியரு ளடைந்து
[சென்றார். (எஎ)]

ஆ செய்யுள் (நசுஎ).

திருமணப்படலம்-முற்றிற்று.

கயமுகாசுரப்படலம்.

அத்திமாமுகத்தினெந்தை யணிகெழுபணிகள்பூண்ட
சித்திபுத்திகளைக்கொண்ட திருமணச்சீருரைத்தா
மெத்திசையோருந்தாழ்ந்து விழ்ந்தடிபணியும்வன்மைக்
கத்தவனுகுந்திய கயமுகாசுரன்சீர் சொல்வாம். (க)

முந்தொருகாலந்தன்னில் மொழியும் விண்ணுலகவேந்தா
மிந்திரன்தேவசேனை யிருபுடைவிம்மிச்சூழ
வந்தசுரேந்திரப்பேர் வாய்ந்தவன் றன்னோடேற்று
வெந்திறற்போர்புரிந்து வெற்றிகொண்டவனூர் புக்கான். (௨)

தம்படையெல்லாமாய்ந்து தரணிமேல் விழ்ந்துசாய்ந்து
பம்பியல்நோக்கிக்காற்றாய்ப் பறந்தோடியசுரராசன்
வெம்பியமனத்தினோடு விண்ணவர்தமக்குத்தோற்றுக்
கம்பமிக்குடல்நடுங்கிக் கவலுற்றுத் தன்னூர்புக்கான். (௩)

புக்கவன்மிகவருந்திப் பொன்னிலத்தேவர்தம்மைத்
தொக்கபோர்மீட்டுமாற்றித் தொலைத்திட்டு வெற்றிகொள்ளத்
தக்கதோர்சூழ்ச்சிமுன்னித் தங்குலகுருவாயுள்ள
சுக்கிரன்பாலடைந்து சொற்றன னிகழ்ந்தவெல்லாம் (௪)

அன்னவன்றன்பாற்றஞ்ச மடைந்திடுமசுரராசன்
றன்னநீயஞ்சேலென்னச் சாற்றியே தன்னுளத்திற்
பின்னர்வந்திடுஞ்செயல்க ளனைத்தையும் பெரிதுதேர்ந்து
துன்னியதயைபினோடு சொல்லுவானயினனல் (௫)

பங்கயன்மனத்துதித்த பயன்பெறுதவவசிட்டன்
துங்கமாமரபுதன்னிற் றோன்றியமதங்கனென்றோர்
புங்கமாமுனிவன்மேருப் பொன்மலைச்சாரலின்கண்
தங்கிநற்றவஞ்செய்துள்ளான் சாற்றுமன்னவனிடத்தே, (௬)

உன்னெழிலசுரகன்னி யொருத்தியைப்போக்கி யன்னான்
றன்னொடுபுணருமாறு செய்திபத் தவன்பானின்று
மன்னியகயமுகத்துமைந்தனை யொருவன்றோன்றித்
துன்னியபகைஞர்க்கொன்று தொலைத்துமைப்புரப்பனென்றான்

ஆசிரியன்றானிவ்வாறறைந்திடக் கேட்டவன்றான்
நேசமாய்த்தலைமேற்சூடி நீடுதிசெய்துவாழ்த்தித்
தூசிலாமனத்தனாகித் தொழுதவன் பாலினின்று
யாசிலாவிடைபெற்றேகி மன்னுதன்னூரடைந்தே. (௮)

தன்னதுகுலத்திலுள்ள சாலெழில் விபுதையென்று
பன்னிடுமசுரகன்னியொருத்தியைப் பரிவினோக்கி
யன்னையேயெனது துன்பமனைத்தையும் போக்கிக்காப்பா
யென்னவேயசுரராச னியம்பினனவளுங்கேட்டு. (௯)

அத்துயர்யாதுசொல்க வதையென்னாற் கூடுமாயின்
பொய்த்தவறின்றிச்செய்வே னென்றன்பிற்புகன்றாள்கேட்டுச்
சித்தத்துண்மகிழ்வுபூண்டு செப்புவானதனையந்த
மொய்த்திடுமசுரர்க்கெல்லா முன்னுறுமரசன்மன்னோ. (௧௦)

தேவர்கடமக்குத்தோற்றுச் சீர்குலைந்தியாம்வருத்த
மேவிநின்றிடுதனிற்கும் விளங்குறத் தெரியுமன்னை
தோவுதற்கோருபாய முளதியாதாமென்னில்
மாவுறுதவத்தின்மிக்க மாதங்கமுனியனென்பான். (௧௧)

மேருவின்சாரலின்கண் மெய்த்தவம் புரியாநின்றான்
சாருமவ்விடைசென்றத்தவங் கெடவேமயக்கி
நேருமம்முனிவன்றன்னை நேயமாய்ப்புணர்வாயாக
சேருமப்போழ் தோர்யானைத்திண் முகக்குழவிதோன்றும். (௧௨)

அவ்வரசுச்சேயானம் மாகுலமெல்லாந்தீரு
மிவ்வணம்புரிதற்குன்னையின்றி மற்றெவருமின்றாம்
செவ்வியவெழிலின்மிக்க செல்வியேயின்றேசென்றங்
கௌவ்வியவாறுனாற்றி யுவப்பொடு மீள்கவென்றான். (௧௩)

வேந்தனாணையை மேற்கொண்டவ்விபுதையாங் கன்னியாங்கு
வாய்ந்துமெய்த்தவஞ் செய்கின்ற மாகதமுனிக்குநேரில்
சார்ந்திருந்தவளுநோற்றாள் தான்வந்தகருமமுற்ற
போந்தநீர்க்கங்கைவேணிப் புராந்தகன் றன்னையுன்னி. (௧௪)

அந்தமாதவனோர் நாளிலன்னளைப் பரிவினோக்கி
யிந்தமாதவத்தாள்யாரே யென்றுள,த்துன்னிநீயார்
வந்தகாரணயாதென்ன வினவவம்மாதுதாழ்ந்து
தொந்தமாயுன்னைச்சேரத் தொடர்ந்தனன் றவத்தையென்றான். ()

அக்காலம் முனிதன் நேரி லாண்கரி பிடியொன்றோடு
மிக்காருங் காமத்தாலே வெறிகொண்டு புணரக்கண்டு
தொக்கான தவத்தினிற்குந் தூயதாஞ் சிந்தைதன்னில்
பொய்க்காம வினையாநோயைப் பூண்டன னாகிநொந்து. (கசு)

நேரிடத் திறைஞ்சிநிற்கு நேரிழை தன்னைநோக்கிப்
பாரிடை நின்னூர்யாது பகர்குலம்யாது யானின்
றேர்தரச் சொல்கவென்ன வுசாவின னவணன்றென்று
பேர்முதலாயவெல்லாம் பெட்பொடு பகரக்கேட்டான். (கஎ)

வனப்புயர்விபுதைதன்னை மாமுனிவரன்காந்தர்வ
மெனப்படுமணத்தையன்றே யியற்றியே காமமிக்க
மனத்தினனாகியன்னை மருவவோர் பிடியாயாத்திக்
கனத்ததான்களிறாய்த் தோன்றிக்களிப்பொடு புணர்ந்தானன்றே.

வேறு.

இன்னவாறவ்விருவரும் வேழமாய்த்
துன்னியின்பத்தொடு கடல்மூழ்கினா
ரன்னர்பானின் றமரர்க்கிகலதாய்
மன்னிவெங் கயமாமுகன் றோன்றினான். (கசு)

வந்தவெங்கய மாமுகத் தீயவ
னந்தில்வன்மை யசுரர்க்கரசனாய்
முந்துமூவுலகங்களுங் கண்ணினீர்
சிந்தவேகொடுங்கோலைச் செலுத்தினான். (உ0)

கயமுகாசுரன் வந்தமைகண்டுமுன்
னயர்ந்திருந்த வசுரேந்திரனுணர்ந்
தியலுந்தங்குரு வென்றுள வெள்ளியை
செய்மூறும்படி யவன்பாற் செலுத்தினான். (உக)

வெள்ளிவந்தந்த வெங்கயமாமுகக்
கள்ளவஞ்சகனைக்கண்டு நீயுயர்
வுள்ளமாதேவை யுன்னித் தவத்திற்கோள்
ளௌள்ளுருவழி யாவசமென்றனன். (உஉ)

சுங்கனுங்குரு சொல்லியவாறுமை
பங்கனைச்சிந்தை பண்ணிநெடுந்தவந்
துங்கமாச்செய்து தோன்றப்பரனிடத்
தங்கெவற்றாலுமழியா வரம்பெற்றான். (உ௩)

அன்னசெய்கை யயனரிவிண்ணுளா
ருன்னிவேதண்ட முற்றுப்பசுபதி
தன்னைக்கண்டபடி தாழ்ந்து கயமுகன்
மன்வரத்தினால் மாய்வோமியாமென்றார். (உ௪)

அவர்களின்முறை யீட்டிற்ககங்கனிக்
தெவருமொப்பிலா வீசனம்பாற்பின்னர்
நவமதாயொரு நந்தன்றோன்றியவ்
வவமிகுந்தவனைக் கொல்லுவானென்றான். (உரு)

என்று மாதவனீந்தருள் வாக்கினை
நன்று நன்றென நாடி நமக்கிடர்
பென்றிற்றென்னப் புகன்றுழந்து களிப்பொடு
நின்றத்தேவரும் விடைபெற்று நீங்கினர். (உ௬)

பின்புசங்கரன் பெட்பாருமையுட
னன்புமேவி யயலுளநந்தனத்
தின்புதுய்க்க வெழுந்தருளிக்கவின்
பொன்பிறங்கொரு மண்டபம் புக்கனன். (உஎ)

புக்கவண்டிகழ் பொற்சுவரோவியத்
தொக்குவோங்காரத் துள்ளிருயானைகள்
தொக்கிருந்து புணர்தலைச் சூழ்ந்துமை
நக்கயா திதுவென்று நவின்றனள். (உ௮)

சாற்றுமன்னதைத் தானுநோக்கிப்பரன்
றேற்றுநந்தந்திரு விளையாட்டிலொன்
றேற்றமாகவியற் றலுக்கேதுவாந்
தோற்றமென்றதைச் சொற்றனனன்றரோ. (உகூ)

அக்கணந்தனிலந்த வோங்காரமின்
றெக்கணங்களு மேத்தப்பிறைச்சடை
முக்கண்யானை முகத்தொடுநீள்கரந்
தொக்கவைந்தொடுந் தோன்றிற்றோர்மூர்த்தியே. (௩0)

செப்புமந்தமா மூர்த்தியாஞ்சேயுடன்
முப்புரஞ்சுடுமூர்த்தி யிருக்கையுற்
றப்புதல்வனுக் காங்குக்கணேசப்பே
ரொப்பச்சூட்டிவைத் தோதுவனோருரை. (௩௧)

தேவர்யாரையுந் தீங்குறச்செய்துதன்
னேவல்செய்ய விடுக்கள்புரியவன்
மூவர்தம்மையு மோதுவன்றானவர்
காவலன்கயமுகாசுர னென்றுளான். (௩௨)

ஒருவ னன்னவ னுக்குத் தவத்தினு
லொருவ ராலும்வெல் லொண்ணு வலியையு
மொருவரா லும்மொரு படையா லுஞ்சா
வொருவுமா வரமுந்தந் தோமுன் னைநாள் (௩௩)

அக்கொடுஞ் செயலானைநீ கொன்றுவிண்
ணுக்கவிந் திரனோ டயனு தியோர்
துக்கம் யாவுந்துடைத் தருள்வா யெனுத்
தக்கசூழ்ச் சியுஞ் சாற்றி விடுத்தனன். (௩௪)

தாதையாஞ் ஞைதலைக் கொண்டோர் பூதன்றோன்
மீதிவர்ந் துமிகுந் தபூதப் படை
தூத ராகித் திற்சூழ்க் கயாசுரன்
மீதுபோர் செயப் போதலுற் றுணரோ. (௩௫)

வெங்கயாசுரன் மேவிய மாகதத்
துங்க மாபுரிச் சூழலைக் கிட்டியே
தங்கியுற் றதைத் தந்தி முகாசுர
னங்குணர்ந்தம ராற்றவெழுந்தனன். (௩௬)

வேறு.

அவ்விருவோருந்தந்த மடர்படையோடெதிர்த்து
வெவ்வியற்போற்களத்தை மேவிப்போரி யற்றுங்காலைத்
திவ்வியபூதவீரர் செலுத்தியபடைகளாலே
வெவ்வியவசுரச்சேனை வீரரில் பல்லோர் மாய்ந்தார். (௩௭)

அன்னதுகண்டுசீற்ற மடைந்துமா முகத்துத்தீயோன்
மின்னுகைவில்வளைத்து வெம்படை யநேகம்வேழ
முன்னவன்மீதுவிட்டான் முடிவிலாப்பூதர்தம்மில்
துன்னியசிலரைவீழ்த்திச் சோர்ந்திடச்செய்தவன்றே. (௩௮)

அங்குசபாசமேந்து மையன்பின்றன்னுளத்தில்
வெங்கயமுகத்துத்தீயோன் மேவியவரத்தையுன்னித்
துங்கமாமருப்பிலொன்றைச் சுடர்தரமுறித்துகையா
லங்கவன்மீதுவிட்டா னவன்றலை வீழ்த்திற்றன்றே. (௩௯)

கயமுகத்தசுரன் மீட்டுங் கழறுமோ* ராகுவாகி
வயமுறும்போரியற்ற வந்துதோற்படைந்து நிற்கச்
செயலெலாஞ் செய்யுமுன்னோன் தெவ்விலாவவனைநோக்கி
யியலுமெற்கூர்தியாகி யிருந்தியென்றுரைத்தானன்றே. (௪௦)

என்றருளிறைவன்வாக்கை யேற்றவவ்வசுரனன்போ
டன்றெடுத்திட்டவாகு வாகனமாயடைந்தான்
முன்றிகழ்கணேசமூர்த்தி மொழிதருமதனையூர்ந்து
சென்றுறைந்தனனுப்பூரிற் றேவர்கள் வாழ்த்தமன்னோ. (௪௧)

ஆ. செய்யுள் (௪௦அ).

கயமுகாசுரப்படலம் முற்றிற்று.

---

*ஆகு—பெருச்சாளி

இராமன் பூசித்த படலம்.

பரந்தபெருங் கடல்சூழ்ந்தசெழும்பரத கண்டமதிற் பரவப் பெற்று, நிரந்தரமும் வளங்குன்று தொளிர்தருமா ரியவர்த்த நெடுங்தேயத்திற், புரந்தரனும் புகழ்ந்திடுங்கோ சலநாட டின் றிலகமெனப் பொலிவுற்றேங்குந், திரந்தழைத்த வயோத்தி யெனுந் திருநகரொன்றுளததன்சீர் செப்பற் பாற்றே. (க)

சந்தமுறு மந்தரக ரந்தன்னிற் றருமநிலே தவறு தென்றும், விந்தையுற வரசாண்டு வந்தனன்சீர் *மித்திரமா வியன்குலத் தில், வந்ததச ரதனென்னு மன்னர்பிரா னன்னவன்றான் மகப் பேறின்றி, நொந்தனனு லதுகண்ட வசிட்டமுனி நோக்கியிது நுவல லானன். (உ)

உத்தமனு முரோபத மகராசன் றேசத்தி லோரீ ராறென், றித்தரைசொ லாண்டுமழைத் துளியின்றிப் பஞ்சநிறைந் திருந்த போழ்து, சத்துறுநற் கலேக்கோட்டு முனிவரனல் தழைத்ததந்த் தவனைக் கொண்டு, புத்திரகா மேட்டியா கம்புரியினுனதுகுறை போகு மென்றான். (ங)

அவ்வகைசெய் தவிர்ப்பாகந் தனையரையன் மனைவியர்மூ வர்க்கு மன்பாய்ச், செவ்வகையி னளிக்கக்கோ சலேக்கிராம னுங் கைகைத் தேவியின்பாற், றெவ்வகையற் றுலகுபுகழ் பரதனு மொண் சுமித்திரையா டிருவயிற்றிற், கவ்வுறுமி லக்குவனுஞ் சத்துருக்க னுமுதித்தார் கவின மாதோ. (ச)

தாசரதிக் கவன்றந்தை மிதிலைநகர்ச் சனகன்மகள் சனகிதன்னே
நேசரதி யாக்கிப்பி னெடுமுடியுஞ் சூட்டநினே வுற்ற காலே
நாசரதி யாங்கூனி நட்புகொடு கைகேயி நலிவு செய்யப்
†பேசரதியாய் முடிக்கி ராமபிரான் வனமேகப் பிரிய முற்றான்.

சீதையிலக் குமணனொடுஞ் சிராம னயோத்திவிட்டுச் சேர்ந்து கங்கைப், பாதைவிடுங் குகனைநட்டுப் பரத்துவா சனைக் கண்டு பணிந்துசென்று, மேதையர்சொல் சித்திரகூ டஞ்சார்ந்தர் னிவ்விடயம் விளம்பக்கேட்ட, தாதையுயிர் நீத்தனனற் றமபியரீ மக்கடனைச் சார்ந்து செய்தார். (சா)

---

*மித்திரன்-சூரியன். †(பேசு முடிக்கு அரதியாய்-விருப்பமில்லாதவனாய்).

அத்தனிறந் தந்தைப்பரத னண்ணனிடஞ் சென்றறிவித் தழைக்கவன்றோன், சித்தநைந்து கடன்முடித்துப் பரதனது முக நோக்கிச் செப்புவானுன், பத்துடனுன் காண்டினையும் பதினன்கு நாளெனவிப் பைங்கானத்தி, லொத்திருந்து வருமளவு மரசு ரிமை தனையுவப்பி னுஞற்றென் ருனுல். (எ)

பரதனதற் கிசையாமற் பதம்பரவிப் பாதுகையைப் பரிவி னேற்று, விரதனென நந்திக்கி ராமமுற்ருன் விபுதரிடர் விலக்க வந்த, வரதனிலக் குவனேடும் வைதேகி யொடுமந்த மலையை விட்டுச், சரதமுனி வரர்மேவுந் தண்டகா ரணியமதைச் சார்ந் தான் மன்னே. (அ)

செல்லும்வழி யதிலெதிர்த்த தீயவிரா தனைவதைத்துச் * சிந் துண் டோன்வாழ், நல்லுறுமாச் சிரமமடைந்தாங்கவன்வாள்விற் றாணி வழங்கப்பெற்றுச், சொல்லுபஞ்சவடிசேர்ந்து சூர்ப்பநகை துடுக்கடக்கி யவடன் சூதால், வல்லவிரா வணன்விடுத்த மாரீச னெனுமாய மானைக் கொன்ருன். (கூ)

வஞ்சவிரா வணனந்த வேளையிற்செய் மாயமதை யுணர்ந்த சீதை, யஞ்சியெரி யொளிக்கவரும் போலிச்சீ தையைக்கவர்ந்தே யடைந்தான் றன்னூர், செஞ்சொலிரா கவனிளையோ னுங்கவளைக் காணுது தேடித் தென்பால், நெஞ்சயங்கிச் செலும்போது நேர்ந் தகவந்தனைமாய்த்து நீங்கிச் சென்ருர். (௧௦)

சவரியைப்பின் கண்டவளால் மதங்கமலை சார்ந்தனுமன் சார் பினுலே, கவியிறையாஞ் சுக்கிரீ வனைநட்டு வாலியுயிர் கவர்ந்து பின்னர்ச், சவியுறுகிட் கிந்தைநகர்க்கன்னவனை யேவேந்தாச் சமைத்தன் ஞேனுல், கவிகடமை நாற்றிசையும் போய்ச்சனகி தனைத்தேடக் கடிதுவிட்டார். (௧௧)

தென்றிசைசே ரனுமனிட மடையாள மாவாழி தனைச்சிரா மன், நன்றளிக்க வவனுந்தன் றுணைவருடன் றேவிதனை நாடி யெங்கும், பொன்றவழ்ம கேந்திரம்போய்த் துணைவரையாங் கிருத்தியிரும் புணரி தாண்டி, வென்றியிலங்கையையடைந்து வெகுண்டவிலங் கணியாவி வீட்டி ஞனுல். (௧௨)

---

*சிந்துண்டோன்—அகத்தியமுனிவன்.

கனகமணி மயவிலங்கை யுட்பேர்ப்பின் னிறைவிதனைக் காணு தெங்கும், வனமிகும சோகவனந் தனிற்கண்டு மோதி ரத்தை வழங்கியாவும், வினயமுடன் சொல்லியக்கா வினையழித்து வந்தெதிர்த்த வீரர்தம்மைச், சினவியலங் கோலமுறச்செய்து பலராவியுண்டு திரிந்தானம்மா. (கங)

அக்கணமிந் திரசித்து வன்பிரமாத் திரமதனு லநுமன் றன்னை, ஒக்கவிறுக் கிக்கட்டித் தந்தையின்முன் விடவவன்றன் உசாவிற்கெல்லாந், தக்கவிடை தந்தனனஞ் சனைதனயன் தானவர் கோன்சகியானுகிச், சொக்கமுறு மாருதியின் வாலினெருப் பிடு மாறு சொன்னு னன்றே. (கச)

சொன்னவண்ணம் கிங்கரர்கள் வாதசுதன் வாலதனிற் றுணி யைச்சுற்றி, வன்னியிட மற்றவனு மத்தீபா லிலங்கைதனை மாய்த்து முற்றும், பொன்னனையா ளிடங்குறுகிப் போற்றவவள் வாழ்த்தியுளம்பூரித்தீந்த, மன்னுறுசூ ளாமணியை மகிழ்ந்தேற் றுத் துணைவரிடம் வந்தான் மாதோ. (கரு)

வேறு.

வந்தி லங்கை வயினுற்ற யாவையும்
விந்தை கூர விளம்பிப் புறப்பட்டுத்
தந்தை தாய் நிகர் தாசரதியையும்
சொந்த வேந்தலை யுந்தொழு தேத்தினன். (கசு)

இறைவிதன்னை யிலங்கையிற் கண்டனன்
நிறைவி லன்னவ ணையத்து டன்றந்த
துறைவல் லோர்புகழ் சூளா மணியினைக்
குறைவறக் கொடு வந்தன னென்றனன். (கஎ)

தலைவி சாற்றிய யாவுந் தலைவற்கு
மலை விளக்கின் வழங்கி மணியினை
யுலைவிலான் கொடுத் துண்மகிழ் வாயருஞ்
சிலைவலான்பதஞ் சேவித்து நின்றனன். (கஅ)

பின்னிராம னிளையவன் பின்வர
முன்னுறச் சுக்கி ரீவன்மொய் வானரர்
தன்னைச் சூழ்ந்து வரத்தனு வேந்தியே
சொன்ன தென்றிசை நோக்கத் தொடங்கினன். (கசு)

பிரச்சிரவ்வண மென்னும் பிறங்கலை
வரச்சிரேட்டர் *வரைந்து மகோததி
யுரச்சிறப்புறு கீழ்க்கட லோரமாய்த்
திரச்சிறப்பொடுந் தென்றிசை மேயினர். (உ०)

ஏருமார்க்கத் திரத்தினு காப்பெயர்ச்
சோகநீக்குஞ் சுகத்தென் கடற்கரைக்
காகுமுப்பது குரோச மதன்றெற்கில்
போகவோர்வன மூண்டவண் புக்கனர். (உக)

சாற்றுமவ்வனம் வன்னித் தருக்கள்சூழ்ந்
தேற்றதூய்மை யியைந்தேயிருத்தலைத்
தேற்றமுற்றவண் சேர்தலு நோக்கினர்
போற்றுதற்குரித் தாமொர்பொற் கோயிலை. (உஉ)

அந்த வாலயத் தைங்கரத் தெம்பிரான்
சந்தமார்தரச் சார்தரும் வெய்யிலில்
விந்தையாகவே விற்றிருக்கின்றதை
வந்த வீரர் மகிழ்வுறப் பார்த்தனர். (உ௩)

காகுத்தன்முத லோரக்கடவுளை
யாகுலங்கெட வர்ச்சிக்க மேவின
ராகுவாகனத் தண்ணலிவ் வண்ணமிங்
காகலென்னென் றிராமனன்றாய்ந்தனன். (உ௪)

பானுமுன்னம் பரிவிற்பூசித்துக்கை
யானவெங்கதி ராற்றழீஇ வேண்டினன்
தானுகந்தெந்தை சார்ந்த திவ்வாறென
ஞானநோக்கி லறிந்தன னன்றரோ. (உ௫)

அறிந்திவ்வாதி யருமறைத் தேவினை
மறந்திடாது மகிழ்ந்து பூசிக்கின்மண்
பிறந்ததேவியை மீட்டும்பெற்றுய்யலாஞ்
செறிந்ததுன்பமுந் தீருமென் றுன்னினன். (உ௬)

---

* வரைந்து—நீக்கி.

எண்ணியங்க ணிலக்குவ னோடன்யார்
அண்ணனற்கவி வேந்தனு மன்றனே
நண்ணிக் கூய்வம்பினென்று நயந்துதன்
உண்ணிறைந்த கருத்தை யுரைசெய்வான். (உஎ)

குறைகள் தீரவிக் குஞ்சர மூர்த்தியை
மறை விதிப்படி யேத்த மனங்கொண்டேன்
நிறையுளீ ரதற் காவன நீவிரம்
முறையிற் சேர்க்க முயன்றிட வேண்டுமால். (உஅ)

என்றி ராம னியம்பலுந் தம்பியும்
வென்றி வானர வீரருமார்த் தனர்
நன்று நன்றென நான்கு திசையிலுஞ்
சென்று வேண்டுந் திரவியந் தேடினர். (உகூ)

மஞ்ச னஞ்செய வேண்டுமெது முதல்
பஞ்ச கௌவியம் தூபதீபங் கனி
விஞ்சு சந்தனம் வேரிப் பசுமலர்
எஞ்ச வின்றியே யாவையுஞ் சேர்த்தனர். (ஙo)

வேறு.

பின்னிவே தனந்தனக்குப் பிரியமாம் பொருள்க ளோடு
துன்னுப சார மாகும் பொருள்களுந் தொகுத்துவைத்தார்
மன்னிய மறையோர் போற்று மணிவண்ணன் யாவுங் கண்டு
தன்னுளங் களித்துப் பூசை தான்செயத் தொடங்கினனல். (ஙக)

நெறிவழு வாதாங் குள்ள நெடுமகோ ததியில்மூழ்கிச்
செறிமர வுரியு டுத்துத் திருவிபூதியுமணிந்து
நிறைருத்தி ராக்கம் பூண்டு நிகழுமவ் வாலயத்தின்
மறுவறு மேற்பா லுள்ள மார்த்தாண்டப் பொய்கைதன்னில். ()

தீர்த்தம தெடுத்து வந்து திகழ்கடந் தன்னை வைத்து
நேர்த்தியாய் மறைசெபித்து நெறியுள்ளிப் பூசைசெய்தே
ஆர்த்தியா யேக தந்தற் கைந்துகௌ வியத்தினலும்
சேர்த்த தேன் கனிக ளாலுந் திருவபி டேகஞ்செய்து. (ஙங)

கடப்புனல் கொண்டு வேத மந்திரங் களைபியம்பித்
திடப்புல னுடுமென்பாய்த் திருமஞ்ச னந்தா னாட்டித்
துடைத்தொற் றுடையினுனீ றுஞ் சுகந்தசந்தனமு மிட்டே
உடுத்துப்பட் டாடை பொன்னார்ந் தொளிர்மணி முடியைச்சூட்டி.

பணிகளிட் டலங்கரித்துப் பங்கயம் பகர்மந் தாரம்
அணிபெறு மறுகு வன்னி யாதிகொண் டமலத்தேவின்
கணிசகத் திரநாமங்கள் கழறியர்ச் சனைபுரிந்து
பணிவொடுந் தூபதீபங் காட்டியே பணிந்தான்மாதோ. (௩௫)

அண்ணிக்கு மோதகத்தோ டவல்பொரி யாதியாய
பண்ணிய வகைகள் தீய பாயசஞ் சுவையா ரோடு
நண்ணிய வடிசிலாதி நைவேத்தியங்கள் செய்து
கண்ணுகற்பூரனீ ராஞ் சனமுமே கனிந்து செய்தான். (௩௬)

வேறு

செய்தன னிங்ஙனந் திருந்தப் பூசனை
கைதொழு தேத்தினன் கருதி னோர்க்கருள்
பெய்திவ ணுறைந்திடும் பிரணவ மூர்த்தியே
உய்திற னுடுமெ னுரையுங் கேட்டருள். (௩௭)

தேவியைப் பிரிந்துயான் றியங்கி நிற்கின்றேன்
தீவினைத் தசமுக னுதித் தீயர்தம்
ஆவியைப் போக்கியா னடைந்து வெற்றியென்
தேவியை மீட்கநீ யருள்செய்வாயரோ. (௩௮)

இடையினி னேருமெவ் விடரு நீக்கியே
தடையற யான்சுக வாழ்வு சாரவே
உடையவ நீவர முதவ வேண்டுமென்
றடைவுடன் போற்றின னாழி வண்ணனே. (௩௯)

மேயவவ் வண்ணமே வெயி லுகந்தவி
நாயக னீந்தன னல்வரந்தனைத்
தூயவ னவனடி தொழுது வாழ்த்தியே
நேயரோ டேகின னேர்ந்துதென்றிசை. (௪௰)

விண்டவிப் பதிக்குத்தென் மேற்குப் பாரிசத்
துண்டொரு யோசனைத் தூரத் தொண்வளங்
கொண்டதோ ரறுமுகத் தேவின் கோவிலைக்
கண்டன னதனையுங் கனிந்து போற்றினன். (சுக)

விண்முகத் தவர்பகை வீட்டி யாண்டருள்
சண்முகக்கடவுளைத் தாழ்ந்து போற்றலும்
தண்முகத் தவன்வரந் தரப்பெற் றேகினன்
மண்முகத் திடர்கெட வந்த வேந்தலே. (சஉ)

தங்குமித் திருத்தலந் தனக்குக் கீழ்த்திசைப்
பொங்கலை வீசிடும் புணரித் தீரத்தில்
மங்கலப் பொருளெலாம் வாய்ந்துள்ளதாமெழிற்
புங்கமார் தேவிமா புரமென வொன்றரோ. (சந)

அப்புரஞ் சேர்ந்தன ரிராம னாதியோ
ரொப்பறு மனையிவ ணுவந்து கட்டவே
தப்பற நவக்கிர கங்க டம்மையவ்
வப்பினெண் டீரத்தி லமைத்திட் டாரரோ. (சச)

பின்னர்நற் சேதுவைப் பிறங்கக்கட்டியே
மன்னதன் மூலமாய் வாரிதாண்டியத்
தென்னிலங் காபுரி சேர்ந்து வைகினர்
பன்னிரா வணனிது பகரக் கேட்டனன். (சரு)

வெங்கொடுங் கோபத்தீ விழிகள் சிந்திடச்
சிங்கவே றனையதன் வீரவீரரைத்
துங்கநன் மனத்தினர் துஞ்சுமாறுபோய்ப்
பொங்குவெம் போரினைப் புரியவேவினன். (சசா)

அணியணியாகவே யரக்கர் வந்தனர்
பணியணைக் காகுத்தன் பார வில்லினல்
துணியுறக் கொன்றனன் றுறக்கஞ் சார்ந்தனர்
மணிமுடி யிராவணன் சீறி வந்தனன். (சஎ).

அன்னவன் றன்ணையு மமர்செய் தந்தகன்
றன்னுல குய்த்தனன் ருமமைரக்கணன்
பின்னர்வை தேகியைப் பெட்பின் மீட்டனன்
கன்னலின் வந்தனன் கந்த மாதனம். (சஅ)

கந்தமா தனத்தினிற் கனிந்து தாபித்தா
னிந்தமா வுலகுப் விராம லிங்கமே
லெந்தமா வுலகமு மேத்த யோத்தியைச்
சொந்தமாச் சேர்ந்தனன் துணைவர்சூழவே. (சகூ)

ஆ செய்யுள் (சுருஎ).

இராமன் பூசித்தப்படலம்-முற்றிற்று.

வீமராசன் புத்திரப்பேறு பெற்றபடலம்.

சாற்றிராகவன் சானகியைப்பெற
வாற்றணைக்குமுன் னுயிந்த மூர்த்தியைப்
போற்றிப்பூசை புரிந்ததை யோதினும்
ஏற்றவீமவேந் தின்கதை யோதுவோம். (க)

வேறு.

மாவரு முவரி யாடை வணிந்தபூ மண்டலத்தி
லேவரும் புகழ்வளங்கொ ளெழிலமர் விதர்ப்ப நாட்டிற்
றேவரு முலாவ நீண்ட செழுமணி மாடமேவிக்
காவலர் வியக்க வுண்டோர் கவுண்டின்னி யப்பே ரூரே. (உ).

இங்கருந் தவசீ லத்தி னேற்றமுற் றிருக்கு ணர்த்துஞ்
செங்குல வொழுக்கினின்றுந் திறம்பலனுகி மற்றைத்
தொங்கன்மன் னவர்கள் போற்றுந்துணையடி வீமனென்னும்
பொங்கறந் தழையுளத்தோர் புரவல னரசுய்த்தானுல். (ங)

அருந்ததி யல்ல ளாகி னரிவ ணோரா வாரென்
திருந்தவப் பெரியோர் மெச்ச வியறெரிந் தொழுகவல்ல
கருந்தடங் கண்ணுள்சாரு கார்சினியெனுங் கற்பாரோர்
விருந்தெனு மணிவியோடு விளங்கினன் வீமவேந்தே. (ச)

மங்கல மென்பர்மிக்கோர் மனைவள மற்றதற்கு
நன்கல மாயிலங்கு நன்மக்கட் பேறு வாய்க்கப்
பங்கமிலறந்தா னங்கள் பலதெய்வ பூசை செய்து
மிங்கதுபெரு மலேந்த வில்லவட் கியம்ப லானுன். (ரு)

புத்திரப் பேறு வேண்டிப் புரிந்தநற் கிரியை யாவுஞ்
சித்திரத் தெழுதெழுத்துத் திருவுரு வாய்ப்போயிற்ற
லத்திரு வளிக்கக் காணே மாதலினம்போல் வார்க்கிங்
கெத்திரு விருந்து முண்டோ விகபர வேற்றமென்றான். (சா)

பெற்றபாக் கியம் விழற்குப் பெய்தநீ ராயிற் றந்தோ
கொற்றமார் புலன்கள் வென்ற குலமுனி வரர்கள் கூடும்
பொற்றரு சூழ்நற்கானம் புகுந்தருந் தவமேற் கொள்ளின்
முற்றுநங் கருத்துமாங்கே முனிவர்த மருளுமுண்டாம். (எ)

எனப்பகர்ந் தாட்சிதன்னை யியையமாத் தியன்பாலாக்கி
வனப்புறு மனைவியோடு வனத்தினை யடைந்தானன்றே
யினிப்புறக் காதியைந்த னிருந்தவச் சாலேனாங்கர் [தான்.
சினப்பெருங் களிற்றான்முன்னஞ் செய்தபுண்ணியத்தாற் சார்ந்

பன்னசாலைக்கு ளொன்றிற் பற்பல முனிவர்சூழ்ந்து
பொன்னடி வணங்கக் கஞ்சப் புங்கவன் போற்புலித்தோல்
மன்னுமா சனத்திருந்து மறையொடா கமம்விரிக்கும்
நன்னர்க் கோசிகனிருக்க நயந்தவண் கண்ணுற்றானல். (கூ)

அந்தமெய்த் தவத்தோன் பொற்றாளரசன்றன் தேவியோடு
வந்தனைபுரிந்து போற்ற மற்றவனன்னோர் தம்மைச்
சிந்தனை மகிழ்ந்து நோக்கிச் செல்வச்சே யொருவன்றன்னை
யிந்தமா நிலத்தினிற்பெற் றின்புறுவீரென்றானல் (க0)

பின்னரைந் தவித்தோனந்தப் பெருமகன் வதனநோக்கி
யென்னுழை வந்தநீயார் யாதுகா ரணஞ்சொலென்னத்
தன்னகர் தனதுநாமந் தன்மனை வியின்பேர் போந்த
நன்னய மனைத்து மன்னன் நற்றவற் குரைத்து நின்றான் (கக)

வேறு.

மீட்டுங் காவலன் மெய்த்தவற் பணிந்தைய நாயேம்
வேட்ட புத்திரப் பேறுநின் வியனர விந்தத்
தாட்டுணைத்துணர் தரிசனஞ் செய்தவக் கணமே
வாட்ட நீங்கிடப் பெற்றன மகிழ்ந்தன மென்றார். (கஉ)

பற்று நீங்கிய பண்ணவ னம்மொழி கேட்டுக்
கொற்ற வேற்படைக் கோமக நின்றிரு வமிசத்
துற்ற முன்னவ ரொத்துநீ கரிமுகத் தேவின்
நற்றிருப்பத நாடினெந் நலமுநிற் சாரும். (கங)

என்ன வன்னவ னிருங்கழ லன்பினி னேத்தி
மன்ன னெத்தலம் வாழ்விநா யகப்பரம் பொருளை
யுன்னி வாழ்த்துவ தென்னநன் குண்மையை யுணர்ந்தோன்
பன்ன லுற்றனன் பார்த்திவன் மனத்திடர் பாற. (கச)

உலகிற் பாண்டியி லுபர்மகோ ததிபென வென்று
மிலகு கீழ்க்கடற் கரையிற்சே துவுக்குதக் கிரண்டாய்
நிலவு யோசனைத்தூரத்தி லுள்ளது நீள்வான்
குலவு வன்னிமா வனமெனக் கூறுமோர் வைபபு. (கரு)

அப்பெரும்புண்ணி யத்தலந் தன்னிலா தவனுஞ்
செப்பு மக்குலஞ் செனித்தசீ ராமனு மேனை
ளொப்பொருட்குமா தாரமா மேரம்பத் தேவை
யொப்பவேத்தியுற் றருளம் விழைந்தவை யுவந்தே. (கசு)

ஆதியிற்றின கரற்கருள் செய்தவா றமல
ஞேதிடும் வெயிலுகந்தவி நாயக னென்னுங்
காத னுமத்தோ டெழுந்தரு ளினனந்தக் கானில்
வேதவேதியர் விண்ணவர்துதிபல விளம்ப. (கஎ)

மூல காரண னிவ்வண முகமலர்ந் தமர்ந்த
சீல மாந்தலஞ் செய்யவுப் பூரெனுந் திருப்பேர்
ஞால மோதவெய் தியதவ ணயந்துநீ சென்று
சால வேத்திடித் புத்திர பாக்கியஞ் சார்வாய். (கஅ)

என்று கோசிக னியம்பலு மிறைவனு மவன்றன்
இன்றுணைக்குடும் பிணியுங்கேட் டவன்பத மேத்தி
நன்று நல்குமத் தலத்தினை நாடுவான் மேவித்
தென்றி சைப்படர்ந் தடைந்தன ரவ்வனந் தெரிந்தே. (கக)

சேர்ந்த போதவண் செம்மலுந் தேவியுஞ் சீலஞ்
ஆர்ந்து மிக்கவா நந்தமு மடைந்துகண் ணுற்றார்
தேர்ந்த சித்பர்களியற்றிய தெய்வவா லயமொன்
றோர்ந்து நேயமோ டதனரு குற்றன ருவந்தே. (உ0)

அந்த வாலயத் தாதவன் கிரணந்தன் மேனி
வந்து தீண்டமா வதனமு நீடுதிக் கையுஞ்
செந்த ளிர்க்கர நான்குமுக் கண்களுந் திகழச்
சுந்த ரச்சுட ரிற்பொலி யெந்தையைத் தொழுதார். (உக)

வேறு.

மிக்க வெயிலுகந்த விக்கினவி நாயகனைத்
தக்க விதிவழியிற் றாழ்ந்திறைஞ்சத் தான்வேண்டிப்
புக்கொண் மகோததியாம் பொய்கையிலு மேற்பாலிற்
சொக்க முறப்பொலியுஞ் சூரியநற் றீர்த்தத்தும். (உஉ)

மேவியநீ ராடியே வீமன் மனைவியுடன்
தாவிலனுட் டானங்க டான்முடித்துப் பூசனைக்காம்
யாவுங்கைக் கொண்டேகி யெம்பிராற் கன்பொடுமற்
றுவனவுஞ் சேர்த்துக்கொண் டானமறை தானோதி (உங)

தேன்றயிர்பா லாதி திரவியங்க ளாலாட்டி
யான்றமணி திகழ்தருபூ ணுடை யலங்கரித்துக்
கான்றவழு கின்ற கமலமுத லாமலர்கள்
ஏன்றபடி யிட்டர்ச்சித் தேத்தினன் றோத்திரங்கள். (உச)

முன்னவன்ற னுமங்கண் முற்றும் மொழிந்திறைஞ்சிப்
பன்னுசுவை யாரன்னம் பாயசப்ப லாதியளித்
துன்னிமுனி முன்னம் உரைத்த விநாயகனூர்
மன்னுமுயர் மந்திரத்தை வாயார வுச்சரித்தான். (உரு)

இன்னவண மேத்திறைமுன் னெம்மா னெழுந்தருளி
மன்னவநின் வேண்டுகோள் யாதென்ன வாள்வேந்தன்
நின்னடிக்க ணெஞ்ஞான்று நீங்கவில்லாப் பத்தியுட
னன்னலத்தோர் சேய்தந்து நன்முத்தி நல்கென்றான். (உசா)

வேறு.

மூலகா ரணன்மன் வேண்டு முதலிரு வரமுந் தந்து
சீலநின் னிறுதிக்காலத் தின்முத்தி சேருமாறு
சாலவுங் களித் தளிப்பல் சமுசயம் வேண்டாநீயுன்
சாலிநேர் மனையா ளோடுன் றனிநகர் சார்வாயென்றான். (உஎ)

பூபதி விக்கினேச பூரணன் பொற்றாள் போற்றி
மாபதி யடைந்தான் மிக்க மகிழ்வினி லமைச்ச ரேத்தச்
சீபதியனையான் றேவி சில்மதிக் குள்ளோர் சேயைத்
தீபமென் றொளிரத் தந்தாள் திருக்குலஞ் செழிக்க மாதோ. ()

நகரநன் கலங்கரித்து நற்றிரு விழாமேற் கொண்டார்
சகஞ்சிறப் புறவுதித்த தநயன்றன் படிவம் பைம்பொன்
நிகர்தர விருத்தலாலந் நேயமைந் தனுக்கு நாமந்
தகுமுருக் குமாங்க னென்னச் சாற்றினர் சான்றோரம்மா. (உகூ)

செல்வமாப் பெற்றசேயைச் செங்கையிற் றாங்கிவேந்துங்
கல்வளைச் செழுங்கைச் சாரு காசினி யென்னு மாதும்
பல்வகைப் படைகள் சூழப்பட்டினந் தனிலிருந்து
தொல்வள வுப்பூருற்றார் தொடர்ந்து தென்றிசை நடந்து. (௩0)

வேறு.

ஓகை கூர்ந்தந்த வுப்பூர்த் தலத்தினி
லாகு வாகனத் தண்ணன் மலர்ப்பதம்
ஏக சிந்தையுற் றேத்திப் பணிந்துதம்
மோகச் சேயையும் முன்பணியச்செய்தார். (௩க)

ஒத்து வெய்யி லுகந்தவி நாயகக்
கத்தன் றன்னையக் காவல னோக்கியே
யத்த வாண்டருள் வாயெங் குலத்தினை
பித்த ரைக்கணென் றேத்தி யிறைஞ்சினான். (௩உ)

அன்ன வண்ணமே யாகுக வென்றனன்
சொன்ன நான்கு சுருதி முடியினில்
மின்னு மாதங்க மெய்வத னங்கொண்டே
யன்னையா யுயிர்க்காருங் கணேசனே. (௩௩)

இந்த மாற்ற மியம்பலு மேரம்பற்
கந்த வாண்டகை யம்பொன் னவமணித்
தந்த நற்கவ சங்குண்ட லாதிபல்
செந்திருக்கலன் செய்தணிந் தானரோ. (௩௪)

பின்னு மந்தப் பிரான்றனிக் கோயிலைப்
பொன்னி லங்கப் புதுக்கித் திருப்பணி
மன்னச் செய்து மகிழ்பிர மோற்சவந்
தன்னை யாற்றச் சமைந்தனன் ஞான்றலே. (௩௫)

உச்ச வத்தின் முதற்றினத் தும்பர்மே
வுச்சி தக்கொடி யோங்கிட வேற்றியே
மெச்சு புட்ப விமான விழாவினை
முச்ச கந்தொழ முன்னர் முடித்தனன். (௩௬)

பூத வாகனம் பொற்பிரண் டாந்தினம்
மாத ராளியின் வாகன மூன்றினில்
ஓதும் ஆகு வுயர்நான்கி லைந்தினில்
மீதியானை விழாவு மியற்றினன். (௩௭)

ஆறி லேறு மணிமயி லேழினில்
கூறு மெட்டிற் குதிரையின் வாகனச்
சாறு நன்கு தழைக்க வியற்றினன்
வீறு பெற்றுயர் விண்ணவர் போற்றவே. (௩௮)

தேர்ந்த வொன்ப தெனச்செப்பி டுந்தினஞ்
சார்ந்த சிங்க மதிமுன் சதுர்த்தியாச்
சேர்ந்த நன்மை செறியு நாளாதலை
ஓர்ந்து வெய்யி லுகந்தபி ரான்றனை. (௩௯)

மணியுலாவு மகாரத மீதிலே
யணியுலாவவைத் தாந்திரு வீதியிற்
பணிய வேவல மாகப் பவனிவந்
தணியெ ழிற்*றளி சேர்த்தன ளங்கரோ. (சo)

அறையும் பத்தி லரிய மகோததித்
துறையி னற்றீர்த்த வாரிச்சுபோற்சவ
நிறைவு மீற்றி னெடுங்கொடி தாழ்த்தலும்
முறையின் வேந்தன் முடித்துக் களித்தனன். (சக)

ஆளவி லானந்த மார்ந்துமின் றத்தையாங்
கிளவி யாளொடுங் கீர்த்திச் சுதனொடும்
பளகறப்பெரு மானைப் பணிந்துதன்
வளநகர்க் கந்த மன்னவன் மீண்டனன். (சஉ)

நாடு சேர்ந்த நராதிபன் ஆனந்தக்
கோடி லாத குரவையுண் மூழ்கியே
நீடி ராச்சிய பார நிலைத்திடக்
கூடு மாட்சி குயிற்றியுய்ந் தானரோ. (சரு)

வீமராசன் புத்திரப் பேறு பெற்றபடலம் முற்றிற்று.

ஆ_ செய்யுள் (ரூா).

—ஃ—

தீர்த்தவிசேடப் படலம்

பூமனுயொரு புத்திரனைப்பெற்ற
வீமராசன் வியன்கதை யோதினுஞ்
சேமம்பாவையுஞ் சேர்க்குந்தீர்த்தங்களின்
மாமகத்துவ மான்மியமோதுவாம். (க)

விநாயகதீர்த்தம்.

தூபதா முப்பூ ரென்னத் துலங்குமித் திருத்தலத்தில்
மேயகம் வெயிலுகந்த விநாயக விமலன் பொற்பார்
கோயில்வா யுள்ள நன்ம கோததி யெனக் கூறும்வி
நாயக நாமதீர்த்த மாட்சியார் நவில வல்லார். (உ)

* தளி—கோயில்.

அவ்வெழிற் றீர்த்தந்தன்னி லொருமுறை யாடப்பெற்ரோர்
இவ்வுல கினிலெத்துன்பு மின்றிநீ டாயுளோடு
செவ்வறம் பொருளின்புற்றுச் செழித்துவாழ்ந் தடைவரீற்றில்
எவ்வுல கிற்குமேலா யிலகும்வீ டென்ப மாதோ. (௩)

இனம்படி வார்க்கித்தீர்த்தந் தருமத்தைத் தருத லாலே
இனிப்புறு தருமதீர்த்த மென்பநற் பொருளீந் தோம்பும்
வனப்பினு லருத்ததீர்த்த மென்பமா வையத்தின்பம்
மனப்படி வழங்கலாலே வண்காம தீர்த்தமென்ப. (௪)

முடிவில் வீடுதவுஞ்சீரால் மோக்கதீர்த்தம் மீதென்றும்
படிமிசை மெய்ம்மை யோர்ந்த பருணிதர் பகரலுற்ருர்
அடிநடுமுடிவிலாத வாதியாஞ் சோதியெம்மான்
நெடிதுவந் தருளத் தீர்த்த நீர்மையை நிகழ்த்த வாமோ (௫)

கும்பநோய் தொழுநோயோடு குட்டநோய் முடநோய்பொல்லாக்
கம்பநோய் கழலைப் வாட்டுஞ் சுரப்பெனுங் கவலைப் மற்றும்
வெம்புநோய் கண்ணைப் வெட்டைநோய் முதலியதீர்த்தாளு
மொய்ம்பதற் கிருப்பின்வேறு முகமனு மொழிபவுண்டோ. (௬)

வேறு.

நேமமின்றியு மதிற்குடைந் தாடுவா னினைக்கும்
பாம ரர்க்குமத் தீர்த்தமம்வெம் படுநர குய்க்குங்
காம மாதிய வுட்பகை யாறையுங் கடிந்து
சேம நல்குமே லதன்புகழ்தெரித்திடற் கெளிதோ. (எ)

மீளு தற்கரும் வெந்நரகதில்விழச்செய்யுங்
கோளுங் கள்ளமுங் குருசிந்தை யுங்கொடுங் கொலையும்
*ஞாளி மாந்தலு மெனநவில் பாதக மைந்தின்
மீள வேசெயு மேன்மையு மதற்குள தம்மா. (அ)

பின்னு மப்பெரும் புண்ணியப் பீடுறு தீர்த்த
மன்னு மாவுப பாதகந் தன்னையு மாய்த்து
நன்னர் நல்குமென் றளவறு வேதங்க ணயந்து
பன்னு மேலதிற் படிபவர் பான்மையார் பகர்வார். (௯)

*ஞாளி—கள்.

அறவி யல்பினின் றடிபெயர்ந் தவரறு பவிக்கும்
பிறவி யேழுஞ்செஞ் சுடரினிற் பெய்ததூ செனமாய்
வுறவ ளிக்கவும் வல்லதவ் வொண்புன லுவந்தென்
றறவ ரோதுவ ராழ்கட லவனியி ன்மீதே. (க௦)

இன்னு மவ்விநா யகவெழிற் றீர்த்தத்தி னுனஞ்
சின்ன நீங்கிடச் செய்ததன் றிருக்கரை தங்கித்
தென்னமர்ந்ததம் பிதிரரைச் சிந்தையிற் கொண்டு
சொன்ன நற்சிரார்த் தஞ்செயிற் சுகம்டை வாரால். (கக)

வேறு.

இரணியசி ரார்த்தமொடு மியலாமசிரார்த்தம்
அரணியனு மன்னசிரார்த் தம்பரிவி னாற்றிக்
கரணியிற்பிண் டந்தரினத் தக்கவர்தஞ் சாபம்
அருணன்முன்னி மம்புரைந் தகன்றொழியு மன்றே. (க௨)

அதிர்கடனெ டும்புவி யகத்தருள் சுரந்தே
பிதிரர்கடஞ் சாபமது பேர்ந்தொழியி னிங்குச்
சதுர்பெறுநற் சந்ததிதான் தழைத்தழிவி லாது
வதிதரும்புகழ்நிறுவி வாழ்வரினி தம்மா. (கங)

சூரிய தீர்த்தம்.

நல்வெயிலு கந்தநம்வி நாயகவம் மான்றன்
வில்விரிம திற்றளித்தென் மேற்றிசைக்கண் மேனாள்
பல்வளஞ்சி றக்கவெம்ப வப்பிணிப றக்க
வல்வழங்கு தீர்த்தமுமொன் றேய்ந்துளது மாதோ. (க௪)

கண்ணுநர்த மக்கவர்க ளுடுநல னெல்லாந்
தண்ணளியி னீந்தருளுஞ் சத்திநனி வாய்ந்து
விண்ணகமு மண்ணகமு மேவியுறை கின்ற
புண்ணியதீர்த் தங்களிற் பொலிந்ததிது வாமால். (கரு)

குலந்தரச்செல் வந்தரக்கு ணந்தர விரும்பும்
பலந்தரப்ப வந்தெறுமெய்ப் பாக்கியமு நல்கும்
நலந்தரவிங் குள்ளவிந்நற் றீர்த்தமுறு நாமம்
பொலந்தரவோங் குஞ்சூர்ய புட்கரணி யென்பார். (க௬)

வேறு.

தீதற வொருமுறை யிதிற்றிளைத்தவர்
பாதக மைந்தையும் பாறச் செய்திடும்
மீதுளதாமிது பெற்ற மேன்மை போல்
மேதகப் புனலெது மேய தென்பரால். (கஎ)

நற்புன லாமித னுமஞ் சொற்றவ
ரற்புத விந்திர பதவி யாளுவார்
பொற்புறக் கண்டவர் போதன் றன்பதம்
வற்புறப் பெறுவது வாய்மை யாமரோ. (கஅ)

ஈங்கிதைத் தொட்டவ ரிணையில் விண்டுவி
னோங்குமெய்ப் பதவியி லுறுவர் மூழ்கினோர்
பாங்குட னற்சிவ பதவி யெய்துவார்
தீங்கற வெனமறை தெரியச் செப்புமால். (கசு)

தோய்ந்திதில் வரும்வளி யொருவன் றெக்கினி
லேய்ந்திடிற் சுரருல கிருக்குந் தோயத்தில்
மேய்ந்துறு காலவன் மேனி யிற்பட
வாய்ந்துகற் பகத்தரு நீழல் வாழுவான். (உ0)

துங்கவிப் புனலினோர் துளியுட் கொண்டவன்
புங்கவ ருறைதரு முலகிற் போயவண்
தங்கமு தருந்துவன் சங்கை யின்றியிம்
மங்களத் தீர்த்தமார் மகிமை யீதரோ. (உக)

இலக்குமி தீர்த்தம்.

முன்னொர்ஞான்றுமா மகளொருகாரண முறையால்
மன்னுதன் *றவன் மார்பினைவிட்டகன் றிம்பர்த்
தென்னவன்றிரு நாட்டிலவணபுரஞ் சேர்ந்து
முன்னவன்வெயி லுகந்தவன்முன்னர்வந் தடைந்தாள். (உஉ)

வந்தவத்திரு மாதுமுன்னோனடி மலரை
வந்தனம்புரிந் தெந்தையித்தலத்தியான்வண்மை
யுந்துநின்றனைக் குறித்துமெய்த்தவத்தினை யுஞற்றச்
சிந்தையுற்றனன் செய்தருளாஞ்ஞையென் றிசைத்தாள். (உங)

* தவன்—நாயகன்.

வேறு.

அவ்வெயிலுகந்தமுன்னே னவள்முகந்தன்னைநோக்கி
யிவ்வனந்தன்னில்யான்மே வித்தளிதனக்குமேல்பால்
செவ்வியபன்னசாலை செய்துநீயதிலிருந்து
திவ்வியதவஞ்செய்யெல்லாச் செல்வமும்பெறலாமென்றான். (உ௪)

இன்னணம்வெயிலுகந்தா னிசைத்தருளலுமேயந்தப்
பொன்னவள்வணங்கியேத்திப் புறம்போந்துகுடபால்மேவிப்
பன்னசாலையையுண்டாக்கிப் பகரதற்கெதிரிற்றாய்மை
மன்னுமோர்தடமுண்டாக்கி மகிழ்ந்ததிற்படிந்துபின்னர். (உ௫)

நற்றவஞ்செய்துமுற்ற நம்வெயிலுகந்தமூர்த்தி
யுற்றுமுன்வந்துதோன்றி யுனதுநாயகன்மார்பத்தைப்
பெற்றுமுன்போலுறைந்து பெட்பொடுவாழ்கவென்று
பொற்றொடித்திருமகட்குப் புகன்றருள்புரிந்தான்மாதோ. (உ௬)

பின்பரவிந்தவீடு பெற்றவள்தன்மணாள
னன்புறவந்துதோன்றி யத்தத்தைத்தன்கரத்தா
லின்பொடுபற்றிமார்பி லிருந்துறவணைத்துக்கொள்ள
மன்பெருமிதத்துமுன்போல் மகிழ்ந்துவீற்றிருந்தாள்மன்னோ. ()

அத்திருமாதுண்டாக்கு மத்தடம் வையகத்தி
லெத்தடத்தினுக்குமேலா யியலுமான்மியத்ததாகுஞ்
சித்திகளியாவுநல்குஞ் சிறப்பினைப்பெற்றுயர்ந்த
தத்தடமேன்மைபல்ல வவற்றையும்புகல்வாமன்றே. (உ௮)

அரிதுமானிடப் பிறப்பதிலரிதுசைவச்சார்
பரிதுமாசிவதலவிருப் பதில்முன்னேன்றான
மரிததாகுமுப்பூரிருப் பரிது*மாநீராட்
டரிதுசிங்கமாதக்கடைச் சுங்கனாளரிதே. (உ௯)

அன்றையத்தின மூமனுமந்தணனொருவன்
முன்திருத்தட மூழ்கினன் மூழ்கலு மூகை
யொன்று தன்மைபோ யோங்குவாசாலகனாகி
நன்றுபேசினனத்தட மேன்மையார் நவில்வார். (௩0)

---

* மாநீர் ஆட்டு—இலக்குமி தீர்த்தம் ஆடல்.

வேறு.

உலகுபுகழ்வசிட்டமுனிக் கொருதனையைவாமனனுக் குரிய தேவி, நிலவுசுமுகைப்பெயராள் மகப்பேறுகருதியிந்த நெடுநீர் வைப்பிற், குலவியகோகரணதலத் திருந்துசிவபெருமானைக் குறித் துட்கொண்டு, சலனமறவாயிரமாஞ் சமையளவுந்திட்டமுறுநற் றவஞ்செய்காலை. (ருக)

சந்திரசேகரப்பெருமான் வயோதிகனாய்வந்தந்தத் தவஞ்செய் வாள்முன், பைந்தொடியித்தீங்கனியுண் டிடுகவெனத்தந்திடவப் பாவைகோபித், தந்தணநீயாரெனது தவமெண்ணுதிப்பலத்தை யருந்துகென்று, தந்தனையென்றதைவாங்கி நிலததிலெறிந்தாள தனைத் தக்கோன்பின்னும். (ருஉ)

எடுத்திதனையுண்கவென நல்கிடலுமுன்போல வெறிந்தாள மீட்டுங், கொடுத்திதனையுண்பாயேற் புத்திரனுண்டாகுமெனக் கூறக்கேட்டுந், தடுத்தனளிப்படியிருபத் தொருமுறைசெய்திடு மந்தத் தம்பிரானை, யடுத்தறிவாள்சொல்வனெனவெதிர்சென்றுள் மறைந்தானங் கயர்ந்தாளன்றே. (ருங)

என்னிதுவென்முன்னின்ற வேதியனைக்காணேனென் றேங் குங்காலை, மின்னியவிண்வாணிமகா ருனக்குண்டாமவைமரித்து விடுமென்றோத, வன்னதுகேட்டனள்சுமுகை யிதுகாறும்யான் செய்தவ மவமாயிற்றே, யின்னினியோர்மகவில்லா திருப்பதினன் றிறப்பதெனவெண்ணமுற்றாள். (ருச)

அக்கணமேகழுத்தினிடை நாணிட்டுஞான்றுயிரை யகற் றிக்கொள்வான், புக்கனள்மற்றவ்விடத்து மாகாயவாணியுற் றுப்பொன்னனையீ, யிக்கனியுண்பாயிருபத் திரண்டாஞ்சேயுண் டாகுமென்றுநல்கி, யுக்கியது முடன்மரிக்குமரித்தாலு மந்தமக வொன்றிருக்கும். (ருரு)

பூருவபுண்ணியவினையா லெங்கரமுன்னோன்தலத்தோர் புனி ததீர்த்தஞ், சாரவதனான்மீட்டு முயிர்பெற்றே யுய்யுமெனச் சாற் றக்கேட்டா, ளீரமதிச்செஞ்சடையா னின்னருளாலீந்தகனியினி தினுண்டு, பாரமுளகருப்பமுற்றுப் பெற்றமகவெழுமூன்றும் பாறிற்றன்றே. (ருசா)

பின்னிருபத்திரண்டாகுங் கருப்பமுமுண்டாகமனப் பீடுழ யுற்று, மன்னுமவணிருப்பவுளம் வெட்கியிமையோர்நகர மறுகி னூடு, துன்னியுடலிளைத்தகடு பருத்துநடை தளர்ந்துசெலுஞ் சுமுகையென்பா, டன்னையவளெதிர்வந்த நாரதமாமுனிகண்டு சாற்றுகின்றான். (ருஎ)

மானனையாயுன்னது தந்தையும்யானுமுடன்பிறந்தோ மகணி யன்றோ, வீனமிலாதிவ்வுலகிற் றிரிகின்ருயதனுலே யெனக்குமீன, மானதினுலிங்ககன்று மண்ணுலகமடைகின்றே னென்ருனந்த, மானமுனிநாரதனை முகநோக்கிச்சுமுகைமனம் வருந்திச்சொல் வாள. (கூ அ)

ஐயநீ யென்பொருட்டால் வையகஞ்சென்றலையலிவ ணமர்க யான்போயப், பையவே மனிதரில்லா விடந்திரிந்து வருத்தமினும் படுவேனென்று, மையநீர் விழிபொழிய முகங்கோட்டி யுரைத்தி ழிந்து வையமீது, செய்யவார் பொழிற்றண்ட காரணியத்திற்பாண் டித் தெண்ணுடுற்ருள். (கூக)

கருவருந்தியவணீன்ற மகவுமரித்திடக்கலங்கிக் கலுழ்ந்து நின்ருள், மருவுசவுநகமேட்டி யிவள்முனமோர்சிவநிசியின் மறை யோர்தம்பால், வருசிறுவர்தமைக்கொன்று கலன்கவர்ந்தகொடு மையினுல் வந்தபாவ, மிருபதின்மேலிரண்டாவ தாகிவருகுழவி யுமே யிறந்ததம்மா. (சo)

அழுதலற்றிமரித்த குழவியைமார்பி லணைத்தன்ன ளந்தோ பாரிற், குழவியிலாதிருப்பதினுங் குளத்தில்விழுந்துயிர்விடுதல் குணமாமென்று, தழுவியகைச்சேயினெடு செல்வாளமுன் புண் ணியநீர்த் தடாகமொன்று, தொழுதகுமி லவணபுரவிநாயகன்ற னருளினெதிர் தோன்றிற்றம்மா. (சக)

மருவியவிலவணபுரச் சினகரத்தின்குடபாலில் வானோர் போற்று, மரியவிலக்குமிதீர்த்த மாகுமதன்படித்துறையி னருகே வந்தாள், பிரியமுறமார்பினில்வைத் தணைத்தவுயிரிழந்தசிறு பிள் ளையோடு, பொருவருமப்புண்ணியநீ ரினில்வீழ்ந்தாள்சுமுகை யெனும் புனிதமின்னுள். (சஉ)

வேறு.

வீழ்விலா வெயிலுகந்த விநாயகனருளினுலே
யேழ்நதிப்புனலின்மிக்க விலக்குமிதீர்த்தந்தோய்ந்த
போழ்துயிர்மரித்தசேய்க்குப் போந்து*கையடித்துத்துள்ளிச்
சூழ்தரவிரைந்துமார்பிற் றணைக்கரங்கொண்டணைத்தாள். (சங)

பிறவியந்தகன்கண்பெற்ற பெற்றியும்பெரிதோர்வைப்பு
வறியவர்க்கெளிதில்வாய்த்த வண்மையும்போன்றடங்காச்
செறிதருமின்பம்பூத்த சிந்தையளாகின்ருள்
துறவுறுவசிட்டனீன்ற சுதையெனுஞ்சுமுகைமாதோ. (சச)

*போந்து—புகுந்து, உயிருண்டாகியெனக்கொள்க.

வருந்துறமகளிர்க்குற்ற மலட்டுநோயொழித்துப்பெற்ற
மருந்தனவீந்தசேய்க்கு மன்னுயிரளித்துச்சித்தி
புரிந்தருள்வெயிலுகந்தான் பொற்புறுகோயின்மேல்பால்
திருந்திலக்குமிதீர்த்தத்தின் சிறப்பெவர்செப்பவல்லார். (சரு)

இலக்குமிதீர்த்தமாடற் கெண்ணியாங்கெழுந்தாராயி
னலத்தகுகங்கையாடு நன்னலம்பெறுவர்மூழ்கிற்
குலத்தலைமுறையேழுய்யுங் கூறியவிதியாற்றோய்ந்தத்
தலத்துமுத்தினம்வசித்தார் தமக்கிடஞ்சுவர்க்கமென்ப. (சசு)

பூரணைதன்னிலந்தப் புண்ணியதீர்த்தமாடிற்
றூரணையாகநோற்றுச் சதமகஞ்செய்தோராவ
ரீரமாமதியென்றாழை யிராகுகேதுண்கான்மூழ்கின்
வாரிசமறையோன்மாலோன் வான்பதம்பெறுவரன்றே. (சஎ)

பொருந்துமத்தோதயஞ்சேர் புண்ணியமகோதயத்திற்
பரிந்துசங்கற்பமாதி பகர்ந்துநானஞ்செய்வோர்தாம்
விரிந்தபாற்கடலுட்சேடன் மீமிசைத்துயிலுமார்பிற்
பெருந்திருவாழ்வெள்*ளேற்றான்பி றங்குவான்பதத்தைச்சேர்வார்

கண்ணுசெங்கதிர்காண்முன்னைங் கடிகையினானஞ் செய்தப்
புண்ணியதீர்த்தத்துற்றுப் பூதிகண்டிகை புனைந்து
நண்ணுமைந்தெழுத்தைநாவா னாடியுச்சரிக்கிலொன்றுக்
கென்றுறுமயுதமாகி யேற்றமாம் பலன்வந்தெய்தும். (சகூ)

மாளையபக்கத்துற்றோர் வைகறை நானஞ்,செய்தந்
நீளுறுதீர்த்தந்தன்னி னினைந்திரணிய சிரார்த்தங்
கோளில்தென்புலத்தார்க் கீயிற் குலத்தினிலேழுமூவர்
மீளுவர் பவர்க்கநின்று மேவுவர் சுவர்க்கமன்றே. (ருo)

மேம்படுகுருவுஞ்சோம வாரமும் விரவுங்காலப்
பூம்புனற்றீர்த்த மூழ்கிப் புகழ்வெயிலுகந் தான்பாத
மாம்படி யருச்சித்தன்ன மந்தணர்க்களிப்பராயிற்
றேம்புறு பிறவிநோயுஞ் சிதைந்துயர் முத்தராவார். (ருக)

---

*ஏற்றான்—திருமாலாகிய இடபமுடையவன்.

துன்னுபூரணையினேடு சுங்கனுளுற்ற போழ்தந்
நன்னெறித்தீர்த்தமாடி நம்வெயிலுகந்தானுக்கு
நன்றுகுளான்னஞ்சூதத் துதிர்கனி நைவேதித்துக்
கன்னியரானேர்க்கீயிற் கருதியவெல்லாஞ்சாரும். (ருஉ)

இன்னதீர்த்தத்துண்மூழ்கி யெந்தையாம்வெயிலுகந்த
முன்னவன்றன்னைப்பூசை முறைமையிற்செய்துபோற்றிப்
பொன்னகர்மன்னனாதிப் புலவர்மாமுனிவரேனேர்
உன்னியவெல்லாமெய்தி யுவப்பரேலுரைப்பதென்னே. (ருங)

தீர்த்தவிசேடப்படலம் முற்றிற்று.

ஆ செய்யுள் ருரு.

தலவிசேடப் படலம்.

ஓமெனும் பிரணவ வுருக்கொ டெங்கணுந்
தோமற நிறைந்தொளிர் சுயம்பு வாயுயர்
மாமுக மூர்த்தியை வணங்கி யுய்குவான்
காமுற லாயினன் *கனலி முந்தை நாள். (க)

எத்தலத் திவ்வுய ரிறைவற்போற்றுதும்
பத்தியி னென்றவன் பரந்த பாரெலாஞ்
சித்தமொத் தோடினன் றிரிந்து கண்டனன்
முத்திவீ டனையநன் மூதுப் பூரையே. (உ)

பார்த்தவன் றேடிய பாக்கி யத்தொரு
நேர்த்தியும் புனிதமு நிறையுப் பூரினுஞ்
சீர்த்ததொன் றில்லெனத் தேர்ந்தங் கெந்தையை
யார்த்தியி னேத்தியுற் றூனற் பேறெலாம். (ங)

சூரிய னிவ்வணந் தொழுது தன்னுளங்
கூரிய யாவையுங் கொண்டுய்ந் தானெனில்
நேரிய லத்தல நெடிய வைபவச்
சீரினை விரிவுறச் செப்பல் வேண்டுமோ. (ச)

* கனலி—சூரியன்.

மீயகம் பணியுமவ் வெயிலு கந்தவி
நாயக மூர்த்தியை நன்ம னத்தோடு
தாயக மாகுமத் தலத்தொர் நாளிருந்
தாயக முற்றவ ராக்கஞ் சீரிதால். (ரு)

அன்னவர் தம்முறு மாயு ளுள்வரைப்
பன்னருங் காசியம் பதியில் வாழ்பலன்
தன்னைநன் கெய்தியித் தரையிற்செல்வராய்
மன்னுவ ரென்னநூல் வகுக்கு மாலரோ. (சு)

அன்றியு மங்கொரா துலனுக் கன்பினோர்
நன்றிசெய் திடிற்பிற நற்ற லங்களில்
துன்றியே பற்றறு துறவர்க் கெண்ணிரண்
டென்றுள தானஞ்செய் பலன்வந் தெய்துமால். (எ)

தண்வளர் பிறைவரு சதுர்த்தி நோன்பவண்
திண்வர முறச்செயிற் சேரும் வேறிடத்
தெண்வள முடன்புரி விரத மீந்திடும்
ஒண்வரப் பலனெலா முறுமென் றோதுவர். (அ)

ஏலுமவ் வைங்கரத் தீசன் பூசனைக்
காலுமொண் பேதீ பங்கட் கான்றபொற்
காலொடு குடங்களைக் கலச வட்டிலைக்
கோலமா மணிகளாற் குயிற்றி னோர்களும். (கூ)

பேரிகை முதலிய பிறங்கி யங்களைச்
சீரியைந் திடும்வண்ஞ் செய்து வைத்திடும்
பேரிய லாளரும் பெரும க்ஞசதம்
பாரினிற்செய் துறும் பதவி சாருவார். (க௦)

வேறு

அகில கார ணருமெம் மாற்கிவண்
புகலு மாகுவும் புல்லமுஞ் சிங்கமும்
பகடு மஞ்ஞையும் பாய்பரி தேரொடு
சகல லூர்தியுந் தந்தவ ருய்ந்தவர். (கக)

இத்திருப்பணி யியற்று புண்ணியர்
சத்தியம்பினுந் தாய்கருச் சார்ந்திடா
ரத்தனங்குச பாச னருட்பதம்
நத்திவாழ்வர் நலங்க டழைக்கவே. (கஉ)

சித்தி யத்துட னேருநை மித்தியஞ்
சித்தி யாரும்வை சேடிய மாதிய
சுத்த மேவு விழாக்கள் சுகம்பெற
ஒத்தியற்றுவோ ரொண்மை பெரிதரோ. (கங)

தேவ தேவன் றிருப்பணி யாமிவை
யாவ விற்புரிந் தார்புரி வித்தவர்
தாவி லட்டசம் பதநுந் தழுவிமா
மேவி வாழ்வர் வியன்றிற லுற்றரோ. (கச)

வான்மதிக்குடை நீழலின் வைகியே
தான்மகிழ்ந்து தனியர சாகியெம்
மான்மலர்ப்பதம் வாழ்த்தி வளம்பெற
மேன்மைகொண்டு விளங்குவர் மெய்மையே. (கரு)

இம்மைப் பேற்றி லிவ்வாறுநீ டாயுளூற்
றம்ம கின்றந்தத் தானந்த வாழ்வெனுஞ்
செம்மை யார்முத்திச் செல்வமுந் துய்ப்பரால்
கம்மை யாள்கண நாதன் கருணையால். (கசு)

எயிலுகந்தவி லவணபுரத் திறை
வெயிலுகந்த விநாயகன் மேன்மையைக்
கயிலுகந்த கனியிற் புகன்றனன்
மெயிலுகந்த வியன்றவச் சூதனே. (கஎ)

தலவிசேடப்படலம் முற்றிற்று.

ஆ. செய்யுள் (௫எ0).

முனிவர் பூசவனைப் படலம்.

ஐயமுற்று மறச்செவி யேற்றவச்
செயயசௌநக ராதிச் செழுந்தவர்
துய்பசூதன் றுணைப்பத மன்பொடு
மெய்யுறத்தரை வீழ்ந்து வணங்கினர். (க)

அஞ்சலித்த வருந்தவர்க் காசிகள்
நெஞ்சுவந்தளித் தானெறி நின்றவவ்
வஞ்சவித்தவர் நோக்கி யவன்முகக்
கஞ்சநன்கு களித்திது கூறுவார். (உ)

சேணுநாணுமவ் வுப்பூர்த் திருத்தலங்
காணுமார்வங் கலந்தன மாங்கமர்
மாணுறுங்கரி மாமுகத் தானருள்
பூணுமாறும் புரிந்தரு ளென்றனர். (ங)

சென்றவண்குறை தீர்ந்துய்யு மாவிடை
யின்றருள்கவென் றேத்தலுஞ் சூதனும்
நன்றெனவவ ரோடு நடந்தனன்
தென்றிசைக்கணச் சீர்த்தலநோக்கியே. (ச)

ஏகினர்களெல் லோருந் தென் *மாதிரம்
வாகுறும்பல மாவனந் தாண்டின
ராகுலந்தவிர்த் தாளுநற் பாண்டிய
போகநாட்டிற் புகுந்தனர் பின்பரோ. (ரு)

இங்குநல்ல மகோததி யென்பெயர்
தங்குகீழ்க்கடற் றண்கரை சார்தரும்
மங்குறோய்பொழில் வன்னி வனமெனப்
பொங்குப்பூரினைக் கண்டனர் போற்றினர். (சா)

வேறு.

தழைதரும் வளங்கண் முற்றுந் தாங்கிநன் கருளவ்வுப்பூர்
விழைதரும் வெயிலுகந்த விநாயக ணுலயத்தைக்
குழைதரு மனத்த ராகிக் கொண்டுபே ரன்பு கண்கள்
மழைதர நிலத்தில் வீழ்ந்து வணங்கினர் வாழ்த்தினரால். (எ)

---

*மாதிரம்—திசை.

அம்முதற் பொருளை வேத விதிப்படி யர்ச்சித் தேத்தத்
தம்முள மகிழ்ந்தங்குள்ள தண்யகோ ததியில் மூழ்கி
அம்முது தளிக்கு மேற்கி லமர்ந்த*வா தபதீர்த் தத்துஞ்
செம்மையி னுடி நீறு கண்டிகை சிறக்கப் பூண்டார். (அ)

ஆமுறை யனைத்துஞ் செய்தவ் வருந்தவ ரோடு சூதன்
தோமறப் பூசனைக்காந் திரவியத் தொகுதி யேந்தி
நேமுறத் தளிக்குட் புக்கு நிகமமந் திரங்க ளோதி
நாமுயப் போந்த நல்வி நாயகன் றனைப்பூ சிப்பான். (கூ)

முன்னர்நற் றயிலமாட்டி மொழிதருந்தூய்மைமேவி
மன்னுகவ்வியமைந்தா லு மாண்புறவபிடேகித்துப்
பன்னுபால்தயிராலாட்டிப் பண்புறுதேனுமாட்டித்
துன்னுமுப்பழங்களாலுந் தோய்தரவபிடேகித்து. (கப)

புஞ்சமாங்கனிமூன்றோடு புகலருனெய்தேன்கலந்த
அஞ்சமுதத்தினாலு மாட்டியேகற்பூரத்தின்
விஞ்சுவாசனைகத்தூரி விரவியசந்தனத்தின்
மஞ்சுறுகுழம்பினாலே வண்மையினபிடேகித்து. (கக)

மகநியாசத்தினோடு மாண்புறுமுருத்திரத்தோ
டகமகிழ்சமகமாதி யாகியமந்திரத்தால்
புகரறச்செபித்துப்பூசை புரிந்துவைத்துள்ளகும்ப
நிகரறுதீர்த்தந்தன்னால் நேயமாவபிடேகித்தான். (கஉ)

ஒற்றுடைகொண்டுவெய்யி லுகந்தவன்றிருமேனிக்கண்
ணெற்றியேதுடைத்துப்பின்ன ருயர்ந்தபீதாம்பரத்தைச்
சுற்றியேயிடையிற்கடடித் தூயதாம்விபூதிசந்தம்
நெற்றியிலணிந்துபூண்கள் நிலவுறவணியலானான். (கங)

பல்வகை மலர்க ளாலும் பைங்கல னுடைக ளாலும்
தொல்விநா யகவெம் மானைச் சுடர்தர வலங்கரித்து
மல்வள ரவன்றனுமை மாயிரம் வழுத்திச் செப்பித்
தொல்வகை யினிலர்ச்சித்துத் தூபதீபஞ்சுழற்றி. (கச)

*ஆதபதீர்த்தம்—சூரியதீர்த்தம்.

மோதகஞ் சித்திரான்ன முப்பழ முதல வாதி
வேதனஞ் செழிக்கச்செய்து மேதக வுபசாரங்கள்
ஓதுமோ ரெண்ணிரண்டு முஞூற்றிக்கர்ப் பூரதீபங்
காதலிற் காட்டி முன்னோன் கழலினைத் துதித்துப்பின்னர். (கரு)

வலமது வந்தே யங்கம் மண்ணுற விழுந்து சென்னித்
தலமிசைக் கரங்கள கூப்பித் தாழ்ந்தன விற்கமற்றைக்
குலமுனி வாருமங்கே கோதொரு சிறிது மின்றிப்
பலமுறை யுவந்தர்ச்சித்துப் பணிந்தனர் துதிக்கலுற்றூர். (கசு)

வாரணமுகத்தாய்போற்றி மதம்பொழிகரத்தாய்போற்றி
யாரணமுடியேல்லவைகு மாதியாம்பொருளேபோற்றி
காரணமாயெவைக்குங் காட்சியாய்நிற்பாய்போற்றி
பூரணவெயிலுகந்த போதகமூர்த்திபோற்றி (கள)

இன்னவாறேத்திமுக்க ணிறைவனையிறைஞ்சிநின்று
பொன்னவிர்சடைதாழந்தப் புண்ணியமுனிவரெல்லாந்
தன்னுளத்தெண்ணமுற்றுந் தனித்தனிவேண்டிப்பெற்று
முன்னுறுசூதநாம முனிவனைவணங்கிநின்றூர் (கஅ)

படிதனி லுப்பூர் மேய பகவவை னுகந்த பெம்மான்
அடிதனை வணங்கி யன்னோ ரருளமைந்துகந்த
நெடியமா தவருஞ் சூத நிமலனும் வெற்றி வாய்ந்த
கொடியுடை யவ்வூர் நின்று கூடினர் நைமிசங்கான். (கசு)

வித்தக வெயிலுகந்த விநாயக மூர்த்தி பாதம்
நித்தலு மனத்துட் கொண்டு நினைபவர் நெடுநாளல்ல
வித்தமு மனைமகாரு மேவிவாழ்ந் திசை பரப்பி
யித்தரை யிருந்தவன்ற னெழிற்பத மடைவரம்மா. (உ0)

முனிவர் பூசனைப்படலம் முற்றிற்று.

ஆக செய்யுள் (ருகக).

வாழி.

இலவணபுரமதாகு மியற்பெயருப்பூர்வாழி
வலமிகும்வெயிலுகந்த மாமுகத்தெந்தைவாழி
நலமுறவத்தேவற்கு நற்பணிசெய்வோர்வாழி
மலரகத்தொண்டர்வாழி வையகமெல்லாம்வாழி.

லவணபுரமென்னும்,

உப்பூர்ப்புராணம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

லவணபுரம் என்னும்

உப்பூர்ப் புராண வசனம்.

வெயிலுகந்த விநாயகர் காப்பு.

கலிவிருத்தம்.

மயிலுகந்த வரன்வரு முன்பரன்
கயிலுகந்த கனிபெற் றுளமகிழ்ந்
தெயிலுகந்த வெழில்கொள் ளுப்பூரில்வாழ்
வெயிலுகந்த விநாயகன் காப்பதாம்.

நைமிசப்படலம்.

நவமணிகளால் பிரகாசிக்கின்ற அநேக சிகரங்களையுடையதும் ஊழிக் காலந்தோறும் உயர்வதும் கற்பகத்தருக்கள் கனிந்த கனிகளைத் தரப்பெற்றதும் பற்பல வளமிகுந்ததும் கருடர் சித்தர் தேவர் சாரணர் இயக்கர் முதலியோர் வேதங்களினால் துதிக்கப்பட்டதுமான கைலாசகிரியின் தென்கிழக்கில் பிரமதேவனால் சக்கரமாக்கிவிடப்பட்ட தருப்பைப்புல் நின்ற இடமாகியதும் சிவபிரானுடைய சடாமகுடத்தினின்றும் இறங்கி இமாசலத்தில் தங்கிப் பின்பு சாகரருடைய என்பிற் படிந்து அவர்கள் நற்கதி பெறும்படி இப்பூவுலகத்தில் சஞ்சரிக்கின்ற கங்காநதிக்கரையின்கணுள்ளதும் ஆல் அகில் மூங்கில் கடம்பு புன்னை அரசு வெண்ணாவல் குருந்து திருவாத்தி வில்வம் வேம்பு பலா கொன்றை வன்னி பாதிரி களா மா பனை மந்தாரம் முதலிய மரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தலவிருட்சமென்று காட்டுவதற்கு உதா

ரணமாய் விளங்கப்பெற்றதும் பசுவின்கன்றுகளும் புலிக்குட்டிகளும் ஓர் துறையில் நீருண்ணவும் சிங்கக்குட்டிகள் பெண்யானைகளுடைய முலைப்பாலுண்ணவும் தவஞ்செய்கின்ற முனிவர்களாற் செய்யப்பட்ட யாகப்புகை மேகவாகனமாய்த் தேவலோகத்திற் சென்று தேவேந்திரனை அவிர்ப்பாகத்தைக் கிரகித்துக்கொள்ளும்படிக் கொண்டுவரத்தக்க சிறப்பமைந்ததும் ஆகிய நைமிசாரணியத்தைச் சிவற்சர் சம்பு மௌற்கலர் ஆபத்தம்பர் சவுநகர் முதலிய முனிவர்களெல்லோரும் அடைந்து வியாசமுனிவரது மாணுக்கராகிய சூதமகாமுனிவரைத் தரிசித்து வேதங்களால் தொகுத்துரைக்கப்பட்ட புராணங்கள் அனைத்தையும் விவரணமாய் எடுத்துரைக்கும் முனிவர்சிங்கமே சிவாஞ்ஞையால் உம்மைத் தரிசிக்கப் பெற்றோம் நற்கதியும் பெற்றோம் எங்களுக்கு ஒரு குறையுமில்லையென்று துதித்து வணங்கி நின்று விண்ணப்பம் செய்கின்றார்.

அனைத்திற்கும் முதற்பொருளாய் நின்மல மூர்த்தியாய்ப் பிரணவ சுருபியாய் விளங்குகின்ற விநாயகக் கடவுளின் மான்மியத்தையும் அக்கடவுள் எழுந்தருளியிருக்கின்ற தலங்களுக்குள் ஓர் உயர்ந்த தலத்தின் மான்மியத்தையும் நாங்கள் உணரும்படி உரைத்தருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர்.

வியாசமுனிவரின் மாணுக்கராகிய சூதமகாமுனிவர் பிரணவ வடிவாய் விளங்குகின்ற விநாயகமூர்த்தியின் திருவடிகளை ஒரு முகூர்த்தகாலம் உளமுருகித் தியானித்து மயிர்க்குச்செறிய வேத வியாசராகிய தமதாசிரியரின் திருவடிகளைத் தியானித்துத் திக்கு நோக்கி வணங்கிச் சௌநகாதி முனிவரைப்பார்த்து இருசெவிக்கமுதாய்க் குற்றந்தீரக் கேட்பீராகவென்று விநாயக மான்மியத்தைச் சொல்லச் சிந்தித்துக்கொண்டு, சொல்வாராயினர்.

வியாசமுனிவரால் வேதங்களினின்று தொகுத்துரைக்கப்பட்ட புராணங்கள் பதினெட்டும் உப புராணங்கள் பதினெட்டும் உள்ளன. அவ்வுப புராணங்கள் பதினெட்டினுள் பார்க்கவம் என்றது ஒன்று. அது பிரமதேவர் பிருகுமுனிவருக்கு உபதே

சிக்க அவரால் சொல்லப்பட்டது (பார்க்கவம்) அப்புராணத்தில் விநாயகமூர்த்தியின் மான்மியமும் அவர் எழுந்தருளியிருக்கின்ற தலங்களின் மான்மியமும் விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன.

அவற்றுள் சிறந்த புண்ணிய க்ஷேத்திரமாகிய (லவணபுரம்) என்னும் உப்பூர்த்தல மான்மியத்தையும் அதில் வீற்றிருக்கின்ற (ஆதபேச்சா விநாயகர்) என்னும் வெயிலுகந்த விநாயகமூர்த்தியின் மான்மியங்களையும் சேதுபுராணத்திலுள்ள மான்மியங்களையும் சௌநகாதி முனிவர்களே கேளுங்கள் என்று சொல்லத் தொடங்கினர்.

நைமிசப் படலம்

முற்றிற்று.

விநாயகர் திருவவதாரப் படலம்.

ஐம்புலாதிகளை நிக்கிரகித்து அரிய தவங்களைச்செய்து சிறப்பெய்திய சவுனகாதி முனிவர்களே, விநாயகமூர்த்தியினுடைய புராணக்கேள்வி மகத்துவத்தால் வேதவியாசமுனிவரும் சோமகாந்தராஜனும் பெரும்பேற்றினை அடைந்திருக்கின்றார்கள் அத்தன்மைத்தாகிய மேலான புராணத்தில் பிருகுமகாமுனிவர் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்ற முறைப்படி விநாயகமூர்த்தியின் திருவவதார சரித்திரத்தைச் சொல்லுகின்றேன்.

பூர்வம் ஒரு கற்பத்தில் பராபரப் பொருளாய் எல்லாமாய் எங்கும் நிறைந்த பூரணமாயிருக்கின்ற பிரணவ வடிவாகிய ப்ரமாத்துமாவானவர் நால்வகைத் தோற்றம் எழுவகைப் பிறப்பு எண்பத்துநான்கு நூறாயிரம் யோனி பேதங்களாயுள்ள சீவான்மாக்களெல்லாம் கன்மங்களுக்கீடான சரீரங்களை எடுத்து ஆதிதெய்விகம் ஆதிபௌதிகம் ஆதியாத்மீகம் என்கின்ற தாபத்திர

யாக்கினிகளால் தகிக்கப்படுந் துயரங்களை நீக்கிச் சிறிது இளைப் பாறும்படியாகத் தம்மிடத்தில் ஒடுக்கிவைத்துக்கொண்டிருந்து முன்போலவே அவைகட்குத் தநு கரண புவன போகங்களைத் தந்து கன்மங்களைப் புசிப்பித்து அக்கன்மவொப்பில் மல சம்பந்த மாய் இராநின்ற பாசபந்தங்களைப்போக்கி முத்தியிற் சேர்க்கு நிமித்தம் மீளவும் சிருட்டி திதி சங்காரம் என்கின்ற முத்தொழில் களை நடப்பிப்பதற்குத் திருவுளங்கொண்டு வக்கிரதுண்ட விநா யகர் என்னும் பெயருடன் திருவவதாரஞ் செய்து இராசதம் தாமதம் சாத்துவிகம் என்கின்ற தமது முக்குணங்களினின்று பிரமன் விண்டு உருத்திரன் என்னும் மூவர்கள் உதித்து வருமாறு அவர்கட்கு உருவையும் அறிவையும் உண்டாக்கியருள, அவ்வாறு அவர்கள் உற்பத்தியாகிப் பின்பு தங்களைப் படைத்தருளிய பரப் பிரம சுரூபம் இன்னதென்று அறியவேண்டுமென்று வெறும் வெளிகள் எங்குந்தேடிக்காணுமல் தேவவருடத்தில் ஆயிரவருடம் தவஞ் செய்தார்கள் அத்தவத்திற்குப் பரப்பிரம சுரூபமாகிய வக் கிரதுண்ட விநாயகமூர்த்தி கிருபை சுரந்து கோடி சூரியப் பிரகா சத்தினும் அதிக சோதியை வீசுகின்ற திருவுருவமும் நவரத்தின கிரீடம் குண்டலம் புசகவசம் சரப்பணி பதக்கம் பாதச்சிலம்பு முதலாகிய ஆபரணங்களும் துதிக்கையும் நீண்டு வளர்ந்திருக் கின்ற தந்தங்களும் மதத்தைப் பொழிகின்ற யானை முகமும் கத்தி கேடகம் வேல் வில் என்னும் ஆயுதங்களைத் தரித்திருக்கின்ற நான்கு கரங்களும் தாமரைமலர்போன்ற இரண்டு திருவடிகளும் சந்திர வாரத்தினையும் கொன்றைமாலையினையும் தரித்திருக்கின்ற அழகிய மார்பும் சோம சூரியாக்கினியென்னும் முக்கண்களும் விளங்குந் திருமேனியோடு எதிரில் பிரத்தியக்ஷமாயினர்.

உடன் அம்மூவரும் அச்சமும் அன்பும் உண்டாய்ச் சரீரம் தடுமாற நெக்குவிட்டு நெஞ்சமுருகிக் கரங்களைச் சிரமேல் குவித்த வண்ணம் விரைந்தெழுந்து தங்கள் இச்சையிற்றோன்றியபடியெல் லாம் ஆடிப்பாடி அனந்த முறை வலம்வந்து பூமியில் வீழ்ந்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து ஆனந்தபரவசங்கொண்டு தோத்தி ரஞ் செய்தார்கள்.

இவ்வாறு தோத்திரங்கள் செய்து சகல புவனுதார கர்த்தரே தேவரீருடைய பாதாரவிந்தங்களைத் தரிசித்தவர்களெல்லாம் சகல துன்பங்களும் நீங்கிப் பேரின்ப சுகத்தை யடையத்தக்கவர்க ளாவார்கள். அடியேங்களும் தேவரீரைச் சரணுக அடைந்தோம். யாங்கள் கிருதார்த்தர்களாகும்படிக் காத்து ரக்ஷிக்கவேண்டு மென்று பிரார்த்தித்தார்கள். அவர்கள் மீது விநாயகமூர்த்தி கிருபை வைத்து அன்பர்களே நீங்கள் செய்த தோத்திரங்களுக்கு இரங்கினேம் நீங்கள் கருதிய வரங்களைக் கேட்பீராகவென்று திருவாய் மலர்ந்தருளலும் பரப்பிரம சுரூபியே தேவரீருடைய திவ்விய சரணுரவிந்தங்களில் அடியேங்களுக்குத் திடமான பத்தி யுண்டாகும்படி வரங்கொடுத்துயாங்கள் நடந்துகொள்ளவேண்டிய பணியினையும் அருள் செய்தால் அதை அடியேங்கள் நன்முடி கட்குப் பொன் முடியாகவணிந்து நடாத்திவரக் கடவோமென் ருர்கள். அதற்கு விநாயகக்கடவுள் சந்தோஷித்து நமது முக் குணங்களினின்று முண்டானவர்களே நம்மிடத்து உங்களுக்கு அளவற்ற பத்திகள் பெருகத்தக்கதான வரத்தைத் தந்தோம் நீங் கள் நடந்து கொள்ள வேண்டிய பணியும் சொல்லுகின்றோம்.

அதாவது இராசதவடிவிற்றோன்றிய பிரமனே நீ இராசதத் தொழிலிலிருந்து சகலசீவராசிகளையுஞ்சிருட்டி செய்யக்கடைவை தாமதவடிவிற்றோன்றிய விண்டுவே நீ சாத்மீகத் தொழிலிலிருந்து யாவையும் இரக்ஷணை செய்யக்கடவை, சாத்மீக வடிவிற்ளோன் றிய உருத்திரனே நீ தாமதத்தொழிலிலிருந்து யாவையுஞ் சங்கா ரஞ்செயக்கடவைஎன்றருளிச்செய்து வேதாகமபுராண கலைகளைக் கொண்டு யாவையுஞ் சிருட்டிசெய்யத்தக்க சத்தியைப்பிரமனுக் கும் யோகத்தினல் வேண்டிய வடிவங்களைக் கொண்டு யாவையும் இரட்சிக்கத்தக்க சத்தியை விண்டுவுக்கும் ஏகாக்ஷர சடாக்ஷர மந்திரங்களைக்கொண்டு எங்குந் தானயிருந்து யாவையுஞ் சங்கா ரஞ் செய்யத்தக்க சத்தியை உருத்திரருக்குங் கொடுத்தருளினர்.

இன்னும் விநாயகக் கடவுள் பற்பல அவதாரங்கள் செய் திருக்கின்றனர். அவைகளுள் முன்னெருகாலத்தில் சிந்தாமணி விநாயகர் திருவவதாரங்கொண்டு கபிலமுனிவருடைய சிந்தாமணி

யைக் கவர்ந்த கணராஜனை வென்று அதை மீட்டு அவர்க்களித்த தும் கஜாநநவிநாயகர் திருவவதாரங்கொண்டு பிரமதேவனுடைய கொட்டாவியினின்று முற்பவித்த சிந்தூரனைக் கொன்று தேவர் களைக் காத்ததும் விக்கினராஜவிநாயகர் திருவவதாரங்கொண்டு காலரூபனென்ற வக்கிரனை யழித்து உலகத்தைக் காத்ததும் மயூ ரேசவிநாயகர் திருவவதாரங்கொண்டு வேத சாஸ்திரங்களைத் தேவர்களிடத்தினின்று கவர்ந்த கமலாசுரனைச் சங்கரித்து மீட்டு அவ்வேத சாத்திரங்களை அத்தேவர்கட்குத் தந்ததும் பிந்திய மயூ ரேசவிநாயகர் திருவவதாரங்கொண்டு தேவர்களைச் சிறையில் வைத்த சிந்தாசுரனைக் கொன்று மற்ற அவுணர்கள் செய்யும் மாயையினை யொழித்ததும் பாலசந்திரவிநாயகர் திருவவதாரங் கொண்டு அநலாசுரனை விழுங்கித் தேவர்கள் பூசைகொண்டதும் தூமகேதுவிநாயகர் திருவவதாரங்கொண்டு மாதவராஜனுக்கும் அவன்மனைவி சுமுதைக்கும் தீங்குசெய்த தூமராஜனைக் கொன்று அவ்விருவரைப் பாதுகாத்ததும் கணேசவிநாயகர் திருவவதாரங் கொண்டு திரிபுராதிகளை வெல்லும்படியாகச் சிவபிரானுக்கு அநுக் கிரகித்ததும் கணபதிவிநாயகர் திருவவதாரங்கொண்டு தேவர்களை வருத்திய கஜமுகாசுரனைக் கொன்று விண்டுவின் தாபந் தீர்த்த தும் மகோற்கடவிநாயகர் திருவவதாரங்கொண்டு நராந்தகனையும் தேவாந்தகனையும் நாசஞ்செய்து காசிராஜனுக்கு முத்தியளித்த தும் துண்டிவிநாயகர் திருவவதாரங்கொண்டு துராசதனை வென்று திவோதாதன் மனதைத் திரித்து விசுவநாதமூர்த்திக்குக் காசிநக ரைக் கொடுத்ததும் வல்லபைகணேசர் திருவவதாரங்கொண்டு மரீசிரிஷி புத்திரியாகிய வல்லபையையும் விண்டு புத்திரிகள் பன் னிருவரையும் திருமணஞ் செய்து அவ்விண்டுவுக்கு யோகஞான தத்துவமென்கின்ற கணேச கீதையை உபதேசித்ததும் ஆகிய அவதாரங்களும் உள்ளன.

விநாயகர் திருவவதாரப் படலம்

முற்றிற்று.

—௬௨—

சூரியன் உபாசித்த படலம்.

முன்னொருகாலத்தில் பிரமபுத்திரனாகிய தக்கனென்பவன் தன்புத்திரியாகிய தாக்ஷாயணியைச் சிவபெருமானுக்குத் திருமணம் புரிவித்து எத்தேவர்க்கும் மகாதேவனாகிய சிவபெருமானை மருகனென்னும் முறையால் தன்னிலுந் தாழ்ந்தவனென்றெண்ணி யிகழ்ந்துவிட்டு மற்றைய விண்டு முதலிய இழிந்த தேவர்களையே தலைமையாகக்கொண்டு ஒரு யாகஞ்செய்யத் தொடங்கி யாகபதியாகிய சிவபெருமானுக்கு அவிற்பாகங் கொடாது மறுத்து மற்றத் தேவர்களுக்கெல்லாம் அவிற்பாகங் கொடுக்க அத்தேவர்களும் சிவபிரானை மதியாது வாங்கியுண்டனர். அதனைச் சிவபிரானுணர்ந்து திருவுளஞ்சினந்து அவ்வேள்வியைச் சிதைக்க வீரபத்திரக்கடவுளை யுண்டாக்கிவிட அவர் வந்து அவ்வேள்விச்சாலையிற் புகுந்து எல்லாவற்றையும் அழித்து அவிற்பாகம் பெற்றுண்ட ஒவ்வொரு தேவருக்கும் ஒவ்வொரு தண்டனை செய்தனர். அத்தேவருள் ஒருவனாகிய சூரியதேவனை வீரபத்திரக்கடவுள் கொடிற்றில் உதைத்தனர், அவன் வாயிலுள்ள பற்கள் உதிர்ந்தன. அதனால் மிகுந்த துன்பமும் அவமதிப்புமடைந்து வருந்தி அச்சூரியதேவன் கைலயங்கிரியையடைந்து சிவபெருமானைத் தரிசித்து வணங்கி நமஸ்கரித்துநின்று துதித்துப் பிரார்த்திக்கின்றனன்.

68489

அதாவது எத்தேவர்க்கும் மேலாகிய பரம்பொருளே நீயே எத்தேவர்களுக்கும் மகாதேவனென எல்லா வேதமுடிகளுஞ் சொல்லி இருக்கின்றதை யான் உணர்ந்திருந்தும் அறிவில்லாமல் மகாபாவியாகிய கொடிய தக்கனது போதனையால் விண்டுமுதலிய தேவர்களுடன் கூடி அவனது வேள்வியின் அவியை யேற்றுண்டனன் அக்குற்றத்திற்கு வீரபத்திரக்கடவுளால் பல்லுகள் உடைபட்டனன் அது நிற்க அந்த அவியை உண்ட அபராதத்தைப் போக்கிக்கொள்ளாவிடில் எனக்குமேற்கதி எங்ஙனம் கிட்டும் ஆதலால் அவ்வபராதத்திற்குப் பிராயச்சித்தம் திருவாய்மலர்ந்

தருளவேண்டுமென வேண்டிக்கொள்ளப் பராத்பரம் பொருளாய் விளங்குகின்ற சிவபெருமான் சூரிய தேவனது வேண்டுகோளுக் கிரங்கி அவன் தமது முக்கண்களில் வலக்கண்ணாகிய தன்மையை யும் திருவுளங்கொண்டு அவனிடத்துக் கிருபைசுரந்து அவ் வபராதத்திற்குக் கழுவாய் சொல்லுகின்றனர்.

உலகத்திலுள்ள சீவகோடிகளுக்கிழைத்த அபராதத்தாலா கும் பாவத்தைச் சாமானிய தேவர்கள் தீர்ப்பார்கள் அத்தேவர்க ளுக்கிழைத்த அபராத பாவத்தை நாம் தீர்ப்போம் நமக்கிழைத்த அபராத பாவத்தைப் பராபரப்பொருளாய்ப் பிரணவ ரூபியாகிய விநாயகமூர்த்தியே தீர்த்தலன்றி நம்மால் இயலாது. ஆதலால் அவ்விநாயகமூர்த்தியை உபாசித்துத் தீர்த்துக்கொள்வாய் என் றருள, அதுகேட்ட சூரியதேவன் சாஷ்டாங்கமாய் வீழ்ந்து பணிந்தெழுந்து நின்று சிவபெருமானை நோக்கி அங்ஙனம் யான் எத்தலத்திலிருந்து விநாயகமூர்த்தியை உபாசித்துச் சித்திபெறு வது அதையும் அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று வேண்டச் சிவபெருமான் அதனையுந் திருவாய் மலர்ந்தருள்வதாயினர்.

செந்தமிழ் வளங்களும் நானில வளங்களும் நிறைந்து செ ழித்திருக்கின்ற பாண்டிநாட்டின்கண் கீழ்கடலாகிய மகோததிக் கரையில் சேதுமூலமாகிய தேவிபுரத்துக்கு ஒருயோஜனை வடக் கிலும் காளிபுரத்துக்கு இரண்டுயோஜனை கிழக்கிலும் திருப்புன வாயிலுக்கு ஒருயோஜனை தெற்கிலுமுள்ளது ஒருவனம், அது வன்னி மந்தாரவனம் அவ்வனம் மகாபுண்ணிய பூமியாயும் தவஞ் செய்வதற்குப் பரிசுத்தமானதாயும் நின்மலமாயும் செய்யுந் தவங் களை விரைவில் சித்திபெறச் செய்வதாயும் உள்ளது. அவ் வனத்தை நீயடைந்திருந்து விநாயகமூர்த்தியை உபாசிப்பையா யில் அவர் பிரத்தியட்சமாய் உன் குற்றமுழுதும் போக்கி உனக்கு நற்கதியும் அருளுவரென்று திருவாய் மலர்ந்தனர்.

அவ்வாஞ்ஞையைச் சூரியதேவன் சிறமேற்கொண்டு தென் றிசையை நோக்கிச்சென்று பாண்டிநாட்டையடைந்து அந்நான் கெல்லைக்குட்பட்ட அவ்வனத்தைச் சார்ந்தனன். சார்தலும் அச் சூரியதேவன் தன்மனம் நிர்மலமாய்ப் பரிசுத்தமாய்க் களங்கமற்

திருப்பக்கண்டு இத்தலமே தவசித்திகரமென்று அவ்விடத்தில் மகோததிக்கரையில் தங்கி இருந்துகொண்டு விநாயகமூர்த்தியை உபாசிக்கத்தொடங்கி அவ்விடத்தில் ஒரு தீர்த்தம் உண்டாக்கி முதலில் சங்கற்ப பூர்வமாய் மகோததியில் நீராடிப் பின்பு தன்னாலாக்கப்பட்ட அத்தீர்த்தத்திலும் சங்கற்பத்துடன் மூழ்கிப் பட்டாடையுடுத்து விபூதி ருத்திராட்சம் தரித்து நித்திய கருமம் முடித்துக்கொண்டு அத்தீர்த்தத்திற்கு வடகீழ்க்கரையும் கடற்குமேல்கரையுமாகிய அவ்விடத்தில் ஒருபன்னசாலையமைத்துக்கொண்டு ஏகாக்கிரசித்தமாய் மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூகரம் அநாகதம் விசுத்தி என்னும் ஐந்தாதாரங்களின் வழியாய்ச்சென்று அதற்குமேல் புருவமத்தியில் ஆயிரவிதழ்த் தாமரைமலர் வடிவாகிய ஆக்கியாசக்கரத்தில் பரப்பிரமமாய்ப் பிரணவாகாரமாயுள்ள விநாயக மூர்த்தியைத் தியானிக்க அம்மூர்த்தி நீண்டு வளர்ந்திருக்கின்ற துதிக்கையும் தந்தங்களும் மதத்தைப் பொழிகின்ற யானைமுகமும் பாசம் அங்குசம் தாமரைமலர் மோதகம் தரித்த நான்கு கரங்களும் தாமரைமலர்போன்ற இரண்டு திருவடிகளும் உள்ள தேசோமயமான திருமேனியோடு பிரத்தியட்சமாயினர். சூரியதேவன் அங்ஙனம் காட்சிதந்தருளிய விநாயக மூர்த்தியைச் சாஷ்டாங்கமாய்ப் பணிந்தெழுந்து பன்முறை துதித்து ஓ பராபரப்பொருளாகிய விநாயகப்பெருமானே தக்கன் என்பான் சிவபெருமானை நிந்தித்து விலக்கி மற்றையதேவர்களை வைத்துக்கொண்டு ஓர் யாகஞ்செய்ய அதில் யானும் அறிவில்லாமல் உணவின் ஆசையால் சேர்ந்திருந்த குற்றத்திற்காக வீரபத்திரரால் பல்லுடைபட்டும் சிவநிந்தாபராதம் நீங்கிற்றில்லை ஆதலால் சிவபெருமான் ஆஞ்ஞைப்படி உன்னைச் சரணாயடைந்தேன் அச்சிவநிந்தாபராத பாவத்தைத் தீர்த்தருள்கவென்று பிரார்த்தித்துக்கொண்டனன்.

விநாயக மூர்த்தி கிருபைகூர்ந்து சூரியதேவனை நோக்கி இத்தலத்தில் நம்மை விதிப்படிப்பூசித்து ஆராதிப்பையாகவென்றருளினர். சூரியதேவன் அங்குத் தன்முன் காட்சிதந்தருளிய விநாயக மூர்த்தியைத் தைலம் பஞ்சாமிர்தம் பால் தயிர் தேன் சந்தன முதலிய பதார்த்தங்களினாலும் வேதமந்திரங்களினால் செபிக்கப்

பட்ட கும்பசலத்தினாலும் அபிஷேகித்து ஆடையாபரணங்களி னால் அலங்கரித்துச் சந்தனமணிந்து வன்னி மந்தாரம் அறுகு முதலிய பத்திரங்களால் விநாயகமூர்த்தியை அவரது ஆயிரநாமங் களை யுச்சரித்துத் தனது ஆயிரங் கதிர்க்கரங்களாலும் அர்ச்சனை செய்து தூப தீபாராதனைசெய்து அறுசுவைப் போனகங்களையும் மோதகம் தேங்காய் முப்பழம் விளாம்பழம் நாவற்பழம் முதலி யவைகளையும் நிவேதித்துச் சோடசோபசாரங்களுஞ் செய்து கற்பூர நீராஞ்சனஞ்செய்து பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து பன் முறை துதித்துப் பிரார்த்தித்து நின்றனன்.

மகா கிருபாசமுத்திரமாகிய விநாயக மூர்த்தியானவர் சூரிய பூசைக்குத் திருவுளமுவந்து நமது வலக்கண் மணியாகிய தின கரனே சிவநிந்தாபராத மகாபாவியாகிய தக்கனுடன் சேர்ந்த உனது மகா பாதகமானது சிவபிரானாலும் தீர்க்கமுடியாததுதான் ஆயினும் அதை இத்தலத்தில் எம்மை நீ இந்தவிதிப்படி பத்தி யுடன் பூசித்ததினால் உன்னை விட்டொழித்துவிட்டோம் இனி நீ மேற்கதியும் பெறக்கடவை யென்றநுகிரகித்தனர்.

சூரியன் உபாசித்த படலம்
முற்றிற்று.

வெயிலுகந்த விநாயகப் படலம்.

இவ்வண்ணம் விநாயகமூர்த்தியருளாலும் சூரியதேவன் பேரா நந்தபரிதனாய்ப் பலமுறை வீழ்ந்து வீழ்ந்து நமஸ்கரித்து சுவாமி நீர் இத்தலத்தில் எனக்குத் தரிசனங்கொடுத்தருளிய படியே அடியேன்மீது கருணைகூர்ந்து எக்காலத்தும் வீற்றிருந் தருளவேண்டுமென்றும் எனது பாபவிமோசனஞ் செய்தருளிய படியால் பாபவிமோசன புரமென்றும் வன்னியும் மந்தாரமும் தல விருக்ஷங்களாய் இருத்தலால் வன்னிமந்தார வனமென்றும் இத் தலம் என்னால் காணப்பட்டதால் சூரியபுரியென்றும் மகோததி

யாகிய லவணசமுத்திரக்கரையிலுள்ளதால் லவணபுரம் (உப்பூர்) என்றும் எனது தபசு சித்தியடைந்த இடமாதலால் தவசித்திகர மென்றும் இத்தலம் உலகத்தில் பேர்பெற்று விளங்கவேண்டும் என்றும் இதுவுமன்றி உமது சந்நிதியிலுள்ள மகோததிதீர்த்த மானது விநாயக தீர்த்தமென்றும் உம்மை அபிஷேகிக்க உண்டா கியதீர்த்தம் சூரியபுஷ்கரணி யென்றும் பேர்பெற்று விளங்க வேண்டுமென்றும் பிரார்த்தித்துக்கொண்டனன் அவன் வேண்டிய படியே விளங்குக என்று விநாயகப்பெருமான் அநுக்கிரகித்தனர். பின்னும் சூரியதேவனனவன் வேண்டுகின்றனன் அதாவது என்னை யாண்டருளிய விநாயக மூர்த்தியே யான் உமது திருமே னியை என் கிரணங்களாகிய ஆயிரங்கரங்களாலும் இன்று பரி சித்து அருச்சித்தபடியே எக்காலத்தும் உமது திருமேனியைப் எனது கிரணங்கள் பரிசித்துத் அருச்சித்துக் கொண்டிருக்கும் படிக்குத் திருவுளங்கொண்டருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டனன்.

விநாயக மூர்த்தியானவர் அதற்கும் கிருபைகூர்ந்து சூரிய தேவனே நினது அர்ச்சனையை என்றும் யாம் மகிழ்ந்து அங்கீ கரித்துக்கொள்கின்றோம், அதற்குச் சான்றாகவே என்றும் நமது திருமேனியில் உன்னுடைய கிரணங்கள் தீண்டிக்கொண்டிருக் கும் வண்ணம் வீற்றிருக்கின்றனம் என்று திருவாய் மலர்ந்தருளி னர். ஆதலால் அந்த விநாயகமூர்த்திக்கு (ஆதபேச்சா விநாயகர்) வெயிலுகந்த விநாயகர் என்று பேர் வழங்குகின்றது என்று சூத புராணிகர் சவுனகாதி முனிவர்களை நோக்கி மொழிந்தனர்.

வெயிலுகந்த விநாயகப் படலம்

முற்றிற்று.

திருமணப் படலம்.

ஓ சவுனகாதி முனிவர்களே பிரணவவடிவாகிய விநாயக மூர்த்தியானவர் லவணபுரத்தில் எழுந்தருளி வீற்றிருக்கின்ற வைபவத்தைச் சொன்னோம். இனி அவ்விநாயக மூர்த்தியின் திருமண வைபவத்தைச் சொல்கின்றோம் சிரத்தையோடு கேளுங்கள் என்று சூத புராணிகர் சொல்லத் தொடங்கினர்.

பின்பு ஒரு காரணமாக விநாயகமூர்த்தியானவர் கைலாசகிரியிலே சிவபெருமானுக்குப் புத்திரராய் அவதரித்திருந்தார் அக்காலத்தில் மகா தவசிரேஷ்டராகிய நாரதமுனிவர் அந்நின்மல சுரூபியாகிய கணேசமூர்த்தியின் பாதபதுமங்களைப் போற்றுதற்குக் கைலாசபர்வதத்தை நோக்கி மிக்க ஆவலோடு சென்று அப்பர்வதத்தின்கண் பொன்மயமாகி விளங்குஞ் சபாமண்டபத்தின் முகப்பில் இரத்தினமயமாயோங்கிய சிங்காதனத்தின்மீது தேவகணங்கள் புடைசூழ்ந்து போற்றுதல் செய்ய வீற்றிருக்கின்ற விநாயக மூர்த்தியைக் கண்டு அவரது திருவடிக்கமலங்களில் சாஷ்டாங்கமாய்ப் பணிந்து களிப்புடன் துதித்து வீணையில் கட்டுண்டிருக்கின்ற நரம்புகளைத் தடவி இசையாகிய புதியவமுதத்தை நிறைத்துக்கர்த்தன் புகழைப்பாடி அவர் திருவருளைப் பெற்று இதனை விண்ணப்பஞ் செய்வதாயினர்.

ஓ சர்வபரிபூரண கருணாகர மூர்த்தியே! தேவரீரிடத்தில் அடியேன் தெரிவித்துக்கொள்ளவேண்டியது ஒன்றிருக்கின்றது அதனை விண்ணப்பஞ் செய்யச் செவி கொடுத்தருளவேண்டும். அதாவது தாமரைமலரை யாசனமாக்கொண்ட பிரமதேவர் முன்பு தமது தியானசிந்தையினின்றும் உதித்தவர்களாகிய சித்தி புத்திகள் என்னும் இரண்டு கன்னியரைத் தேவரீரிருக்குத் திருக்கல்யாணஞ் செய்விக்கும் எண்ணத்தையுடையவராயிருக்கின்றார்.

அன்றியும் அப்பிரமதேவரே இலக்கணமமைந்த மானிடர்களை இனிமையாக படைக்குங்காலத்தில் மும்மலக் குறும்புகளை நீக்கவல்ல தேவரீருடைய திருவுருவத்தை யெண்ணியே மாட்சிமை பெற்ற மங்கையரைப் படைக்குங்காலத்தில் யாவருந் துதித்

தற்குரிய அம்மாதர்கள் வடிவங்களை முற்றுங் கருதுவாராயின் சுவாமிகளின் வனப்பினுக்கேற்ற அவர்கள் பேரழகின் பெருமைகள் இவ்வளவினவென்று அடியேனு லளவிட்டுரைக்கற்பாலவோ உள்ள விதத்தை யாவர் சொல்ல வல்லவரென்று நாரதமுனிவர் சொன்ன மாத்திரத்தில் கொன்றைமாலிகையணிந்த பரமேசுவர புத்திரராகிய கணேசமூர்த்தி அங்கீகாரங்கொண்டு அம்முனிவருக்கு அருள்வழங்கினர், அவ்வருளைப்பெற்ற நாரதமுனிவர் பின்னுந் திருவடிகளில் வணங்கி வந்தித்து விடைகொண்டு அம்மங்கை யரிடத்திற் சென்று பலமுறை துதித்து அவர்கள் இன்புறத்தக்கதாகவும் இவ்வையக முய்யத்தக்கதாகவும் இதனைச் சொல்வதாயினர் புண்ணிய பூமியில் முளைத்து அறமுதலிய நாற்பொருள்களையும் பூத்து யாவர்க்கும் இம்மை மறுமைப்பயனை விளைவிக்கவல்ல கொடிபோன்று விளங்கிய எனது அன்னைமீரே யான் விநாயகக்கடவுளுடைய திருவடிகளை யன்போடு பணிந்து அவரது சமூகத்தின்முன்பு உங்கள் வனப்புகளனைத்தும் எடுத்துரைத்தேன். அவைகளை அக்கடவுள் அங்கீகரித்து உம்மைத் திருக்கல்யாணஞ் செய்துகொள்ள மதித்திருகின்றனர் என்று சொல்ல அவ்ரும் அவரைக் கல்யாணஞ்செய்துகொள்ள மிக்க ஆவல்கொண்டிருந்தார்கள்.

அப்பால் அந்நாரதமுனிவர் பிரமதேவனிடத்திற்சென்று தாம் நடத்திவந்த காரியங்களனைத்தையும் அறிவிக்க அப்பிரமன் மனக்களிப்படைந்து இனி நம்புத்திரிகளுக்கு விரைவில் விவாகத்தைச் செய்துமுடிக்கவேண்டுமென்று தன்னுள்ளத்தில் மதித்தெழுந்தவனாய் உடனே கைலாயவரையிற் சென்று சோமன் சூரியன் அக்கினி என்கிற மூன்றுவிழிகளையுடையவராகியும் ஈசானம் தற்புருடம் அகோரம் வாமம் சத்தியோசாதம் என்கிற ஐந்து முகங்களையுடையவராகியும் மூவர்முதல்வராகியும் வீற்றிருக்கின்ற சிவபெருமானைப் பணிந்து பலமுறைதுதித்துநின்றான். உமாபதியாகிய பரமேசுவரர் அப்பிரமதேவனை நோக்கி நீ இங்குவந்த காரணமென்னென்று வினவியருள அதற்கப்பிரமதேவன் சொல்லுவான், எந்தையே பிரமன் விண்டு உருத்திராகிய எங்கள் மூவரையும் ஈன்று ஆக்கல் முதலிய மூத்தொழில்களைத் தந்து

ஆட்கொண்டருளிய கணேசமூர்த்திக்கு இலக்குமியுங்கண்டு நாணத்தக்க வனப்பு வாய்ந்த எனது புத்திரிகளிருவரை யணஞ் செய்துகொடுக்க ஆவலுற்றிருக்கின்றேன் அதற்குத் தேவரீரது மதியைப்பெறுமாறு வந்தேனென்றான். சந்திரசேகரமூர்த்தி யாகிய சிவபெருமான் செவியுற்றுக்கிருபையோடும் உமாபரமேசு வரியினுடைய திருமுகத்தை நோக்க அவர் பிரமதேவன் முகத் தைப்பார்த்து விநாயகமூர்த்திக்குத் திருக்கல்யாணஞ் செய்வதால் யாவர்க்கு நன்மையுண்டாகுமாதலின் அதனை விரைவின் முடிக்கக் கடவையென்று அருள்சுரந்தார். இவ்வாறு தாய்தந்தையரிசைத லும் பிரமதேவன் மகிழ்ந்து விடைபெற்றுவந்து கருணைபொழி கின்ற யானைமுகத்தையுடைய கணேசமூர்த்தியையடைந்து சாஷ் டாங்க நமஸ்காரஞ்செய்து ஓ சமானரகிதநிகில சகத்காரணகர்த்த ராகிய விநாயகமூர்த்தியே அடியேனிவ்வுலகங்களைச் சிருட்டிக்கு மாறு சுவாமிகள் முன்பு இரண்டுசத்திகளைக் கொடுத்திருக்கின்றீ ரன்றோ அச்சத்திகளை தேவரீர் திருமணஞ்செய்தருளவேண்டும் பூதபௌஷிய வர்த்தமானாத்மகமாகிய காலத்திரயத்திலும் பிரதிவி யாதி பஞ்சபூதாத்மகமாகிய காரணத்திரயத்திலும் உள்ளும்புறம் பும் வியாபித்து அந்தர்யாமியாகிய பரமாத்மாவாகியும் சர்வசாக்ஷி யாகியுமிருக்கின்ற சுவாமிகள் எவ்வாறு நடாத்திக்காட்டுகின்றதோ அவ்வாறன்றி இப்பிரபஞ்சங்களில் வேறொன்றும் நடப்பதில்லா மையால் சுவாமிகள் அப்பெண்களைத் திருமணஞ்செய்துகாட்டாத வரையில் இப்பிரபஞ்சங்களிற் சுகங்காணமுடியாது.

அதன்றியும் ஆண்களோடு பெண்கள் மணங்கலந்து கூடினா லல்லது சுவாமிகளடியேற்குக் கற்பித்தருளிய சிருட்டித்தொழில் பிரகாசமுறாதாதலால் சுவாமிகள் தயவுசெய்தெழுந்தருளி அடி யேனை முற்றிலுமாட்கொள்ளவேண்டுமென்று பிரார்த்தித்தான் அதற்கு நிலம் நீர் தீ கால் வெளி சூரியன் சந்திரன் இயமானன் என்கிற அஷ்டமூர்த்திவடிவாகிய விநாயகக்கடவுளிசைந்து ஓ பிரமனே நீயுரைத்த கலியாணத்திற்கு வேண்டிய முயற்சிகளை நடாத்திக்கொண்டிரு யாம் அவ்விடத்திற்கு யாவர்களோடும் வரு கின்றோமென்று விடைகொடுத்தருளப் பின்பு அப்பிரமதேவன்

கருணைநாயகராகிய விநாயகமூர்த்தியினது கிருபாநோக்கம்பெற்றுக்கொண்டுபோய் வைகுந்தத்தையடைந்து திருமகள் கணவராகிய திருமாலை வணங்கித் தன் புத்திரிகளுடைய கல்யாணத்தையுரைத்து அவ்விடத்தினின்று நீங்கித் தனது சத்தியலோகத்தைச் சேர்ந்து தேவதூதுவரைக்கூவி அவர்களிடத்திற் சகலரிஷிகளும் சகல வேந்தர்களும் சகல தேவர்களும் அத்தேவர்கட்கரசனுகிய இந்திரனும் மற்றுமுள்ள யாவரும் தங்கள் தங்கள் குடும்பசமேதர்களாய் விரைந்துவர வேண்டுமென்று திருமணப்பத்திரிகையை வரைந்தனுப்பிப் பின்பு விசுவகர்மாவை யழைப்பித்து எமது கர்த்தராகிய கணேசமூர்த்தியினது திருக்கல்யாண மகோற்சவத்தைத் தரிசிக்கவருகின்ற விண்ணுட்டினர் பூமண்டலவாசிகள் பாதலத்தினர் முதலானவர்கள் வீற்றிருப்பதற்கு யோக்கியகரமான விடுதிகள் முதலியவைகளையும் கல்யாணமண்டபத்தையும் சாத்திர விதிப்படிக்குத் தீவிரமாய் முடிக்கக்கடவை யென்று ஆக்கியாபித்தான்.

அதற்கவ் விசுவகர்மா அதிக மகிழ்ச்சியை யடைந்தவனுய் இப்பணிவிடைசெய்தற்கு யானென்னதவஞ்செய்தனனோவென்று ஆனந்தமுற்று இந்நிமிடத்தில் தமதிட்டப்படி செய்யக் கடவேனென விடைபெற்றுச்சென்று ஒரு நகரமுண்டாக்கி அதனைச் சூழப் பருத்தோங்கியிருக்கின்ற மதில்களையெழுப்பி நாற்புறங்களினும் விசித்திரமுற்று விளங்குகின்ற கோபுரங்களை ஆக்கி அதனுட்புறத்தில் கல்யாண மகோற்சவத்தினைத் தரிசிக்கவருபவர்கள் மனவெழுச்சியுடன் வாசஞ்செய்யத்தக்க பல மாளிகைகளும் உப்பரிகைகளுமேற்படுத்தி விசாலமுற்றிருக்கும் வீதிகளைப்பிரித்து இடையிடையிற் சித்திரங்கள் பளிங்குமண்டபங்கள் சந்திரகாந்தத்திண்ணைகள் முதலியவைகளை வரிசைவரிசையாக வகுத்துக் கல்யாணத்திற்குரிய பண்டங்களை வைக்கத்தக்க பண்டாரவறைகளை முடித்துத் தாமரை அல்லி முதலிய புட்பங்கள் மலிந்திருக்கின்ற தடாகங்கள் ஓடைகள் கேணிகள் முதலியவைகளைத் தக்க விடங்களில் ஆக்கி வானையளாவித்தழைத்தோங்கிக் குளிர்ந்தநிழலைப்பரப்பிக் கனிவருக்கங்களைக்கொண்டிருக்குஞ் சோலைகளும் தோப்புக்களும் உண்டாக்கிப் பரிமளமிகுந்த பல புட்பசாதிகள்

மலிந்திருக்கின்ற நந்தவனங்களையும் பூங்காவுகளையுஞ் சிருட்டித்து முடிந்தவுடன் அந்நகரத்தினடுவில் மணச்சடங்குகள் முடித்தற்கு ஓர் கல்யாணமண்டபத்தை விசாலமாய்ப்படைத்து அதன்மத்தியில் நவரத்நமயமாகிய சிங்காசனமொன்றைப் பலவிசித்திரங்களோடுமமைத்து அதைச்சூழ்வரத் திருமாலாதிய தேவர்களும் முனிவர்களும் களித்திருக்கத்தக்க பீடங்களை அணி அணியாகவமைத்துப் பலநிறப்பட்டுகளாற் சோடித்திருக்கின்ற விதானங்களிலுஞ் சொர்ணமயமாய்த் தோன்றுகின்ற மண்டபத்தின் மேற்புறங்களிலும் முத்துமாலைகள் புட்பசரங்கள் மயிற்பிச்சங்கள் முதலியவைகளைத் தொங்கவிட்டு நவரத்தினங்களிழைத்திருக்குஞ் சுவர்ப்புறங்களிலும் பருத்தோங்கிநிற்கும் பலவிதத்தூண்களிலும் பொற்பாவைகள் சித்திரபிரதிமைகள் நிலைக்கண்ணாடிகள் முதலியவைகளைப்பதித்து ஓமகுண்டத்தையும் விசாலமாகப்படைத்துப் பிரமதேவனைக்கண்டு அறிக்கையிட்டான்.

உடனே பிரமதேவன் விரைந்துவந்து அவ்வவற்றின் சிறப்புகளைக்கண்டு அதிக சந்தோஷங்கொண்டவனாய் மேருவுங்கண்டு நாணத்தக்க பிரகாசத்தோடு மிருக்கின்ற இந்நகரத்தினழகைக் காண்பதற்குச் தேவேந்திரனைப்போல ஆயிரங்கண்களைப் பெற்றிலனேயென்று ஆசையோடு வருத்தமுற்றானாயின் அத்தேவதச்சனால் நிருமித்த நகரத்தின் சிறப்புகள் என்போலிகளால் அளவிட்டுரைக்கப்படுவனவோ? பின்பு பிரமனானவன் சிலகாரியக்காரரைத்துரத்தி ஆகாயகங்கையைத்தருவித்துத் தருப்பை மாவிலை சமித்து முதலிய ஓமத்திரவியங்களைச் சேகரித்து வாழை கமுகு தெங்கின்குலை முதலிய சிறப்புக்களை வேண்டுமிடங்களில் அணிபெறநாட்டி வீதிகடோறும் பனிநீரையிரைத்துப் புழுதியையடக்கி முற்றமெங்கணுஞ் சந்தனக்குழம்பினால் மெழுகிப் பலவிசித்திரங்களான கோலங்களையுமிடுவித்துப்பாலிகை கரகமாதிய மங்களத் திரவியங்களை வருவித்துப் பலவிளக்கு குடத்தீபம் முதலிய சோதிகளையமைத்து இன்னும் இத்தன்மையவாகிய எல்லாச் சிறப்புகளையும் சர்வ ஜாக்கிரதையோடு நிறைவேற்றிக்கொண்டிருந்தான்.

அச்சமயத்தில் முன்பு பிரமதேவன் வரைந்தனுப்பிய திருமணப்பத்திரிகையைக் கொண்டுபோன தேவதூதர்கள் வாயுவேக மனோவேகமுந் தங்கட்குப் பிற்படத்தக்கதாகவோடி அவ்வவர்கட்கறிவிக்க உடனே அம்மணவோலையைவாங்கி நிமிர்த்து வாசித்துச் சந்திரர் சூரியர்முதலிய நவக்கிரகங்கள் முப்பத்துமுக்கோடிதேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் கருடர் காந்தருவர் சித்தர் வித்தியாதரர் போகபூமியர் ஆகாயவாசிகள் பாதலவாசிகள் சேடனாதிய நாகராசர்கள் மற்றதீபாந்திரங்களிலிருப்பவர்களும் தங்கள் தங்கள் மனைமக்கள் சுற்றத்தினர் முதலிய கூட்டங்களோடு ஏகமாய்த்திரண்டு கடையுகத்திற் சத்தசாகரங்களுங் கரைபுரண்டு மேருவைச்சூழ்வதுபோல் தேவதேவோத்தமராகிய கணேசமூர்த்தியினுடைய திருக்கல்யாண சம்பிரமத்தைத்தரிசித்து ஈடேறுங் களிப்பினராய்ச் சயவுச்சாகங்களுடன் ஓவென்னுஞ் சத்தமெழ நாற்புறங்களினுமிருந்துவந்து தேவத்தச்சனால் நிருமாணித்திருக்கின்ற நகரமெங்கணும் நெருங்கினார்கள் பின்பு, பிரமதேவனானவன் வந்தபரிசனங்கட்கெல்லாம் சகலவாபரணம் உணவுமுதலியவைகளை அவ்வவர்கட்குவேண்டுமட்டும் அளித்து வரும்படிச் சங்கநிதி பதுமநிதி சிந்தாமணி பஞ்சதரு காமதேனு முதலானவைகட்காக்கியாபித்துத் தான் பின்பு நடத்தவேண்டிய முயற்சிகளிற் பிரவேசித்தான். இப்பால் அக்காமதேனு முதலியவைகள் பிரமனிட்ட கட்டளையின்படி சகல செல்வங்களையும் வந்தவர்கட்கெல்லாம் தந்துவர அவைகளை இந்திரன் முதலிய தேவர்கள் பெற்றுக்கொண்டு மனக்களிப்படைந்து வேறொரு தெய்வலோகத்திலடைந்தவர்களைப்போல அளவில்லாத ஆனந்தக்கடலுள் மூழ்கினார்கள். அந்நகரத்துள்ளோர்களும் எந்தையாகிய கணேசமூர்த்தியினது திருக்கல்யாணத்திற்குச் செய்துவைத்த நூதனவலங்காரங்களைக்கண்டு காணக்கூடாத உயர்ந்த பரகதியையடைந்தவரையொத்துக் களிப்படைந்தார்கள் அந்நகரத்தின்கண் பன்னிரண்டு சூரியர்களும் சந்திரர்களும் உடுக்கூட்டங்களும் ஒருமிக்கக்கூடியிருக்கின்றமையால் அங்கு இராப்பகலெனுங் காலவேற்றுமைகள் இல்லாது ஒருதன்மையாகியிருந்தது. காமதேனு

கொடுக்காநின்ற உண்டிகளையும் கற்பகத்தருவளிக்கின்ற ஆபரணங்களையும் அந்நகரத்துக்கு வந்திருக்கின்ற மனிதர்களும் மங்கையர்களும் பெற்றுக்கொள்வதனால் அவர்கள் தங்கள் பெயரின் மாத்திரம்வேறுப்பட்டிருந்தார்களேயன்றி உருவத்தில் ஒருவரையொருவர் ஒத்தவராயிருந்தார்கள். பாரிசாதம் மந்தாரம் கற்பகம் தேவதாரம் சந்தானம் என்ற பஞ்சதருக்கள் நெருங்கிய சோலைகளானவை பலவதிசயங்களையுண்டாக்கச் சிலர் அவ்வற்புதங்களைப்பார்த்து அவ்விடங்களைவிட்டு நீங்காதவர்களாயிருந்தார்கள்.

இவ்வாறு அளவற்றபெருமிதங்களோடு தேவதச்சன் நிருமாணித்த அம்மண்டபத்தின் சிறப்புகள் யாவராலளவிட்டுரைக்கற்பாலன. இப்பால் நாரதமகாமுனிவர் சகல சம்பிரமங்களையுங் குறைவின்றி நிறைவேற்றியிருப்பதைப்பார்த்து மனங்களித்து விரைந்தெழுந்து வெள்ளியங்கிரியைச்சேர்ந்து சிவபெருமான் சந்நிதானத்தையடைந்து மும்முறைவலம்வந்து சாஷ்டாங்கமாய் வணங்கி ஓ தயாநிதியே விநாயகப்பெருமான் திருக்கல்யாண மகோற்சவத்திற்குரிய சகலவலங்காரங்களுஞ்செய்துநிறைவேறின அரசர்கள் தேவர்கள் முனிவர்கள் முதலாயினோர்வந்து நெருங்கியிருக்கின்றனர். தேவரீர் அடியேங்கள்மீது கிருபைபுரிந்து எழுந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொள்ளச் சிவபெருமான் சந்தோஷித்து விநாயகமூர்த்தியை யழைத்து ஐயனே பிரமனால் வளர்க்கலுற்ற சித்திபுத்திகளைத் திருமணஞ்செய்வதற்கான கோலத்தைக்கொள்ளுகவென்று திருவாய்மலர்ந்தனர்.

அதுகேட்ட சுத்ததத்துவமூர்த்தியாகிய விநாயகக்கடவுளானவர் தெய்வகங்கையிலாடித் தேவர்களுடைய இமையாவிழிகளை இடைவிடாது இமைக்கச்செய்யும்வனப்பினைவாய்ந்த தமது திருமேனியின் ஒழியைச் சிறிதுதணியச்செய்பவர்போலப் பீதாம்பரத்தையெடுத்து அரையிற்சாத்தி வாசனைவீசுகின்ற கூட்டுவருக்கச் சந்தனத்தை மார்பினிடத்துந் தோள்களினிடத்தும் பூசிக்கொண்டார். சந்திரனை முடியிலணிந்ததைத் தெரிந்துகொண்ட மற்றக் கோள்களானவை தாமும் முடிமேலேறியிருப்பதற்கெண்ணி அரியதவங்களைச்செய்ய அவைகளையுந் தமது நன்முடியிற் சூட்டிக்

கொள்வதுபோல் மிக்கவொளிபொருந்திய நவமணிகளை வரிசையாகப்பதித்த பொன்முடியினைச் சூட்டிக்கொண்டார்.

இவ்வாறு விநாயகக்கடவுள் திருமணக்கோலங்கொண்ட சிறப்பைச் சிவபெருமான் கண்களிக்கப் பார்த்து ஈராயிரமருப்புடைய மலைபோன்று பாரித்திருக்கின்ற அயிராவணத்தை அவருக்குத் தந்து தாமும் உமாபரமேஸ்வரியும் ரிஷபவாகனத்திலெழுந்தருளினார்கள். சூரியவேலாயுதத்தையேந்திய முருகக்கடவுள் மயில் வாகனத்திலேறியருளினர் துவாதசாதித்தர் ஏகாதசருத்திரர் அட்டவித்தியேஸ்வரர் அட்டவசுக்கள் அட்டதிக்குபாலகர் முதலிய எல்லாத்தேவர்களுஞ் சர்வாலங்கார சோபிதராய் அவ்வவர் வாகனங்களிலேறிப் புடைசூழ்ந்தார்கள். நிகும்பன் கும்பன் சங்கபாலன் குமுதன் பானு தனஞ்செயன் தசமுகன் காலபாசன் விசயன் முதலிய பூதகணத்தலைவர்களோடு நந்திகேஸ்வரரும் மற்றுமுள்ள கணநாதர்களும் நெருங்கினர்கள், யாவருந்துதித்தற்குரிய முதன்மைபெற்றிருக்கின்ற பிரணவமந்திரம் வேதங்கள் கலைகள் காலங்கள் இராசிகள் சத்தகோடி மகாமந்திரங்கள் முதலியவைகளோடு காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீபதம், சூட்சுமம், சகத்திரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிசுவாசம், சுவாயம்புவம், அநலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், பிம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானசர்வோத்தமம், பாரமேச்சுரம், கிரணம், பேதம், வாதுளம், என்கின்ற இருபத்தெட்டு ஆகமங்களும் ஒவ்வொருதேவவடிவங்களாகித் திரண்டு வந்தன. இவ்வாறு சகலசம்பிரமத்தோடு யாவரும் புடைசூழ்ந்து நெருங்கிய சமையத்தில் விநாயகமூர்த்தியானவர் அயிராவணத்திலாரோகணித்துப் பூதகணங்கள் புகழ்பாடிவரவும் மாதவர் வேதமோதிவரவும் சந்திரவட்டக்குடைகள் ஆகாயவெளியை மறைக்கவும் பலவிதப் பட்டுக்கொடிகள் இருமருங்கினு நெருங்கவும் சிலர் ஆலவட்டங்கள்வீசவும் சிலர் சாமரைகளிரட்டவும் தோற்கருவி துளைக்கருவி நரம்புக்கருவி கஞ்சக்கருவி மிடற்றுக்கருவி என்கிற பஞ்சவாத்தியங்கள் நாற்றிசைகளினு முழங்கவும் இன்னும் அளவற்ற

ஆடம்பரங்களோடு பெரும்புறக்கடல் பெருகுமாறுபோல் எள்ளிட இடமில்லாமல் ஒருவரோடொருவர் அடர்ந்து கிரீடங்களுடன் கிரீடங்கள் புசங்களுடன் புசங்கள் ஊடுதாக்க ஆகாயமார்க்கமாய்ச் செல்லுமளவில் அட்டபுயாசலங்களையுடைய சிவபெருமானோடு கணேசமூர்த்தி திருமணக்கோலங்கொண்டெழுந்தருளி வருவதைப் பிரமன் விண்டுமுதலிய தேவகணங்களாதியர் கண்டு அளவளாவியவானந்தத்தோடும் எதிர்கொண்டு சென்று கற்பகமலர்களைத் தூவியருசித்துச் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து அந்நகரத்துள்ள இராசவீதியில் வலமாகவழைத்துக்கொண்டு போய்த்திருக்கல்யாண மண்டபத்திலெழுந்தருளச் செய்தார்கள்.

உடனே சரஸ்வதியானவள் சொர்ண்ணகடத்தில் தெய்வ கங்கையையேந்திவந்து கணேசமூர்த்தியினுடைய திருவடிகளில் அபிஷேகிக்கப் பிரமதேவன் மிகுந்த வணக்கத்தோடு அத்திருவடிகளை விளக்கி மெல்லிய ஆடைகொண்டொற்றினான். பின்னர்ச் சிவபிரானும் உமாதேவியும் ஓராசனத்திலிருந்தனர் சுப்பிரமண்ணியர் முதலிய மற்றைத்தேவர்களெல்லாம் வெவ்வேறாதனங்களில் அமைந்தனர் விநாயகக்கடவுள் அம்மண்டபத்தினடுவில் அமைந்திருக்கின்ற மாணிக்கசிம்மாசனத்தில் ஆரோகணித்துத் தேவமாதர்கள் நடிக்கின்ற ஆடலினும் பாடலினும் தமது திருக்கண்ணோக்கினைச் சாத்தியிருந்தனர். அளவற்ற தேவஸ்திரீகள் வெள்ளடை பாகு வாழைக்கனி தெங்கின்கனி மற்றுமுள்ளபலாதிகள் இரத்தினபாரணங்கள் பூமாலைகள் சித்திரப்பட்டுகள் முதலான மங்கலவரிசைகளைத் தனித்தனி பொற்றாம்பாளங்களில் நிரப்பித் தங்கள் கைகளிலேந்திக்கொண்டு தாமரை பூரணகும்பம் கண்ணாடி தோட்டி முரசு மணி விளக்கு கொடி இணைக்கயலென்கிற அட்டமங்கலத்துடன் பலவாத்தியங்களும் முழங்க அந்நகரவீதியை வலமாகவந்து விநாயகப்பெருமான் வீற்றிருக்கின்ற திருக்கல்யாணமண்டபத்தில் தொகுப்பாகவைத்து வணங்கினர்.

இப்பால் அந்தப்புரத்திலிருக்கின்ற சித்தி புத்தி யென்னுங் கன்னியர்களைச் சரஸ்வதி இந்திராணி இலக்குமி அதிதி அருந்ததி என்கிற மாதர்களறுவரும் வணங்கி வாழ்த்துதல்

செய்து சிரோரத்தினங்களால் இழைத்திருக்கின்ற ஆதனத்தி லெழுந்தருளப்பண்ணி அக்கன்னியர்க்குத் திருமஞ்சனமாட்டிப் பட்டாடையினைச் சாத்தி மணமிகுந்த சந்தனக்குழம்பைப் பூசி நெற்றியில் சிவந்த திலதப் பொடியினையிட்டுக் கூந்தலை முடித்து மணமிகுந்த மலர்மாலைகளைச் சூட்டிப் பலவகை இரத்தினாபரணங்களையும் அலங்கரித்தார்கள்.

இவ்வாறு மணக்கோலத்திற்குரிய அலங்காரங்களையெல்லாஞ் சிறக்கச் செய்துமுடித்து அவ்விடத்துநின்று நீங்கிச் சிவபிரான் இடப்பாகத்தமர்ந்த பார்வதிதேவியாருடைய கடைக்கணோக்கின் நேராகநின்று அன்னையே முன்னம் அடியேங்கள் செய்த தவப் பயனாகத் தேவரீர் ஆக்கியாபித்த பணிவிடைகளைக் குறைவின்றி நடாத்திவந்தன மென்றறிவித்து வணங்கி அத்தேவியாருடைய வநுக்ஞைபெற்றுப் பின்னரவ்வறுவரும் அம்மங்கையரை நவரத்தின சிவிகைக்ளிலேற்றிப் பல விண்ணின் மாதர்களுந் தோழியர்களும் புடைசூழ்ந்துவரவும் வெண்பட்டுக்குடைகள் மயிற்பிஞ்சங்கள் முதலிய அலங்காரங்களோடு பலவகைக் கொடிச்சின்னங்கள் விளங்கவும் குடமுழாமுதலிய பலவாச்சியங்கண் முழங்கவும் அளவற்றவைபவங்களோடு வீதியிலெழுந்தருளச் செய்துகொண்டுவருமுன் முளைப்பாலிகை முதலியவெல்லாம்முறைமையாகச்சேர்த்துவைத்திருக்கின்றகல்யாணமண்டபத்தில் ஜனகமகாமுனிவர் ஆசிரியராகி வந்து தருப்பை வெண்பொரி முதலியபலவகைப்பொருள்களையுஞ்சேகரித்து முகூர்த்தவேளை பார்த்துக்கொண்டிருந்தனர்.

அச்சமயத்தில் ஒருவர்க்கொருவர் ஒப்பாவதன்றி மற்றொருவரொப்பில்லாத அம்மணப்பெண்களிருவோரும் வீதியை வலமாகி வந்து திருக்கல்யாணமண்டபத்திலிறங்கிக் கற்பகதருவின் இருமருங்கினும் படர்ந்திருக்கின்ற காமவல்லிக்கொடிபோலக் கணேசமூர்த்தியினுடைய பக்கத்திற்கலந்திருந்தார்கள். உடனே மண்ணில்வழுக்கி வீழ்ந்ததேவர்கள் மீட்டும் விண்ணிற்புக்கு மகிழ்வையடைந்ததுபோல இதுகாறுங் கணேசமூர்த்தியை நீங்கியிருந்த அம்மங்கையர் மீட்டும் அவர்சமீபத்தில் கலத்தலும் முன்னர்

வேறுபட்டு விளர்த்திருந்த நிறத்தினைப் போக்கித் தங்கள் சுபாவ வடிவத்தினை யடைந்தார்கள்.

இப்பால் சகலகலைவல்லவராகிய ஜனகமகாமுனிவர் சங்கற்பஞ்செய்து புண்ணியாவாசனம்புரிந்து அம்மணப்பந்தலிலுள்ள பொருள்களையெல்லாந் தூய்மையாக்கிக் கணேசமூர்த்தியை வேதாகமங்களாற்றுதித்துத் தேன்கலந்தபாலும் பழமுமளித்து அருக்கியம் பாத்தியம் ஆசமனம் என்கின்ற மூன்றுமந்திரசலங்களையுந் தந்து மணப்பெண்களுக்குக் கூறைமுதலியவைகளை யணிவித்துப் பிரமதேவனைக்கூவினர் உடனே அப்பிரமதேவன் விரைந்துவந்து தம்பதிசமேதராயெழுந்தருளியிருக்கின்ற விநாயகக்கடவுளுடைய மணவணிக்கோலத்தை மனங்களிக்கக்கண்டு கரங்களைச்சிரமேற் கூப்பித்தொழுது துதித்துத் தன்னருகினிற்கின்ற சரஸ்வதியைப் பார்க்க அவள் பலதெய்வப்பெண்களுடன் துரிதமாகச்சென்று திருமஞ்சனங் கற்பகமலர் தூபதீபமுதலாகிய பொருள்களைப் பொற்பள்ளயங்களிலேந்தித் தன்கணவன் சமீபத்துவந்து நின்றனள். அக்காலத்தில் ஜனகமகாமுனிவர் பணித்தருளியபடிக்குப் பிரமனானவன் வேதாகமவிதிப்படிப் பாதபூசைசெய்யயத்தனித்தவனாய்ப் பொற்றட்டினிடத்தில் விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளைச் சேர்த்துத் தன்தேவியானவள் தங்கக்குடத்தில் நிரப்பிவைத்திருக்கின்ற கங்காசலத்தையெடுத்து மெல்லமெல்லக் கவிழ்த்துவரத் தான்சுத்தி செய்து திருவொற்றாடையால் ஈரத்தைப்புலர்த்திக் களபகஸ்தூரி முதலியவைகளைச் சேர்த்திருக்கின்ற சந்தனக்குழம்பையப்பிப்பஞ்சதருக்களினது புதியமலர்களைக் கொண்டருச்சித்துச் சாம்பிராணி தூபத்தைக்காட்டிக் கற்பூராஞ்சனங் கொடுத்துச் சோடசவுபசாரங்களோடு பூசனைகளை நிறைவேற்றியவுடன் உடல்பொருள் ஆவி என்கின்ற மூன்றையும் அநாதியிற்றானே தமக்கு அடிமையாகவுடைய கடவுளுக்குப் பரிபக்குவராயினோர் தங்கள் போதவொழிவினிமித்தம் மீட்டுமவைகளைச்சமர்ப்பிக்குமுறைமைபோல் விநாயகமூர்த்தியை அநாதிதொட்டுநீங்காத அச்சத்திகளைப் பிரமதேவனானவன் மீட்டும் பழமைபாராட்டியளிப்பவனாய்க் கணேசமூர்த்தியினுடைய திருக்கரங்களில் தனது புத்திரிகளாகிய சித்திபுத்திகளின் திருக்கரங்களைசேர்த்துச்

சுவாமி அடியேன் அருமையாக வளர்த்த இம்மங்கையரைத் தேவ ரீர் அங்கீகரித்து என்னையாட்கொள்ளவேண்டுமென்று சரஸ்வதி விட்ட தெய்வதீர்த்தத்தால் தாராதத்தஞ்செய்துவணங்கினன்.

கணேசமூர்த்தியானவர் அவ்விண்ணப்பத்திற்கு அருள் சுரந்து முன்பு அப்பிரமன் கடைத்தேறுமாறு கொடுத்தருளிய சத்திகளாகிய அம்மங்கையரை மீட்டும் அவனிடத்தில்நின்று ஏற் றுக்கொண்டனர். பின்பு பிரமதேவன் இட்டசித்தியைப்பெற்றுக் களித்தவனாய் முக்கனிகளையும் ஆவின்பால் தேன் சர்க்கரையோடு கலந்து பொற்கிண்ணத்திற்கொண்டுவந்து தேவரீர் இவற்றினைப் புசித்தருள வேண்டுமென்று நிவேதித்தனன். பின்பு பேரிமுரசம் குடமுழா வலம்புரிச்சங்கமுதலிய மங்களவாத்தியங்கள் முழங்க வும் தேவர் முனிவர் கின்னரர் கிம்புருடர் முதலியவர்கள் மனக் களிப்புடன் கரங்களைக்கொட்டிச் சயசயவென்று போற்றவும் ஏகாதசருத்திரர்முதலிய முப்பத்துமுக்கோடி தேவர்களும் பெரு மகிழ்வுகொண்டு மங்கலவாழ்த்ததுக்கூறவும் அத்திரி ஆங்கீரசர் பரத்துவாசர் முதலிய ரிஷிபுங்கவர்கள் வேதாகமங்களால் துதி த்துவாழ்த்தவும் தேவதுந்துபிகள் சத்திக்கவும் சனகமகாமுனிவர் ஓமகுண்டத்தைச்சார்ந்து சுற்றிலும் அந்தணர்களை இருத்தித் தித் தருப்பைகளைப்பரப்பி அக்கதைகளை இறைத்து மந்திரமலர் களால் பிரணவமுதலிய பிரதமதேவதைகளை வழிபட்டுப் பூரண கும்பம் குடவிளக்கு முதலியவைகளை ஆங்காங்கு விதிப்படி தாபி த்துவைத்து முத்தீக்களையும் மந்திரபூர்வகமாக ஓமகுண்டத்தி லெழுப்பி விநாயகக்கடவுளையும் சித்தி புத்திகளையும் அதனருகி லெழுந்தருளச்செய்து ரிஷிபுங்கவர்களும் அந்தணர்களும் வேத சாகைகளைச் சொல்லிச் சமித்துக்களைக் கிரமப்படி போட்டுவர ஆவின்நெய்யைஊற்றி இடையிடையில் பொரியையும் பாலையும் இறைத்து நவக்கிரக ஓமமுதலியகருமங்களை விதிப்படி விநாயகப் பெருமான்முன்னிலையில் நிறைவேற்றிப் பூரணாகுதியும் கொடுத்து அத்தியினிடத்தெடுத்த மைக்குழம்பை மாப்பிள்ளையாருடைய திருநுதலிலிட்டு அவரால் கல்லியாணப்பெண்களுக்கும் இடுவித்து நாரதமுனிவர் மும்முறை பொரியிட ஓமாக்கினிக்காகுதிசெய்து

மற்றச்சடங்குகளையும் வரன்முறையாக்கி முடித்தனர். பின்பு கல்லியாணப்பிள்ளைக்குத் திருமால் தோழராயிருந்து கைலாகு கொடுத்துப் பீடத்திலிருந்தெழுப்பவும் இலக்குமிமுதலிய அறுவர்களும் தங்கள் நாயகியராகிய சித்திபுத்திகளைத் தழுவியெழுப்பி அவர்கள் சுண்டுவிரல்களை விநாயகப்பெருமான் சுண்டுவிரல்களால் பற்றச்செய்தார்கள் கணேசமூர்த்தியானவர் அத்தீக்குண்டத்தை மும்முறை வலம்வந்து வடபக்கத்திற் சேர்ந்து கலியாணப்பெண்களின் திருவடிகளைத் தமது திருக்கரங்களால் தூக்கித்தூக்கி நிலத்திலிட்டு முடிவில் அம்மியின்மீது வைததுப் பதிவிரதா சிரோமணியாகிய வசிட்டமுனிவர் பத்தினியை எதிரிலழைத்து அவள்மீது தமது திருக்கண்சாத்தினர்.

இவ்விதமாய்த் திருக்கல்யாணசம்பிரமங்கள் அனைத்தும் கிரமப்படி முடிந்தவுடன் விநாயகக்கடவுள் தமது தேவியர்களோடு தாய்தந்தையர் திருவடிகளில்வணங்க அவர்கள் ஆசீர்வதித்து மனப்பூரிப்படைந்து நவரத்தினமயமாயிருக்கின்ற ஆசனத்திலிருந்தித் திருமாலைநோக்க அத்திருமால் தேவேந்திரனெடுத்துநீட்டுகின்ற தாம்பூலாதிகளை உருத்திரர் முதலாயுள்ள எல்லாத்தேவர்கட்கும் வரன்முறையாகக்கொடுத்தனர். பின்பு சித்திபுத்திகளிருவரும் மணிச்சிவிகைகளிலேறிவர விநாயகமூர்த்தியானவர் அயிராவணத்தின்மேல் ஆரோகணித்து அளவற்ற வாத்தியங்கள் முழங்க மங்களவாழ்த்துக்கள் சத்திக்கத் தேவர்கள் மலர்மாரி பொழியச் சந்திரவட்டக்குடைகள் ஆகாயத்தைக்கவிக்க விருதுக்கொடிகள் அண்ட முகட்டைநெருங்க இருமருங்கும் கவரிகள் இரட்ட ஆலவட்டங்களை நாற்புறங்களிலும்சைக்கக் கின்னரரிசைபாட அரம்பையர் நடமாட இவ்வாடம்பாரங்களோடு வீதியிற் பவனிவர மாதர்கள் தெரிசித்து நீராஞ்சனம் பூரணகும்பம் மணிவிள்க்கு முளைப்பாலிகை முதலிய மங்கலப்பொருள்களை ஏந்திப் புட்பம் சந்தனம் கதம்பம் முதலியவைகளைவீசி மிகுந்தபத்திவிசுவாசத்துடன் கரங்களைக் கூப்பித்தொழுது வாழ்த்துப்பாடல்களைப்பாடினர். இவ்வாறு விநாயகமூர்த்தியானவர் அலங்கிருதமான வீதிகளை வலமாகிவந்து கல்யாண மண்டபத்தையடைந்தனர்.

அப்போது காமதேனு சிந்தாமணி பஞ்சதருக்கள் வந்தவர் கட்கெல்லாம் பலபொருள்களையும் மழைபோற் சொரிந்தன இவ் வண்ணந் திருக்கல்யாண சம்பிரமங்கள் முழுவதும் நிறைவேறிய பின்புத் தேவர்கள் முனிவர்கள் கணநாதர்கள் மண்டலவாசிகள் யாவரும் பார்வதிசமேதராகிய சிவபெருமானையும் தம்பதிசமேத ராயெழுந்தருளியிருக்கின்ற விநாயகமூர்த்தியையும் தரிசித்துத் துதித்துச் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து அவர்களின் திருவருள் பெற்று விடைகொண்டு தங்கள் தங்கள் பதவிகளிற் சேர்ந்தனர்.

பின்பு சிவபெருமான் தம்மோடு வந்த கந்தவேள் முதலியவ ரெல்லாம் புடைசூழ்ந்துவரச் சித்தி புத்தி மணாளராகிய கணேச மூர்த்தியை யழைத்துக்கொண்டு பார்வதிதேவியாரோடு கைலை மலைக்கெழுந்தருளி வீற்றிருந்தனர். விநாயகக்கடவுளும் பின்பு சூரியனால் பூசிக்கப்பட்ட உத்தமக்ஷேத்திரமாகிய தமது லவண புரம் (உப்பூர்) என்னும் திவ்விய ஸ்தலத்தைச் சித்திபுத்திகளோ டும் அடைந்து வீற்றிருந்தருளினர்.

திருமணப்படலம்
முற்றிற்று.

கயமுகாசுரன் வதைப்படலம்.

ஓ சவுனகாதி முனிவர்களே விநாயக மூர்த்தியானவர் கயமுக சங்காரஞ் செய்தருளிய கதையையும் சொல்கின்றேன் கேளுங்களென்று சூதபுராணிகர் சொல்கின்றார்.

ஊழிதோறும் ஓங்குவதாகிய மாண்பு பொருந்திய கைலையங் கிரியில் வீற்றிருக்கின்ற சிவபெருமானைத் திருமால்முதலிய தேவர் கள் தரிசித்துத் தம்மை மிக வருத்துகின்ற கயமுகாசுரனுடைய கொடுமைகளை விண்ணப்பஞ்செய்து அவனைச் சங்கரித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர்.

சிவபெருமான் அதைக்கேட்டு அங்ஙனமே செய்து உங்களைக் காத்தருள்வோமென்று விடைகொடுத்தருளினர். அப்பொழுது

வசந்தகாலம் நேர்ந்தது சிவபெருமான் குளிர்ச்சிவேண்டித் தமது தேவியாரோடும் உய்யான வனத்தையடைந்து அதில் கொன்றை கூவிகளம் கோங்கு மந்தாரம் பாடலம் புன்னாகம் சண்பகம் வாழை வகுளம் அசோகம் முதலாகிய விருக்ஷங்கள் மலிந்திருக்கின்ற அலங்காரங்களையெல்லாம் பார்த்துக்கொண்டேவந்து அங்கிருந்த ஓர் சித்திரமண்டபத்தி லெழுந்தருளினர்.

அப்போது உமாதேவியார் அம்மண்டபத்தின்சுவர்களிலெழுதியிருக்கின்ற சித்திரவலங்காரங்களையெல்லாம் பார்த்துக்கொண்டேவர அவைகளில் ஓர்பால் சத்தகோடி மகாமந்திர சொரூபங்களும் அவைகட்கெல்லா முதலில் பிரணவ மந்திர சொரூபமும் அதில் ஆணையும் பெண்ணையும் புணர்ச்சிசெய்திருக்கும் பாவனையா யெழுதியிருப்பதைக்கண்டு சுவாமி இதென்னவென்று சிவபிரானைக் கேட்டனர். அதற்கவர் தமது தேவியாரைப் பார்த்துப் பெண்ணே யாம் உன்னோடு சம்பந்தமாகி லோகங்கட்குபகாரமாய் நடப்பிக்கத்தக்க கருணாரசமாகுமென்று திருவாய்மலர்ந்து புணர்ச்சி செய்திருக்கின்ற அந்த யானைகளில் ஆணையைத் தாம் பார்த்துக்கொண்டிருந்தனர். உமாதேவியார் பெண்ணையைப் பார்த்துக்கொண்டிருந்தனர். இவ்வாறு லோக காரணர்களாகிய இருவரும் அவைகளை இன்போடு பார்த்துக்கொண்டிருத்தலும் அந்த யானைகளினுடைய புணர்ச்சி முடிவில் பிரணவ சுரூபியாயிருக்கின்ற விநாயகமூர்த்தியானவர் ஊழிக்காலத்தில் கோடிசூரியர்கள் ஒன்றாய் உதயஞ்செய்ததுபோல அளவற்ற பிறகாசத்தோடும் உதித்தருளிச் சிவபிரானையும் உமாதேவியாரையும் பணிந்தனர். உடனே அவ்விருவரும் ஆனந்தங்கொண்டு தமக்குப் புத்திரனாகத் திருவவதாரஞ் செய்தருளிய விநாயகமூர்த்தியைப் பரிவோடெடுத்து அணைத்து உச்சிமோந்து உள்ளம் பூரித்துத் தங்கள் மடியின் மீது வைத்துக்கொண்டு சிவபிரான் இதனைத் திருவாய்மலர்ந்தருளுவதாயினர். ஓ குமாரனே என்னின் வேறாகாமல் எனக்குப் பிள்ளையாகி இருக்கின்ற உன்னை யார் வணங்குகின்றார்களோ அவர்கட்குச் சகலவிடையூறுகளையும் தீர்த்து அவர்கள் விரும்பிய காரியங்களை விரைவில் கைகூடும்படியாக அநுக்கிரகஞ் செய்திடுக, கணங்கட்கெல்லாம் தலைமை பெற்றிருந்து கிருபையை

வழங்குக, அதனால் யாவரும் உன்னைக் கணபதியென்று சொல்லுக, உன்னை யாவரும் எக்காரியத்திலு முன்னதாக வணங்குக, அவ்வாறு வணங்காதோர்க்கு நீ இடர்களைப் புரிக, இவையன்றி அசுரர்கட்கெல்லாம் அரசனாய் யாவரும் அஞ்சத்தக்க கோரனாய் மிக்க கொடிய நெஞ்சையுடையவனாய்த் தேவர்கட்கெல்லாம் துன்பத்தை விளைக்கின்றவனாய் கயமுகனென்னும் பெயரை வகித்தவனாய் ஒரு அசுரனிருக்கின்றான், அவனை நீ விரைவில் சமர்க்களத்திற் சங்கரித்து விண்டு முதலியோர் மூழ்கியிருக்கின்ற துக்கசாகரத்தைத் தூர்த்து அவர்களைக் கிருபையோடும் காத்தருள்கவென்று திருவாய்மலர்ந்து உமாதேவியாரோடு அச்சித்திரமண்டபத்தை விடுத்துக் கணபதிப்பெருமானை யழைத்துக்கொண்டு சென்று அவரைத் தமது கயிலாயவாய்தலின் முகப்பிலிருக்க வைத்து அந்தப்புறத்திற் சென்றருளினர். அப்போது நந்திதேவர் முதலிய கணத்தலைவர்களும் விண்டு முதலிய தேவர்களும் கருணாநிதியா யெழுந்தருளிய கணபதிமூர்த்தியைப் பணிந்தெழுந்து வேத்தாகம முதலியவைகளாற் றுதிசெய்து விடைபெற்று அவரது பெருங்கருணையினால் அவ்வவர்களுடைய பெரிய அதிகாரங்களைச் செலுத்துவதற்குப் போனார்கள் அந்தப்புறத்திற் சென்ற சிவபிரானும் உமாதேவியாரும் சரசசல்லாபத்தோடும் அளவளாவி மகிழ்ச்சியுற்றிருந்தார்கள்.

இவ்வாறு மகிழ்ச்சிபொங்கிச் சரசசல்லாபத்துடனே அளவளாவியிருக்கின்றபோது சிவபிரான் உமாதேவியாரைப் பார்த்துப் பெண்ணே நாமிருவருஞ் சூதாடுவோம் அச்சூதில் நீ தோற்பையாயில் உனது ஆபரணங்களை யெல்லாம் கொடுத்துவிடக் கடவை நாம் தோற்போமாயில் நமது ஆபரணங்களைக் கொடுத்துவிடக் கடவோமென்று திருவாய்மலர்ந்தனர். அதற்கு உமாதேவியார் சம்மதித்து அப்போது சிவபிரானைத் தரிசனஞ்செய்ய வந்திருந்த தனது சகோதரராகிய விண்டுவைக்கூவி ஓ சேட்டனே இப்போது யாமிருவரும் ஆடப்போகின்ற சூதுக்கு நீ சாக்ஷியிருக்கவேண்டுமென்று கேட்டனர் அதற்கவரும் சம்மதித்து நின்றனர். பின்பு சுந்தரர் முதலிய பரிசனங்களெல்லாம் அக்குறிப்பினையறிந்து சூதாடு கருவிகளைக் கொணர்ந்துவந்து சிவபிரானெதிரில் நீட்டி

ஞர்கள். அவைகளைச் சிவபிரான் கையேற்று விண்டுவினிடத்தில் தந்து இவைகளைக் கிரமப்படி வைத்திடுகவென்று கட்டளையிட்டனர் அவ்வாறே அவைகளையெல்லாங் கிரமப்படி வைத்து அவ்விருவர்களுடைய ஆட்டங்களையும் பார்த்துக்கொண்டிருந்தனர். அவ்வாட்டமுடிவில் உமாதேவியார் செயித்தனர். அதைச் சிவபிரான் கண்டு பரியாசத்தினலோ மற்றயாது காரணத்தினலோ உமாதேவியாரைப்பார்த்துப் பெண்ணே நீ நமக்குத்தோற்றனையாதலால் உனது ஆபரணங்களையெல்லாங் கழற்றி நம் முன் வைக்கக் கடவையென்று திருவாய்மலர்ந்தனர். அதனைக் கேட்டலும் உமாதேவியார் சிவபிரானைப்பார்த்து நகைத்து சுவாமி அடியாள் செயித்திருக்கத் தேவரீர் குற்றமற்ற வேதங்களைத் திருவாய்மலர்ந்தருளிய வாக்கினல் எற்றினுக்கு இத்தன்மைத்தான பொய்யை நாணமில்லாமல் சொன்னீர்கள். தேவரீருடைய திருமேனியிலுள்ள ஆபரணங்களை வாங்கி வைத்தருள்கவென்று கூறினர், அதற்குச் சிவபிரான் புன்னகைகொண்டு பொய்சாட்சி சொல்லும்படியாக விண்டுவுக்குத் தமது புருவத்தை நெரித்துச் சைகை காட்டி மீட்டும் உமாதேவியாரை நோக்கி நாமே செயித்தனமென்று திருவாய் மலர்ந்தனர். அப்போது விண்டுவானவர் என்செய்வர் மேல்வரும் விளைவைச் சிறிதுமறிந்து கொள்ளாதவராய் உமாதேவியாரைப் பார்த்து அம்மணீ இப்போது சுவாமிக்கு நீர் தோற்றமையால் உமது ஆபரணங்களை அவருக்குக் கொடுக்க வேண்டாமோ வென்று கூறினர். அதைக்கேட்டலும் உமாதேவியார் கோபித்து அவ்விண்டுவை உறுத்துப்பார்த்து அறிவற்றவரே எங்களுடைய செயிப்பையுந் தோற்பையுங் கண்ணிற் கண்டிருந்தும் என்ன லாபத்தை நினைத்து உண்மையைச் சொல்லாமல் பொய்ச்சாட்சி சொன்னீர் நீர் இவ்வாறு சொல்லினமையால் இனிக் கண்கெட்ட மலைப்பாம்பாகித் துன்பமுறக்கடவீரென்று சபித்தனர். அச்சாபத்தைக் கேட்டலும் திருமாலானவர் நடுங்கிச் சிவபிரானைப்பணிந்து உமாதேவியாரிட்ட இச்சாபத்திற்கு ஓர் தீர்வு சொல்லியருளல் வேண்டுமென்று பிரார்த்திக்கச் சிவபிரான் கிருபை சுரந்து நீர் வடதீவிற் சென்று நம்மைத் தியானஞ்செய்துகொண்டிரும் இன்னும் சிலதினத்துக்குள் கயமுகாசுரனைச் சங்காரஞ்செய்து

கணபதிமூர்த்தியானவர் அவ்வழியே வருவர் அவரால் இச்சாபம் நீங்குமென்று அருள்செய்தனர். திருமாலானவர் அவ்வாறே சென்று மலைப்பாம்பாகி வருந்திக் கணபதிமூர்த்தியின்வரவை யெதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தனர். இவ்வாறிருக்க,

இந்திரன் முதலிய தேவர்கள் அசுரர்கள் செய்யுங்கொடுமைக்குப் பயந்து சகல திரவியங்களோடுங் கயிலாயத்தை நோக்கிச் சென்று முதல்வாய்தலின் முகப்பில் கணத்தலைமை பெற்றிருக்கின்ற எமது கர்த்தனைப்பணிந்து பூசித்து இருகரங்களையுங் கூப்பி வேதாமங்களினால் அளவற்ற தோத்திரங்களைச் செய்து நின்றார்கள். அவர்களைக் கணபதிமூர்த்தி கிருபையோடு பார்த்து அன்பர்களே உங்கட்கு வேண்டியவைகளைக் கேட்பீராகவென்று திருவாய் மலர்ந்தனர் அதற்குமேல் தேவர்களெல்லாம் ஆனந்தங்கொண்டு சுவாமி அடியேங்களை நாடோறும் வருத்திவருகின்ற கயமுகாசுரனைத் தேவரீர் சங்காரஞ்செய்து அடியேங்களுடைய துயரத்தை நீக்கியருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள் அதற்குக் கணேசமூர்த்தி அவ்வாறே செய்தருளுவமென்று கிருபை வழங்கித் தமது சிம்மாசனத்தைவிடுத்துப் பூதர்கட்கெல்லாம் தலைவனாய் மலையைப்போன்று பாரித்து விளங்குஞ் சரீரத்தினால் அசலனென்னும் பெயரை வகித்திருக்கின்ற ஒருவனைக் கூவி அவனது கந்தரத்திலாரோகணித்தார் உடனே ரணபேரி ஜயபேரி வெற்றிச் சங்க முதலிய வாத்தியங்கள் முழங்கின கொடி கொடை சாமரை முதலிய சின்னங்கள் இருமருங்கினும் நெருங்கின இடியேற்றினை யொப்பச் சத்திக்கும் பெருந் தொனியையுடையவர்களாய்ப் பிரளயாக்கினியைச் சொரிகின்ற கண்களையுடையவர்களாய்ப் பர்வதங்களை யொத்துவிளங்கும் புசங்களில் அளவற்ற ஆயுதங்களை யேந்தினவர்களாய் அநேக பூதவீரர்கள் புடைசூழ்ந்தார்கள். பின்பு கணேசமூர்த்தியானவர் இவ்விதவாடம்பரங்களோடு கயிலாயத்தினின்றும் வெளிக்கொண்டு கயமுகாசுரன் அரசாட்சி செய்துவருகின்ற மதங்க நகரத்தின் சமீபத்திலமர்ந்தருளினர். யோகியர்கள் தங்கள் ஞானவுணர்ச்சியினாலறிந்தாலல்லது ஏனையோராலறியவொண்ணாத கணபதிமூர்த்தியானவர் இவ்வாறு

யுத்தசன்னத்தராய் வெளிக்கொண்டு வருவதைக் கயமுகாசுரன் அறிந்து ஆயிரம் வாகினி சேனைகள் தன்னைப் புடைசூழும்படி யாக வெளிக்கொண்டு குடை கொடி முதலிய சின்னங்களோடும் அமரர்களுங் கண்டு நடுங்கத்தக்க ஆயுதங்களோடும் வந்து யுத் தஞ் செய்யத் தொடங்கினன். அப்போது பூதவீரர்கள் தாக்கிய தாக்கலிலே அளவற்ற அவுணவீரர்கள் துடைகளறுந்தும் இடை களொடிந்தும் வாள்கள் முறிந்தும் கால்கள் மடிந்தும் தலைகள் பிளந்தும் சிலைகளிழந்தும் பல திசைகளிலுஞ் சின்னபின்னப் பட்டு ஓடி மாண்டார்கள். அதைக் கயமுகாசுரன் கண்டு கோபங் கொண்டு அளவற்ற பாணங்களைப் பிரயோகித்துப் பூதகணங்களைக் கொன்று கணபதிமூர்த்திக்கு எதிரே வந்து நின்று சிறிதும் அஞ் சாதவனாய ஓ சிறுபிள்ளாய் இதுகாறும் என்னோடு பகைத்து உயி ரோடிருந்தவர்கள் யார் நீ ஏன் வீணில் அழிவு தேடிக்கொள்கின் றனை யான் விட்டுவிடுகிறேன் இனியேனும் தப்பிப் பிழைத்துக் கொள் நான் சிவபிரானால் அடைந்திருக்கின்ற வரங்களைச் சிறி தும் அறிந்தாயில்லையென்று சொல்லினன்.

அதற்குக் கணேசமூர்த்தி புன்னகைசெய்து அடா பேதாய் உனக்கு வரங்கொடுத்தருளிய அச்சிவபிரானுடைய கிருபையினா லேயே உன்னைச் சங்கரித்துத் தேவர்களையெல்லாம் யதாப்பிரகா ரம் சொர்க்கலோகத்தில் நிலைபெற்றிருக்கச் செய்கின்றேன் பார் இதை உண்மையாக நம்பக்கடவை நீ ஏன் வீணிற் பேசுகின்றாய் அச்சமின்றி என்னோடு யுத்தஞ் செய்ய வல்லபமிருந்தால் விரை வில் நடத்துகவென்று திருவாய்மலர்ந்தனர். அதை அவுணர் பெருமான் கேட்டுக் கோபித்துத் தனது மேருவையொத்த வில்லை வட்டாகாரமாக வளைத்து அளவற்ற குரூரமாகிய பாணங்களைக் கோடைமழையைப்போலப் பொழிந்தான் அவைகளை யெல்லாம் எமது கர்த்தர் தமது கதாயுதத்தினால் விலக்கி அவன் பிடித்தி ருந்த வில்லைக் கண்டித்தெறிந்தனர். பின்பு கயமுகாசுரன் மற் றொரு வில்லை யெடுத்து வளைத்து அளவற்ற சரங்களை முன்னி னும் அதிகமாகத் தொடுத்துவிட்டான். அவைகளையுங் கணபதி மூர்த்தி முசலத்தினால் விலக்கி வில்லையும் பொடிப்படுத்தினர்

பின்பு கயமுகாசுரனானவன் அதிக உக்கிரத்தோடு நெருங்கி வந்து மற்றொரு வில்லில் இந்திராஸ்திரம் வருணாஸ்திரம் பிர்மாஸ்திரம் நரசிம்மாஸ்திரம் முதலிய தேவாஸ்திரங்களை மாறி மாறிப் பிரயோகித்தான். அவையனைத்தும் வெளிப்பட்ட மாத்திரத்தில் அனந்த உற்பாதங்களை விளைத்துக்கொண்டு வந்து எமது கர்த்தருடைய திருவடிகளில் வீழ்ந்துவிட்டன. அதைக் கயமுகாசுரன் கண்டு ஆச்சரியமுற்று மீட்டும் ஓர் தண்டாயுதத்தையேந்தி வந்து யுத்தஞ்செய்தான். அத்தண்டாயுதத்தைக் கணபதிமூர்த்தியானவர் தமது கதாயுதத்தினால் துகள்படுத்தி அவுணர்பெருமான் மார்பினுந்தாக்கினர். உடனே அவன் சிறிதுநேரஞ் சோகித்திருந்தனன். அப்போது சுவாமி தமது மழுவாயுதத்தினால் அவனுடைய சேனைகளையெல்லாம் சாம்பலாக்கி நின்றனர். பின்பு கயமுகாசுரன் சோகந்தீர்ந்து தனது சேனைகளெல்லாம் அழிந்து கிடக்கின்றமையைப்பார்த்து இவன் மேலான பராக்கிரமசாலியேயன்றிச் சிறுவனல்லனென்று நிச்சயித்தும் மானமேலிட்டவனாய் மீட்டும் அளவற்ற ஆயுதங்களைக்கொண்டு யுத்தஞ் செய்தனன்.

அவன் ஒரு ஆயுதத்தினாலும மரணம் நேராதபடிப் பெற்றிருக்கின்ற சிரந்த வரத்தைக் கணபதிமூர்த்தி ஆலோசித்துத் தமது வலப்புறக் கொம்பின் முனையையொடித்து அவன்மீது விட்டனர். அது வெளிப்பட்டுச் சகல லோகங்களுங் கலங்கும்படியாக ஆர்ப்பரித்துச் சென்று கயமுகாசுரனுடைய மார்பைப் பிளந்துபோய்ச் சமுத்திரத்தில் மூழ்கி மீட்டும் சுவாமியிடத்தில் வந்து சேர்ந்தது. பின்பு கணபதிமூர்த்தியானவர் சமுத்திரத்தில் ஸ்நானஞ் செய்து வந்த கொம்பினை ஓராயுதமாகத் தமது திருக்கரத்திலேந்தியருளினர். அப்போது தேவர்கள புட்ப வருடஞ் சொரிந்தார்கள். முனிவர்களெல்லாம் வேதாகமங்களினாற் பலமுறை தோத்திரஞ் செய்து பணிந்தார்கள். முன்பு எம்பெருமானுடைய கொம்பினாற் பிளக்கப்பட்டு மேருகிரி அடியோடே பெயர்ந்து விழுந்தது போல நிலத்தில் வீழ்ந்த கயமுகாசுரன் பின்பு அம்மலைக்கு நிகரான ஓர் மூடிகமாகி வட்டமாய்ச் சிவந்து அழலையுமிழ்கின்ற விழிகளும் திசையானைகளையெல்லாம் வீட்டத்தக்க நீண்ட வாலும் கடைவாய்க்கு வெளிப்பட்டிருக்கின்ற பருத்த பற்களும்

நீண்டு நிமிர்ந்து அழுத்தமுற்றிருக்கின்ற முகமும் சரீரமுழுதும் நிறைந்திருக்கின்றமயிரும் மலைகளையும் விருக்கங்களையும் உதைத்துச்சாய்க்க வல்ல கால்களும் ஆகாயத்தை அளாவி யுயர்ந்து உம்பருலகத்தையு மழிக்கத்தக்க முதுகும் பார்த்தவர்கள் அஞ்சிப் பயங்கொள்ளும்படியான கோரரூபங்கொண்டு சகல லோகங்களையுங் கலக்கி நாசம் பண்ணும்படியாக நடந்தான். அவ்வுருவத்தைத் தேவர்களும் முனிவர்களும் பார்த்துப்பயந்து பல திசைகளிலும் ஓடிப்பதுங்கினார்கள். இத்தன்மைத்தான கொடிய ரூபத்தோடு எதிர்த்து வருகின்ற ஆகுவினுடைய பராக்கிரமத்தை எமது கர்த்தர் கண்டு இமைப்போதில் அதனை அசைவறப் பிடித்து முதுகிலாரோகணித்தருளினர். சுவாமியுனுடைய திருமேனி தனது சரீரத்திற் பட்டமாத்திரத்தில் அவனுடைய அஞ்ஞானவிருள் விலகிப்போய் மெஞ்ஞான வொளிமிகுந்து மேன்மை பெற்றனன். இந்திரன் முதலிய தேவர்களெல்லாங் கணபதிமூர்த்தியினிடத்தில் விடைபெற்றுத் தம்பதிகளை யதாப்பிரகாரமடைந்து வாழ்ந்திருந்தார்கள்.

பின்பு கணபதிமூர்த்தியானவர் தமது ஆகுவாகனத்தை நடாத்திக்கொண்டு சகல சேனைகளும் புடைசூழ்ந்து வரும்படியாய் வடதீவினை நோக்கி யெழுந்தருளினர். அவ்விடத்தில் நெடுநாள் ஓராலமரப் பொந்தில் குருட்டு மலைப்பாம்பாகியிருந்த விண்டுவானவர் அவ்வடிவத்தினின்று நீங்கிப் பழையபடி தெய்வரூபம் பெற்றுக் கணபதிக்கெதிரில்வந்து பணிந்தெழுந்து இரு கரங்களையுஞ் சிரமேற் கூப்பிநின்று ஓ அட்டமூர்த்தமாயிருக்கின்ற அமலரே தேவரீருடைய தரிசன வீட்சணத்தினால் அடியேற்கு உமாதேவியார் கொடுத்த சாபம் நீங்கும்படியான பேற்றினையடைந்தேன். இனி இதைவிட யான் பெறத்தக்கபேறு வேறென்னவிருக்கின்றது என்று மிக்க மனமகிழ்ச்சியோடும் புகழ்ந்து புட்ப முதலிய திரவியங்களாற் பூசனை செய்து வேதாகமங்களினாற் ஸ்தோத்திரம் புரிந்து கைதட்டி நிருத்தமாடி மீட்டும் சாஷ்டாங்கமாய் பணிந்தெழுந்து சுவாமி அடியேற்குத் தேவரீர் தரிசனங்கொடுத்தருளிச் சகல நன்மைகளையுங் கிடைக்கச்செய்த இத்தினம் மார்கழிமாதச்

சஷ்டியாதலால் வருடந்தோறும்வருகின்ற இத்தினத்தில் யாவரே னும் தேவரீர்க்கு வழிபாடு செய்வார்களாயின் அவர்கள் சகல அரிட்டங்களினின்று நீங்கி இட்டகாமியார்த்தங்களைப்பெற்றுய் யும்படி அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனர் அதற்குக் கணேசமூர்த்தி அவ்வாறே செய்தருளுவமென்று கிருபை சுரந்து அவ்விண்டுவையுந் தம்மோடழைத்துக்கொண்டு சகல சேனைகளோடும் கயிலாயத்திற்குச்சென்று சிவபிரானையும் உமாதேவியாரையும் பணிந்து விடைபெற்று முதற்கோபுரவாய்த லின் முகப்பிலெழுந்தருளினர். அப்போது விண்டு முதலாயினோர் கணேசமூர்த்தியைப் பூசனைசெய்து சுவாமி அடியேங்கள் இது காறும் மிகுந்த கொடுமையான கயமுகாசுரனுக்குக் குட்டண முத லாகிய வணக்கங்களைச் செய்து அவனுடைய பணிகளை நடாத்தி வந்தனம் அவ்வணக்கங்களை இன்று முதல் அடியேங்கள் தேவரீ ருக்கெதிரே செய்கின்றனம் அவைகளைத் தேவரீரே வணக்கமாகக் கொண்டருளல்வேண்டும், அவ்வாறு தேவரீருக்கு வணக்கஞ்செய வோர்கள் யாவராயினும் அவர்கட்கு இஷ்டகாமியார்த்தங்களைக் கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டனர்.

கணபதிமூர்த்தியானவர் அவ்வாறே திருவாக்கருளி அத் திருமால் முதலிய தேவர்களுடன் தமது யதாஸ்தானமாகிய லவண புரம் (உப்பூர்) என்னும் மகாக்ஷேத்திரத்தையடைந்து வீற்றிருந் தருளினர். அப்போது அத்தலத்தில் திருமால் முதலாயினோர் கணேசமூர்த்தியைப் பூசனைசெய்து குட்டணம் தோட்புக்கரணம் முதலிய வணக்கங்களைச் செய்து நமஸ்கரித்துச் சகல வரங்களை யும் பெற்று அவ்வவர்களுடைய பதவிகளையடைந்தார்கள்.

கயமுகாசுரன் வதைப்படலம்

முற்றிற்று.

இராமன் பூசித்த படலம்.

கடல்சூழ்ந்த இப்பரதகண்டத்துள் சிறந்த ஆரியாவர்த்தமென் னும் இத்தேசத்தில் கோசலநாட்டின்கண் அயோத்திமா

நகரில் சூரியவமிசத்தரசனாகிய தசரத மகாராசன் செங்கோல் செலுத்திப் பூமியை ஆண்டுகொண்டிருக்கின்ற காலத்தில் நெடு நாளாகியும் புத்திரப்பேறின்றி மனம் வருந்தித் தமது குலகுரு வாகிய வசிட்ட மகாமுனிவரை வணங்கிச் சந்ததியுண்டாகும்படி யநுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அம்முனிவர் கிருபைகூர்ந்து ஓ தசரதமகாராசனே முன்னொரு காலத்தில் உரோமபதமகாராசன் தேசத்தில் பன்னிரு வருடம் மழையில் லாதிருந்த பஞ்சம் தாம் அடிவைத்தவுடன் மழைபெய்து மாறும் படிக்கருளிய மகானாகிய கலைக்கோட்டுமுனிவரைக்கொண்டு புத் திரகாமேஷ்டியாகஞ் செய்வாயாகில் புத்திரப்பேறுண்டாமென்று மொழிந்தருளினர். அதுகேட்ட தசரதமகாராசன் உடன் அவ் வாறே செய்ய எண்ணங்கொண்டு அக்கலைக்கோட்டுமுனிவரை யழைத்துக்கொண்டு வந்து புத்திரகாமேஷ்டி செய்து அதில் எழுந்த அவிர்ப்பாகத்தைத் தம்மனைவியர் மூவர்க்கும் கொடுக்க மூத்த மனையாளாகிய கௌசலைக்கு இராமனும் இரண்டாவது மனையாளாகிய கைகேயிக்குப் பரதனும் மூன்றாவது மனையாளா கிய சுபத்திரைக்கு இலக்குமணனும் சத்துருக்கனனும் பிறந்த னர் மூத்தகுமாரனாகிய இராமனுக்கு மிதுலா நகரத்துச் சனகன் மகள் சீதாதேவியை விவாகஞ் செய்வித்து நெடுநாள் அரசாக்ஷி செய்துகொண்டிருந்து முதுமையில் இராமனுக்குப் பட்டங்கட் டுவிக்க முயலும்போது இரண்டாவது மனைவியாகிய கைகேயி யானவள் கூனியின் துர்ப்போதனையால் மதிகெட்டு அதைத்தடுக் கும்பொருட்டுத் தனது நாயகனாகிய தசரதமகாராசனையடைந்து முன்பு நீர் எனக்குத் தந்திருக்கின்ற வரங்களிரண்டையும் இப் பொழுது கொடுக்கவேண்டுமென்று கேட்டனள் அதற்குத் தச ரதன் கொடுக்கின்றேன் அவற்றைச் சொல்லென்றனன். அவள் இராமனை வனத்துக்கனுப்பல் ஒன்று பரதனுக்குப் பட்டங்கட் டுதல் ஒன்று என்றனள்.

அதுகேட்ட தசரதமகாராசன் மூர்ச்சித்து வீழ்ந்தனன் அப்பொழுது கைகேயியானவள் இராமனை வரவழைத்து உன்னை வனத்துக்குப்போகும்படி மகாராசாவினுடைய உத்திரவு என்ற னள் அதுகேட்டு இராமபிரான் தம்பி இலக்குமணனையும் மனைவி

யாகிய சீதாதேவியையும் கூட அழைத்துக்கொண்டு அயோத்தியினின்றும் புறப்பட்டுக் கால்நடையாய்த் தண்டகாரணியத்தை நோக்கிச் சென்று கங்காநதியின் கரையையடைந்து குகனோடு நட்புற்றுக் கங்கையைக்கடந்து பரத்துவாசமுனிவர் ஆச்சிரமத்தில் தங்கிச் சித்திரகூட மலையையடைந்தார் இவ்வாறு இராமபிரான் சென்றதை மந்திரிகள் சொல்லக்கேட்டலும் தசரதமகாராசன் தேகவியோகமாயினன் பின்பு இச்செய்கையைக் கேகயத்திற்குச் சென்றிருந்த பரதசத்துருக்கனர் கேள்வியுற்று அயோத்தி வந்து பிதாவினுடைய ஈமக்கடன்களைச் செய்தனர்.

உடன் பரதன் சித்திரகூடத்திற்சென்று இராமபிரானைத் தரிசித்துவணங்கித் தந்தையின் மரணத்தைத் தெரிவிக்க அவ்விராமபிரானும் துன்புற்றுத் திலதர்ப்பணஞ் செய்துவிட்டுப் பரதனை நோக்கித் தந்தையின் சொற்படி நீ அயோத்தியில் இருந்து அரசாளுகவென்றும் யான் பதினான்கு வருடம் வனவாசஞ் செய்து வருகின்றேனென்றும் சொல்லினர். அதுகேட்ட பரதன் மறுத்தும் அவருடைய ஆக்கினைக்கஞ்சிப் பாதுகையைப் பெற்றுக் கொண்டு மீண்டு நந்திக்கிராமத்தை யடைந்திருந்தனன்.

பின்பு இராமபிரான் இலக்குமணன் சீதாதேவியுடன் சித்திரகூடத்தினின்றும் புறப்பட்டுத் தண்டகாரணியத்தை நோக்கிச் சென்றனர் அங்கு எதிர்த்த விராதனைக் கொன்று அகத்தியாச்சிரமத்தையடைந்து அவரால் கொடுக்கப்பட்ட வாள் வில் அம்பறாத்தூணிகளைப் பெற்றுக்கொண்டு பஞ்சவடி தீரத்தை யடைந்தார். அங்கு நின்று செல்லும்பொழுது சூர்ப்பநகை யென்பவள் சீதாதேவியைக் கைப்பற்ற அதுகண்ட இலக்குமணன் அவளது காதையும் மூக்கையுமறுத்துச் சீதாதேவியை மீட்டனன். அங்கு நின்று தெற்கு நோக்கிச்செல்ல கரன் முதலிய அரக்கர்கள்வந்து எதிர்க்க அவர்களைக் கொன்று அங்கிருக்கும்பொழுது முன்பு காது மூக்கறுபட்ட சூர்ப்பநகையானவள் வந்து சீதாதேவியின் வடிவழகைச் சொல்லக்கேட்ட இராவணன் காமவெறி கொண்டு மாரீசனை அழகிய மானாய் அவ்விடத்திற்குச்செல்ல ஏவிவிட்டுத் தானும் பின்பு வந்தனன் அம்மாரீசனாகிய மான் வரக்கண்ட சீதா

தேவி அதை அபேட்சிக்க அதனைத் தொடர்ந்து இராம லெட்சு மணர்செல்ல இராவணன் சீதாதேவி தனித்திருப்பதைக் கண்டு நெருங்கிவர அவள் கண்டு பயந்து அக்கினிக்குளொளிந்துகொள்ள அவ்வக்கினியால் உண்டு பண்ணி வெளிப்படுத்தப்பட்ட மாயா சீதையை யுண்மையான சீதையென்று நினைத்துக் கைப்பற்றிக் கொண்டு இலங்கையில் சேர்த்தனன் இவ்வாறாகப் பின்பு இராம லட்சுமணர் மீண்டு பன்னசாலைக்குவந்து பார்க்கச் சீதையைக்கா ணாதவராய் அவளைத் தேடிக்கொண்டு தெற்கு நோக்கிச் சென்ற னர் அங்குக் கவந்தன் என்பான் எதிர்க்க அவனைக் கொன்று சவரி யின் ஆச்சிரமத்தை யடைந்து அவள் சீதாதேவியைத் தேடுவ தற்கு மதங்கமலையில் வானரபதியாகிய சுக்கிரீவன் இருக்கின்றான் அவனை நட்புற்று அவன் உதவியால் சீதாதேவியைக் கண்டு மீட் கலாம் என்று சொல்ல இராம லக்குமணர் கிட்கிந்தைக் கருகி லுள்ள மதங்கமலையைச் சார்தலும் அங்குச் சுக்கிரீவனுடைய சேவகனாகிய அநுமான் எதிர்வரக்கண்டு அவனால் சுக்கிரீவனிடஞ் சார்ந்து அக்கினி சாட்சியாய் அவனோடு நட்புற்றனர் பின்பு சுக் கிரீவனுக்குப் பகைவனாகிய வாலியைக்கொன்று சுக்கிரீவனைக் கிட்கிந்தைக் கரசனாக முடிசூட்டி அங்கிருக்கப் பின்பு சுக்கிரீ வன் வானரசேனைகளோடு இராமபிரானிடம் வந்து சீதாதேவி யைத்தேடிக்கண்டு விரைவில் வரக்கடவீர்களென்று வானரசே னைத் தலைவர்களைக் கீழ்த்திசை மேற்றிசை வடதிசைகளுக்கு ஏவிவிட்டுப் பின்பு தென்திசைக்கு அநுமானைச் செல்லும்படி சொல்ல அப்பொழுது இராமபிரான் சீதாதேவிக்கு அடையாளமாகக் கொடுவென்று தன்னுடைய முத்திராமோதிரத்தை அநு மான் கையில் கொடுத்தருளினார்.

அநுமான் முதலிய நால்வரும் தென்றிசை நோக்கிச்சென்று வனங்களிலும் மலைகளிலும் குகைகளிலும் தேடிச்சீதாதேவியைக் காணாமல் தென்கடற்கரையிலுள்ள மகேந்திர மலையை யடைந்த னர் இலங்கைக்குச் செல்லக் கடலைத்தாண்டும் வலிமையை யுடை யவன் அநுமானே யென்று அங்கதன் முதலாயினோர் சொல்ல அவ் வநுமான் அம்மலையினின்று மெழும்பி இலங்கையில் குதித்தான்

அங்கு இலங்கைக்குக் காவலாயிருந்த இலங்கணி வந்து எதிர்க்க அவளையறைந்து கொன்றனன். உயர்ந்த மதிலும் ஆழ்ந்த அகழும் சூழ்ந்து பொன்மயமாய் விளங்கும் மாடங்கள் நெருங்கிய அவ்விலங்கைநகர் முழுதும் தேடியும் சீதாதேவியைக் காணுதவனுய்ச்சோர்வுற்றுப் பின்பு அசோகவனத்தில் அரக்கமாதர்கள் சூழ்ந்து காவலாயிருக்க நடுவிலிருக்கின்ற சீதாதேவியைக் கண்டு இராமபிரானுடைய தூதன் யான் என்று சொல்லி இராமபிரானுடைய விர்த்தாந்தங்களையும் சொல்லி அவ்விராமபிரானுடைய மோதிரத்தையும் சீதாதேவி கையிற் கொடுத்தனன். பின் அநுமான் அவ்வசோகவனத்தை யழிக்க எதிர்த்த கிங்கரரைக் கொன்று பஞ்சசேனுதிபதிகளையுங் கொன்னறன் அச்செய்தியை யிராவணன் கேட்டுக்கோபங்கொண்டு இந்திரசித்தை அனுப்ப அவன் சென்று அவ்வநுவானைப் பிர்ம்மாத்திரத்தால் கட்டியிழுத்துக் கொண்டுவந்து தன் பிதாவாகிய இராவணன் முன் விடுத்தனன். அவன் அவ்வநுமானை நோக்கி நீ யார் என்று கேட்க அநுமான் உன்னை வாலிற்பிணித்தவனது தோளையறுத்த இராமபிரானுடைய தூதன் யான் என்று அவனை யிழித்துச் சொல்லிப் பதிவிரதா சிரோன்மணியாகிய சீதாதேவியை இப்பொழுதே விட்டு விடு இல்லாவிடில் இராமபிரானுடைய ஒரே பாணமானது உனது உடலைப் பருந்துகளுக்கு விருந்து செய்யுமென்றனன்.

அவ்விழிசொல்லைக்கேட்ட இராவணன் மிக்ககோபங்கொண்டு அநுமானது வாலில் துணியைச்சுற்றி நெருப்பூட்டிவிட அவ்வநுமான் அவ்விலங்கையை முற்றும் கொளுத்திவிட்டு வந்து சீதாதேவியை வணங்கி நிற்க அவள் இராமபிரானுக்குத் தன்னடையாளமாகக் கொடுக்கும்படித் தனது சூளாமணியைக் கொடுக்க அதைப்பெற்றுக்கொண்டு அநுமான் மீட்டும் கடலைத்தாவி மகேந்திர மலையை யடைந்து அங்கதனேடு அங்கு நிகழ்ந்தயாவும் சொல்லி அவர்களுடன் அங்குநின்றெழும்பிக் கிட்கிந்தைக்குவந்து இராமபிரானையுஞ் சுக்ரீவனையும் வணங்கிச் சீதாதேவியை யிலங்கையில் கண்டனன் என்று வணங்கிநின்று விண்ணப்பஞ்செய்து சூளாமணியையும் கொடுத்தனன்.

அங்ஙனம் அநுமான் சொல்லியவுடன் இராமபிரான் சுக்கிரீவன் முன்னும் இலக்குமணன் பின்னும் வானரசேனைகள் சூழ்ந்தும்வரப் பிரச்சிரவண மலையினின்று புறப்பட்டு மகோததியாகிய கீழ்கடற்கரை யோரமாய்த் தெற்குநோக்கிச் செல்லுகின்றனர். அங்ஙனஞ் செல்லுமார்க்கத்தில் இரத்நாகரமாகிய தென்கடற்கரைக்கு முப்பது குரோசதூரம் வடக்கிலுள்ளதாகிய ஒரு வனத்தை யடைந்தனர்.

அவ்வனமானது வன்னிவிருட்சங்களால் சூழ்ந்து பரிசுத்தமாய் இருக்கக்கண்டு அதனுள் புகுதலும் ஒரு திவ்வியமநோகரமாய் விநாயக்கடவுள் வெய்யிலில் வீற்றிருக்கின்ற ஆலயமிருக்கக் கண்டு அவ்விநாயகமூர்த்தியை இராமபிரான் முதலியோர் தரிசித்தனர் அப்பொழுது இராமபிரான் இவ்விநாயகமூர்த்தி சுயம்புவாயும் அடியார்களுக்கு அநுக்கிரகிக்கும் கிருபாமூர்த்தியாயும் எழுந்தருளியிருக்கின்றனரே இக்கடவுளின் உற்பத்தியாது என உள்ளத்தில் ஞானநோக்கினால் நோக்கி முற்காலத்தில் சூரியதேவன் உபாசிக்க அவனுக்குப் பிரத்தியட்சமாய் எழுந்தருளி அவனது இடரைப்போக்கி வேண்டும்வரங்களைக் கொடுத்தருளி அவன் வேண்டியபடி வெயிலுகந்தருளிய விநாயகமூர்த்தியென்று தெரிந்துகொண்டு தானும் தன்மனைவியாகிய சீதாதேவியை மீட்பதறகாகக் கடலில் அணைகட்டி இலங்கைக்குச்சென்று இராக்கதர்களைத்தண்டித்து வெற்றிபெறும்படிக்கு வேண்டிய வரங்களைப் பெறும்பொருட்டு இவ்விநாயகக்கடவுளைப் பூசிக்கவேண்டுமென உள்ளங்கொண்டனர்.

அங்ஙனமே இராமபிரான் இலக்குமணன் சுக்ரீவன் அநுமான்முதலியோரைநோக்கி இவ்விநாயகக்கடவுளைப்பூசிக்கவேண்டிய திரவியங்களைச்சேகரிக்கும்படிச்சொல்ல அவர்களும் அபிஷேகத்திற்குவேண்டிய பால் தயிர் முதலிய பஞ்சகௌவியங்களையும் தேன்முதலியவைகளையும் சந்தனம் புஷ்பம் முதலியவைகளையும் தூபதீபங்களையும் முக்கனிகள் முதலிய கனிகளையும் நைவேதனப்பொருள்களையும் உபசாரப்பொருள்களையும் தேடித்தேடிக் கொண்டு வந்துசேர்ந்தனர் அப்பொழுது இராமபிரான் அவ்விநா

யகப்பிரான் சந்நிதியிலிருக்கின்ற மகோததிதீர்த்தகட்டத்தில் விதிப்படி நீராடி மரவுரியுடுத்து விபூதிருத்திராக்ஷம் தரித்து அவ்விநாயகக்கடவுள் ஆலயத்திற்கு மேற்கிலுள்ள சூரியபுட்கரணியில் தீர்த்தங்கொண்டு வந்து கடம்வைத்துப் பூசித்துச் செபித்து அவ்விநாயகமூர்த்திக்குப் பஞ்சகௌவியத்தாலும் தேன் கனிவர்க்கங்களின் சாறு இளநீர் முதலியவற்றாலும் அபிஷேகஞ் செய்து கடத்திலுள்ள மந்திர நீரால் வேதமந்திரத்தோடு அபிஷேகஞ் செய்து ஒற்றாடையால் துடைத்து வாசனைபொருந்திய கலவைச்சந்தனம் விபூதியிட்டுப் பொற்பட்டாடைசாத்தி இரத்தினகிரீடம் முதலிய ஆபரணங்களை அலங்கரித்து மந்தாரம் தாமரை முதலிய மலர்களாலும் அறுகு வன்னி முதலியவற்றாலும் விநாயகக் கடவுளின் ஆயிரம் திருநாமங்களையும் உச்சரித்து அர்ச்சனை செய்து தூபதீபம் சுழற்றிக்காட்டி மோதக முதலிய பண்ணியங்களையும் அறுசுவையோடுகூடிய ஓதனங்கள் பாயசம் முதலிய மகாநைவேதனங்களையுஞ்செய்து கற்பூரநீராஞ்சனமுஞ் செய்து பூஜைமுடித்துச் சந்நிதியில்நின்று தோத்திரம் செய்வதாயினர்.

எங்கும்நிறைந்து பிரணவசொரூபியாய் எழுந்தருளியிருக்கின்ற! விநாயகமூர்த்தியே! யான் மனைவியின்பொருட்டு மிக வருத்தமுற்றிருக்கின்றேன் இராவணன்முதலிய துட்டர்களைக் கொன்று வெற்றிபெற்று மனைவியை மீட்டுக்கொண்டு வரும்படிக்கும் இடையில்நேரும் விக்கினங்கள் நீக்கும்படிக்கும் வரம் தந்தருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர்.

அங்ஙனமே வெய்யிலுகந்த விநாயகக்கடவுள் வரங்கொடுத்தருளப்பெற்றுச் சாட்டாங்கமாய்நமஸ்கரித்து வலம்வந்து மீட்டும் நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு இலக்குமணன் சுக்கிரீவன் அநுமான் முதலியோருடன் அங்குநின்று புறப்பட்டு அத்தலத்திற்குத் தென்மேற்கில் ஒருயோசனை தூரத்திலிருக்கின்ற ஒரு சுப்பிரமணிய க்ஷேத்திரத்தை யடைந்து அவரையும்பூசித்து வேண்டிய வரங்களைப்பெற்றுக்கொண்டு அதற்குக்கிழக்கில் கடற்கரையிலுள்ள தேவிபுரம்என்னும் தலத்தில் அணைகட்டுவதற்குத் தொடங்கி முதலில் நவக்கிரகங்களை அம்மகோததிதீரத்தில் பிர

திஷ்டைசெய்து சேதுவைக்கட்டி அதன்வழியாய் வானரசேனைகளுடன் கடலைத்தாண்டி இலங்கையிற்சென்று இராவணனுதி அரக்கர்களைச் சங்கரித்து வெற்றியடைந்து சீதாபிராட்டியை மீட்டுக்கொண்டு இராமபிரான் கந்தமாதனத்தில் இராமலிங்கபிரதிட்டை செய்து அயோத்தியையடைந்து பட்டாபிடேகம் செய்துகொண்டு செங்கோல்செலுத்தி வாழ்ந்து வீற்றிருந்தனர்.

இராமன் பூசித்தபடலம்
முற்றிற்று.

வீமராசன் புத்திரப்பேறு பெற்றபடலம்.

கடல்சூழ்ந்த பூமண்டலத்தில் யாவராலும் புகழத்தக்க வளம் நிறைந்த விதர்ப்பநாட்டில் தேவருலகையளாவிய மாடமாளிகை கூடகோபுரங்கள் முதலிய அலங்காரங்களோடு விளங்குகின்ற கவுண்டின்னியம் என்னும் ஒருநகரம் உள்ளது அந்நகரத்தில் தவசீலனுகியும் வேதவொழுக்கங்களில் தவருதவனுகியும் வலிமிகுந்த புயங்களையுடையவனுகியும் தருமசிந்தையுடையவனுகியும் பகையரசர்கள் தோற்றுவந்துவணங்கும் பாதங்களையுடையவனுகியும் வீமன் என்னும் பெயரையுடைய ஒரு அரசன் செங்கோல் செலுத்திக்கொண்டிருந்தனன்.

அவ்வரசனுக்குக் கற்பில் அருந்ததியைநிகர்த்து இல்லறஒழுக்கங்களில் தவறின்றி நடந்து வருகின்ற சாருகாசினி என்னும் ஓர் மனைவியிருந்தனள் அம்மனைவியோடு சகலசெல்வங்களையும் அனுபவித்துக்கொண்டு பெரியோர்சொல்கின்ற நெறிகளின்படி பெருமைபொருந்திய பூமண்டலத்தை அரசாக்ஷிசெய்துவருகின்றகாலத்து நெடுநாள் புத்திரபேறுஇல்லாமல் பலதெய்வங்களை வழிபட்டும்பல தானங்களைச்செய்தும் பலதருமங்களைச்செய்தும் யாகங்களைச்செய்தும் தனதுகவலையொழியாதவனுகி மனமெலிந்து தன் மனைவியைநோக்கிப் புத்திரப்பேறில்லாதார் இவ்வுலகத்தை அரசாளினும் இம்மை மறுமைப்பயன்களை அடையார்கள் வாழ்

இன்ற இல்வாழ்க்கையும் பயனற்றதாகும் நமது செல்வங்களெல்லாம் ஒரு புத்திரப்பேறில்லாமல் வீணில் போகின்றதே! இனியாவது வனத்திற்சென்று பெரியோர்களையடுத்துத் தவம் செய்வோமாகில் புத்திரப்பேறு தவருமல் கிடைக்கும். இதுவே நாம் இனி நடந்துகொள்ளவேண்டிய முடிவென்று சொல்லித் தீர்மானித்துத் தன் அரசாக்ஷியை மந்திரியினிடம் ஒப்பிவித்துவிட்டு மனைவியுடன் வனத்திற்சென்று அவர்களின் நல்வினைப்பயனுல் விசுவாமித்திர முனிவரது ஆசிரமத்தின் பக்கத்தில் சேர்ந்தார்கள் பற்பல வளப்பங்களால் சிறப்புற்ற ஒரு பன்னசாலையைக் கண்டார்கள் அதில் அநேக முனிவர்கள் புடைசூழ்ந்து வணங்கும்படியாய்ப் பிரமதேவனைப்போல் புலித்தோல் ஆசனத்தில் வீற்றிருந்து வேதாகமப் பொருள்களை விரித்துரைத்துக்கொண்டிருக்கின்ற விசுவாமித்திர முனிவரை அவ்வீமராசனும் அவன் மனைவியும் கண்டு சாஷ்டாங்கமாய் வணங்கினர்கள்.

அவர்களை அம்முனிவர் தழுவி உங்களுக்குப் புத்திரன் உண்டாகக் கடவதென்று ஆசீர்வதித்தனர். அவ்விருவரும் எழுந்து கைகூப்பிநின்றூர்கள். பின்பு அவ்விசுவாமித்திர முனிவர் வீமராசனைப் பார்த்து நீ யார் நம் பன்னசாலையை நோக்கி வந்தது யாது காரணம் சொல்லுக என்று கேட்டனர். வீமராசன் செவிக்கமுதாய்க்கேட்டுக் களிப்படைந்து சுவாமி யான் கவுண்டின்னிய தேசத்துக்கரசன் என் பெயர் வீமன். இவள் என் மனைவி சாருகாசினி. யாங்கள் இருவரும் அளவற்ற தருமங்களைச் செய்தும் ஒரு புத்திரப்பேறில்லாமையால் மனமெலிந்து நகரத்தைவிட்டு இவ்வனத்திற்கு வந்தோம். எமது பூர்வபுண்ணியத்தினுல் தேவரீரைத் தெரிசிக்கப்பெற்றேம். ஓ! கிருபாமூர்த்தியே உம்மைக் கண்டபோதே புத்திரப்பேறுண்டாகும் என்று துணிவுற்றேம்.

உம்மைத் தரிசித்தவுடன் தேவரீர் செய்தருளிய ஆசீர்வாதத்தால் இத்தினமே புத்திரப்பேற்றையடைந்தவராயினேம். உமது ஆசீர்வாதம் வீணிற்போகுமா என்றுசொல்லி வீமராசன் பிரார்த்தித்து நின்றனன் அதுகேட்ட விசுவாமித்திரமுனிவர் ஓ! அரசனே உனது வம்சத்திலிருந்த முன்னேர்கள் நித்தமும் விநாயக பூசைசெய்து புத்திரப்பேறுமுதலிய மிகுந்தநன்மைகளையெல்லாம்

பெற்று வாழ்ந்திருந்தார்கள் நீங்களிருவரும் அவ்வண்ணமே விநாயகமூர்த்தியைப் பூசனைசெய்து வருவீர்களாயில் உங்களுக்குப் புத்திரசம்பத்துண்டாகுமென்றார்.

அதுகேட்ட வீமராசன் அம்முனிவரை மிகுந்த பத்தியோடு வணங்கித் தேவரீர் அருளியபடியே விநாயகமூர்த்தியைப் பூசிக்கிறேன், எத்தலத்தில் விநாயகமூர்த்தியைப் பூசித்தால் உள்ளங்கைநெல்லிக்கனிபோல் விரைவில் பயனடையலாமோ அத்தலத்தையும் அவ்விநாயகமூர்த்தியையும் சொல்லியருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அம்முனிவர் அரசனைநோக்கிச் சொல்லுகின்றார்.

இப்பூவுலகத்தில் பாண்டியதேசத்தில் மகோததியாகிய கீழ்கடற்கரையில் சேதுவுக்கு இரண்டுயோசனைவடக்கில் (சமிவனம்) வன்னிவனம் ஒன்று இருக்கின்றது. அது மகாபுண்ணியதலம் அத்தலத்தில் முன்பு சூரியதேவன் பூசித்துப் பலவரங்களைப் பெற்று அவன் வேண்டுகோளின்படி அவனது கிரணங்கள் திருமேனியில் தழுவப்பெற்றும் பின்பு தசரதபுத்திரராகிய இராமபிரான் இராவணசம்மாரத்தின்பொருட்டு இலங்கைக்குச்செல்லக் கடலில் அணைகட்டத்தொடங்கி முதலில் பூசிக்கப்பெற்றும் உள்ள ஒரு விநாயகமூர்த்தி இருக்கின்றனர். அத்தலத்தின்பெயர் (லவணபுரம்) உப்பூர் என்றதாம் அவ்விநாயகமூர்த்தியின் நாமம் யாதெனில் (ஆதபேச்சாவிநாயகர்) வெயிலுகந்தவிநாயகர் ஆம் அத்தலத்தை நீங்கள் அடைந்து அவ்விநாயகமூர்த்தியைப் பூசித்து உபாசித்தால் விரைவில் சற்புத்திர சம்பத்தை அடைவீர்கள் என்றனர்.

அதுகேட்ட வீமராசன் உடன் தன்மனைவி சாருகாசினியோடு அம்முனிவரிடத்து விடைபெற்றுக்கொண்டு அவ்வனத்தினின்று புறப்பட்டுத் தென்திசை நோக்கிச்சென்று அம்முனிவர் சொல்லிய அடையாளப்படிக்குள்ள வன்னிவனக்ஷேத்திரத்தை அடைதலும் தம் மனம் பரிசுத்தமாய் மிகுந்த ஆனந்தபரிதமாயிருக்கப்பெற்று அவ்வனத்தினுள் நுழைய ஒரு திவ்விய அலங்காரமுள்ள ஆலயத்தைக்கண்டனர்.

அந்த ஆலயத்துள் சூரிய கிரணங்கள் தமது திருமேனியில் தீண்டிக்கொண்டிருக்கும்படி யானைமுகமும் நீண்ட துதிக்கையும் நான்கு கரங்களும் முக்கண்களும் பொலியக் கோடி சூரியப்பிரகாசமாய் எழுந்தருளி வீற்றிருக்கின்ற விநாயகமூர்த்தியைத் தெரிசித்தார்கள் உடன் பேரானந்தங்கொண்டு அந்த வெயிலுகந்த விநாயகமூர்த்தியைப் பூசிக்கும் பொருட்டு அவ்வீமராசன் பத்தினியாகிய சாருகாசினியுடன் அவர் சந்நிதியிலுள்ள மகோததி தீர்த்தத்தில் சங்கற்ப பூர்வமாய் நீராடிப் பின்பு அவ்வாலயத்தின் மேல்பாலுள்ள சூரிய தீர்த்தத்திலும் நீராடிப் பட்டாடை தரித்து விபூதி ருத்திராட்சம் பூண்டு அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு தீர்த்தம் புஷ்பம் சந்தனம் பால் பழவர்க்கங்கள் நைவேதனங்கள் முதலிய பூசாபதார்த்தங்களெல்லாங் கைக்கொண்டு ஆலயத்துள் சென்று விநாயகமூர்த்தியை அபிஷேகிக்க நீர் நிறைந்த தபனகும்பம் வைத்துப்பூசித்து வேத மந்திரங்களைச்செபித்து முதலில் தைலாபிஷேகஞ்செய்து நீராட்டிப் பால், தயிர், தேன், பஞ்சாமிருத முதலிய அபிஷேகங்கள்செய்து பின்பு பரிமள மிகுந்த சந்தநாபிடேகஞ்செய்து தபனகும்பதீர்த்தத்தால் அபிஷேகஞ்செய்து ஒற்றுடையால் ஒற்றிப் பீதாம்பரஞ்சாத்தி விபூதி சந்தனமிட்டு இரத்தினாபரணங்களால் அலங்கரித்து வன்னி அறுகு மந்தார மலர் வெள்ளெருக்கமலர் கொன்றைமலர் தும்பைமலர் வில்வம் முதலியவற்றால் அலங்கரித்து ஆயிரந்தாமரைமலர்களால் ஆயிரநாமங்களை உச்சரித்து அருச்சனைசெய்து தூப தீபங்கொடுத்து அறுசுவைப் போனகம் மோதகம் அப்பம் எள்ளுருண்டை முதலிய பண்ணியங்களையும் முக்கனிகளையும் விளா, நாவல், பழங்களையும் நிவேதித்துப் பதினாறு உபசாரங்களுஞ்செய்து தேங்காயுடைத்து நிவேதித்துத் தாம்பூலஞ் சமர்ப்பித்துக் கற்பூர நீராஞ்சனம் செய்து திரியாங்க பஞ்சாங்க அஷ்டாங்க நமஸ்காரங்கள் செய்து வலம்வந்து மீட்டும் நமஸ்கரித்துச் சந்நிதியில்நின்று வெயிலுகந்த விநாயக மூர்த்தியைத் துதித்து முன்பு விசுவாமித்திர முனிவரால் தனக்கு உபதேசிக்கப்பெற்ற விநாயக மூலமந்திரமாகிய ஏகாக்ஷர மந்திரத்தைச் செபித்துத் தியானித்துக்கொண்டிருக்கும் பொழுது விநாயகமூர்த்தி கிருபைகூர்ந்து பிரத்தியட்சமாகி வீமராசனை நோக்கித் திருவாய் மலர்வதாயினர்.

ஓ அரசனே நீசெய்த பூசனைக்கு யாம் மகிழ்ந்தோம் உனக்கு வேண்டிய வரங்களைக் கேளென்றருளலும் வீமராசன் சுவாமி யைச் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துக் கர்த்தனே உமது திருவடி களில் இடைவிடாத பத்தியையும் ஒரு சிறந்தபுத்திரனையும் முடி வில் முத்தியையும் தந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொள்ள வெயிலுகந்த விநாயகமூர்த்தியானவர் வீமராசனைப் பார்த்து அன்பனே நீவேண்டியபடியே அம்மூன்றுவரங்களில் உனக்கு நம்மிடத்தில் இடைவிடாத அன்பையும் சொர்ணரூபம் பெற்ற ஒரு புத்திரனையும் தந்தோம். இனி அந்தியநாளில் முத் தியையும் கொடுப்போம் என்று திருவாய்மலர்ந்து நீயும் மனைவி யும் உமது நகரத்திற்குச் செல்லக்கடவீர் என்று விடைகொடுத் தருளினார்.

பின்பு வீமராசன் மனைவியுடன் விநாயகமூர்த்தியை மீட்டும் பூசித்து நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு அங்குநின்றும் புறப்பட்டுத் தன் விதர்ப்பநாட்டின் கௌண்டின்னிய நகரத்தை அடைதலும், மந்திரி முதலிய பரிவாரங்கள் எதிர்கொள்ள அரண்மனையை அடைந்து வாழ்ந்திருக்கும் காலத்து அவன் மனைவியாகிய சாருகாசினி வயிற்றில் கருப்பமுண்டாகிச் சொர்ண மலைபோன்ற உருவத்தோடு சகலரும் அற்புதம் கொள்ளத்தக்க வோர் புத்திரன் உற்பவித்தான். அதனால் வீமராசன் அகமகிழ்ச்சி கொண்டு புத்திரனுண்டானதற்கு நடத்தவேண்டிய சடங்குகளைக் கிரமப்படி நடப்பித்து அப்புத்திரன் உருக்குமம் (பொன்) போன்ற ஒளியுள்ள சரீரத்தினன் ஆதலால் உருக்குமாங்கன் என்னும் நாமகரணஞ்செய்து அப்புத்திரனையும் சாருகாசினை யையும் அழைத்துக்கொண்டு பரிவாரசனங்களுடன் தன் நகரத் தினின்றும் புறப்பட்டுத் தென்றிசை நோக்கிச்சென்று மீட்டும் (லவணபுரம்) உப்பூர் என்ற க்ஷேத்திரத்தையடைந்து கிருபா மூர்த்தியாகிய வெயிலுகந்த விநாயகக்கடவுளைத் தரிசித்துப் பூசித்து வணங்கித் தனது புத்திரனாகிய உருக்குமாங்கனென்னும் குழந்தையை விநாயகக்கடவுளின் திருவடிகளில் நமஸ்கரிக்கச் செய்து எனது குலமுழுதும் அடிமை கொண்டருளல் வேண்டு மெனப் பிரார்த்தித்தனன்.

வெயிலுகந்தவிநாயகக்கடவுள் அவ்வண்ணமேயாகுக என்று திருவாய் மலர்ந்தருள வீமராசன் அவ்விநாயக மூர்த்திக்கு நவரெத்தின கவசகுண்டல ஆபரணாதிகளை அணிந்து அவ்வாலயத்தினையும் புதுக்கித் திருப்பணிச்செய்து பிரமோற்சவம் பத்துதினம் முன்தொடங்கி முதனாள் துவசாரோகணஞ்செய்து புஷ்பவிமானம், இரண்டாநாள் பூதவாகனம், மூன்றாநாள் சிங்கவாகனம், நான்காநாள் பெருச்சாளிவாகனம், ஐந்தாநாள் யானைவாகனம், ஆறாநாள் இடபவாகனம், ஏழாநாள் மயில்வாகனம், எட்டாநாள் குதிரைவாகனம், ஒன்பதாநாளாகிய சிம்மமாதம் சுக்கிலபட்ச சதுர்த்தியில் மகாரதம் இவைகளில் ஆரோகணஞ்செய்து திருவீதியிலெழுந்தருளச்செய்வித்துப் பத்தாநாள் மகோததிதீர்த்த கட்டத்தில் தீர்த்தவாரி யுற்சவமும் செய்வித்து துவசாவரோகணமும் செய்வித்து ஆநந்தபரிதனாப் விடைபெற்றுக்கொண்டு சாருகாசினியுடனும் ருக்குமாங்கன் என்னும் புத்திரனுடனும் தன் நகரத்திற்குச்சென்று அரசாட்சி செய்துகொண்டு வாழ்வுற்றிருந்தனன்.

வீமராசன் புத்திரப்பேறுபெற்ற படலம்
முற்றிற்று.

தீர்த்தவிசேடப் படலம்

லவணபுரமென்னும் உப்பூரில் வெயிலுகந்த விநாயகமூர்த்தியின் சன்னிதியில் உள்ள மகோததியாகிய விநாயக தீர்த்தத்தில் ஒருக்கால் ஆடினவர்கள் சதுர்வித புருஷார்த்தங்களையும் அடைகிறார்கள். அதினால் அத்தீர்த்தத்திற்குத் தருமதீர்த்தம், அருத்ததீர்த்தம், காமதீர்த்தம், மோட்சதீர்த்தம் என்று பெயராம். அத்தீர்த்தமானது குட்டநோய், தொழுநோய், கும்பநோய், கம்பநோய், முடநோய், சுரப்புநோய், வெட்டைநோய், கழுநோய், வெம்மைநோய், வாதநோய், முதலிய வியாதிகளையும் காமம் வெகுளிமுதலிய அறுவகைக் குற்றங்கள் பஞ்சமாபாதகம், உபபாதகம் முதலிய பாபங்களையும் தீர்ப்பதுமன்றி எழுவகைப் பிறவிநோயையும் நீக்கவல்லது.

இன்னும் அந்த விநாயகதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அதன் கரையில் பிதிரர்களை உத்தேசித்து இரணியசிராத்தம், ஆம சிரார்த்தம், அன்ன சிரார்த்தங்களைச்செய்து பிண்டமும் போட்டால் அவனுக்குப் பிதிரர் சாபங்கள் நீங்கிச் சந்தான பாக்கியமுண்டாம்.

அவ்விநாயக மூர்த்தியின் ஆலயத்திற்கு அடுத்த தென்மேற் பக்கத்தில் ஆதியில் சூரியதேவனால் ஆக்கப்பட்ட தீர்த்தம் ஒன்றுளது, அது மகா புண்ணியதீர்த்தம். அதன் பெயர் சூரிய புட்கரணியாம். அதில் ஒருக்கால் மூழ்கினவர்களுடைய பஞ்சமா பாதகங்களையும் நீக்கத்தக்கது அதன் பெயரைச் சொன்னால் இந்திரபதவியும் அதைக்கண்டால் பிரமபதவியும் அதைத்தொட்டால் விஷ்ணுபதவியும் அதில் மூழ்கினால் சிவபதவியும் கிடைக்கும் அத்தீர்த்தத்திற்றோய்ந்து வருகிறகாற்று ஒருவன் சரீரத்தில் பட்டால் அவன் சுவர்க்க லோகத்திலுள்ள ஆகாயகங்கையில் படிந்து வருகிற காற்று தன்சரீரத்தில் படியும்படிக் கற்பகச்சோலை நிழலில் வாழ்வுறுவான் அத்தீர்த்தத்தின் ஓர்துளியை உட்கொண்டவன் தேவருலகின்கணுள்ள அமுதத்தை உண்பான்.

அவ்வாலயத்திற்கு மேற்கில் இலக்ஷுமி தீர்த்தமென்று ஒன்றுளது அதில் ஆடினோர் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் அடைவார் என்பது திண்ணம் ஆதலால் அதன் மகிமையைச் சொல்லவல்லார் யாவர்.

தீர்த்தவிசேடப் படலம்

முற்றிற்று.

தலவிசேடப் படலம்.

எங்கும் நிறைந்து பிரணவசொரூபியாய் விளங்குகின்ற விநாயக மூர்த்தியை ஆதியில் சூரியதேவன் பூசிக்கும்பொருட்டு எத்தலங்களினும் (லவணபுரம்) உப்பூர் என்னும் இத்தலமே உத்தமோத்தமமாகிய க்ஷேத்திரமென்று தேர்ந்து அங்கு வந்து விநாயகப்பெருமானைப் பூசித்துப் பேறுபெற்றானானால் அத்தல

மகிமையைச் சொல்லவும் வேண்டுமோ? அவ்வெய்யிலுகந்த விநாயக மூர்த்தியைப் பரிசுத்தமான மனத்தோடு ஒருவன் அன்புடன் தியானித்து ஒருநாள் அந்த க்ஷேத்திரத்தில் தலவாசஞ் செய்வானாகில் தனது ஆயுள்பரியந்தம ஸ்ரீகாசி க்ஷேத்திரத்தில் வாசஞ்செய்த பலனை அடைவான் இன்னும் அத்தலத்தில் ஒருஏழைக்கு ஒரு பிடி அன்னங்கொடுத்தவன் பிரயாகையில் பத்துலக்ஷம் பேருக்கு அன்னதானஞ்செய்த பலனை அடைவான் இன்னும் அத்தலத்தில் ஒரு ஏழைக்கு ஒருகாசாகிலும் கொடுத்தவன் மற்றைத் தலங்களில் சோடசமகாதானங்களைப் பற்றில்லாத சந்நியாசிகள் கையில் தானஞ்செய்த பலனை அடைவான் அத்தலத்தில் ஒரு பூர்வபக்ஷ சதுர்த்தி விரதத்தை அநுட்டித்தவன் மற்றைத்தலங்களில் அநேக மகாவிரதங்களைச்செய்து பெறும் பயனை அடைவான் அந்த விநாயகமூர்த்திக்குப் பூசனைக்குரிய தூபக்கால், தீபக்கால், குடங்கள், கலசங்கள், வட்டில், மணி, முதலியவைகளைச் செய்து வைப்போரும் பேரிகை முதலிய வாத்தியக்கருவிகளை யியற்றி வைப்போரும் இந்திர பதவியை அடைவார்கள். இன்னும் அவ்விநாயக மூர்த்திக்கு ஆகு, இடபம், யானை, குதிரை, மயில், தேர், முதலிய வாகனங்களைச் செய்து வைப்போர் பின் ஒருக்காலும் மாதா கருப்பத்திலுறாமல் விநாயகலோகபதவியை அடைவார்கள்.

நித்தியம், நைமித்தியம், வைசேடியம், முதலிய பூசனையையும் திருவிழாச்சிறப்பு முதலியவைகளையும் விதிப்படிச் செய்விப்போரும் திருப்பணிகள் செய்விப்போரும் அஷ்ட ஐசுவரியங்களுடன் ஏக சக்கிராதிபதியாய் உலகையாண்டு மறுமையில் முத்தியின்பத்தை யடைவார்கள்.

தலவிசேடப் படலம்

முற்றிற்று.

முனிவர் பூசவணப் படலம்.

இந்தப் பிரகாரம் சூதபுராணிகர் சௌநகாதி முனிவர்களுக்கு (உப்பூர் என்னும்) லவணபுர க்ஷேத்திர வெயிலுகந்த விநாயகமூர்த்தியினது மான்மியங்கள் முழுதும் சந்தேகந்தெளியச் சொல்லியருளினர். அந்த மான்மியங்களை மிகுந்த பத்தியுடன் கேட்ட அந்த முனிவர்களெல்லோரும் ஆநந்த பரிதராய்ச் சூத முனிவருடைய பாதங்களில்வீழ்ந்து நமஸ்கரித்துச் சுவாமிகளே அடியேங்கள் அந்த மகாஸ்தலமாகிய லவணபுரத்தை யடைந்து

ஆதபேச்சா விநாயக மூர்த்தியைத் தெரிசித்துப் பூசிக்க மிக்க ஆசை கொண்டவர்களா யிருக்கின்றோம் விடை தந்தருள்க வென்று பிரார்த்தித்தனர்.

சூதமுனிவரும் அவ்வேண்டுகோளுக்கிணங்கித் தாமும் அம்முனிவர்களைக் கூட்டிக்கொண்டு நைமிசாரணியத்தை நீங்கித்தென்றிசையை நோக்கிச்சென்று பலதேசங்களையுங் கடந்து பாண்டிய தேசத்தில் மகோததியாகிய கீழ்கடற் கரையிலுள்ள வன்னிவன க்ஷேத்திரமாகிய லவணபுரம் என்னும் உப்பூரை யடைந்து ஆதபேச்சா விநாயகர் என்னும் வெயிலுகந்த விநாயக மூர்த்தியினது ஆலயத்தைத்தெரிசித்து வணங்கிப் பூசிக்கும்பொருட்டுச் சன்னிதியிலுள்ள மகோததியாகிய விநாயக தீர்த்தத்தில் விதிப்படி முதவில் மூழ்கிப் பின்பு அவ்வாலயத்துக்கு மேற்கிலுள்ள சூரிய புட்கரணியில் சங்கற்ப மூலமாய் ஸ்நானஞ்செய்து விபூதி ருத்திராக்ஷம் தரித்து அநுஷ்டானங்கள் முடித்துக்கொண்டு சவுனகாதி முனிவர்களுடன் அவ்வாலயத்தினுள் புகுந்து பூசாதிரவியங்களைக் கொண்டு வேதமந்திரங்களால் வெயிலுகந்த விநாயகமூர்த்திக்கு அபிஷேகங்கள் செய்து புஷ்பங்களாலும் ஆடையாபரணங்களாலும் அலங்கரித்து வன்னி பத்திரத்தாலும் அறுகினாலும் மந்தார மலர்களாலும் தாமரைமுதலிய மலர்களாலும் சகஸ்திர நாமங்களை உச்சரித்து அருச்சனை செய்து தூப தீபாராதனை செய்து மோதகம் லட்டுகம் அபூபம் பாயசம் சித்திரான்னம் முதலான நைவேதனங்கள் செய்து சோடசோபசாரங்களுஞ் செய்து தேங்காயுடைத்து நாவல் விளாமுப்பழங்களையும் நிவேதித்துக் கற்பூர நீராஞ்சனஞ்செய்து பிரதக்ஷிணஞ் செய்து அஷ்டாங்க நமஸ்காரங்கள் செய்து அம்முனிவர்கள் தனித்தனி வெயிலுகந்த விநாயக மூர்த்தியைப் பல்முறை துதிசெய்து பேரானந்தக் கூத்தாடி மீட்டும் நமஸ்கரித்தார்கள்.

இவ்வண்ணம் பூசனை முடிந்ததும் அந்தச் சூதமுனிவர் முதலிய முனிவர்களெல்லோரும் வெயிலுகந்த விநாயக மூர்த்தியின் திருவருளுடன் விடையும் பெற்றுப் பெருமகிழ்ச்சி கொண்டு அந்தத்தலத்தினின்று புறப்பட்டு நைமிசாரணியத்தை மீட்டும் அடைந்து வாழ்ந்திருந்தனர்.

முனிவர் பூசனைப் படலம்

முற்றிற்று.

68489

உப்பூர்ப் புராண வசனம்

முற்றிற்று.